APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

நெடுமாறன்

C. V. நாராயண அய்யர், M.A., L.T.,

Assistant Professor of History, Presidency College, Madras.

...ண்டிப் பிள்ளை கம்பெனி,

...க்கேணி, சென்னை.

நெடுமாறன்

நெடுமாறன்

C. V. நாராயண அய்யர், M.A., L.T.,
Assistant Professor of History, Presidency College, Madras.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, சென்னை.

 [விலை அணா 7

PREFACE

A few words by way of a prefatory note appear to be necessary. In the first place, I have to caution my readers against regarding this book as history. My material is historical in character but I have utilised it for writing only a novel. My aim is to develop the imaginative powers of our school-going children so that they may have vivid pictures of the past. I have attempted to portray the social and religious life of South India in the days of the Saiva saints, **Appar** and **Sambandar** and have 'spun yarns' so that the picture might be clear and pleasing. Yet, I have done no violence to history by uttering untruths. I have, some times, boldly taken some possible views and made them appear as well-established facts of history. If by so doing, I have made the picture interesting to children, I shall rest content, and willingly take the condemnation of history critics.

Another smaller matter may also be mentioned by way of a sort of explanation. This book is, in truth, a condensation from one almost thrice its size. It was condensed because I felt that our school children should not be overburdened with reading matter. But I have a lurking fear that this book may happen to be read by some 'grown-ups.' If that takes place, they may have a feeling that some of the important topics have been too summarily treated. My reply to them is that the book is primarily intended for the use of the young.

C. V. NARAYANA IYER

உள்ளுறை

நெடுமாறன்

அத்தியாயம் 1

மங்கையர்க் கரசியின் சிறப்பு

குடகு மலையில் உற்பத்தியாகி மலைவளங்களைக் கவர்ந்து சோழநாட்டிற் பரந்து பாய்ந்து அவ்வளங்களை அங்குத் தங்கச்செய்து அந்நாட்டின் பெருமையை மேம்படுத்துவது நாவலர் போற்றும் காவிரியாறு. பொன்னி என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த அப்பேராறு தன்னிற் படிவார்க்குப் பாவம் நீக்கிப் புண்ணியம் அருளுதலுமன்றி அந்நாட்டில் எங்கும் பல் கால்களாய்ப் பரந்து பாய்ந்து நாட்டின் செழுமையையும் செல்வ நிலையையும் மேம்படுத்துகின்றது. அதனால் அந்நாட்டிற்குப் 'பொன்னி நாடு' என்றும், 'காவிரி நாடு' என்றும், 'நீர் நாடு' என்றும் பெயர் உண்டாயிற்று.

இத்தகைய சிறப்புப் பொருந்திய சோழநாட்டைச் சற்றேறக்குறைய ஆயிரத்தறுநூறு ஆண்டுகளுக்கு முன் கோச்செங்கணார் என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவர் கல்வி, யறிவு, ஒழுக்கங்களிற் சிறந்தவர். பெருவலி படைத்த அரசர்களுள் அவரும் ஒருவராகக் கருதப்பட்டார். சேர நாட்டரசனான சேரமான் கணைக்காலிரும்பொறை என்னும்

அரசனைப் போரில் வென்று சிறைப்படுத்தியவரும் அவரே. பாண்டிய அரசனும் அவரால் வெல்லப் பட்டவனே யாவன். குறுநில மன்னர்களும் வேளிர்களும் அவர் ஆட்சியின்கீழ் அடங்கி யிருந் தனர். கோச்செங்கணுர் அறநெறி பிறழாது இன் பரசு நடத்திவந்தார். ஆலயங்கள் பலவும், கிராமங் கள் பலவும் அவரால் உண்டாக்கப்பட்டுப் பொலிந்து விளங்கின. அவ்வரசர் தில்லைவாழ் அந்தணர்களுக்கு இருப்பிடங்க ளமைத்துதவினுர். அன்றியும், அவர் குடிகளுக்கு நன்மை புரிதலிலேயே கண்ணுங் கருத்து மாயிருந்து சலியாது நலம் பல புரிந்து வந்தார். அவரது நற்பெருஞ் செய்கைகளினுல் அவர் பேரும் புகழும் எங்கும் பரவின. குடிகள் அவரைத் தெய்வ மென்றே கொண்டாடினர். வைணவர்களும் சைவர் களும் அவரைப் புகழ்ந்து போற்றினர். அதனுலன் ரே கோச்செங்கணுரின் பெயர் 'நாலாயிர திவ்ய ப்ரபந்தத்திலும்,' 'தேவாரத்திலும்' காணக்கிடக்கின் றது! அவர் சைவ நெறிபற்றி ஒழுகிச் சிவனடியார் களைப் பேணிவந்தமையால் சைவர் அவ்வரசரை அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கொண்டாடுகின்றனர். திருத்தொண்டத்தொகை பாடியருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "தென்ன வனாய் உலகாண்ட செங்கணுற்கும் அடியேன்" என்று சிறப்பித்துக் கூறுவாரானுர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அரசர் சிவபெரு மான் திருவடி நிழலை அடைந்தபிறகு சோழநாடு சிறிது சிறிதாகச் சீர்கேடுற்றது. பின் வந்த சோழ

அரசர்கள் வலியற்றவர்களாயும், தீச்செயல் புரியும் தன்மை வாய்ந்தவர்களாயும் இருந்தனர். நாட்டில், நீர்வளமும் நிலவளமும் குறைந்ததால் வறுமை மிகுந்து குடிகளை வருத்திற்று. குடிகளுக்குள் ஒற்றுமை நீங்கவே எங்கும் சண்டை சச்சரவுகள் மலிந்தன. குடிகளுள் சிலர் அந்நாட்டைவிட்டுச் சென்று பிறநாடுகளை யடைந்து ஐயமேற்றுக் காலங்களித்தனர். சிலர் மலைகளையும் காடுகளையும் தமக்கு உறைவிடமாகக் கொண்டனர். அரசர்களுக்கு உறுதி கூறும் அமைச்சர்களும் அந்நாட்டைவிட் டகன்றனர். கோச்செங்கணார் இறந்த முப்பது நாற்பது வருஷங்களுக்குள் சோழநாட்டில் வசித்துக்கொண்டிருந்த பெரியோர்கள் அந்நாட்டை விட்டு அகன்றனர். நாட்டில் எங்கும் அறங்குன்றி மறம் விஞ்சியது. அந்நிலையில் அக்காலத்தில் அரசர்களுக்கு உதவியாயிருந்தவர்களோ பொய்ம்மொழி புகல்வோரும், புறங்கூறித் திரிவோரும், தம் நலமே கருதுவோரும், புண்ணிய பாவங்களுக்கு அஞ்சாதவர்களுமாக இருந்தனர். அத்தகையார் துணைகொண்டு அரசு புரியும் மன்னர்களும் மதிமயங்கி அறம் மறந்த சிந்தையராய் ஆட்சி புரிவராயினர். ஆகவே நாடு அத்தகைய அரசர்களையும் அவர்கள் துணைவர்களையும் வெறுத்தது. சோழநாட்டின் நிலைமை யறிந்த மற்றைய நாட்டரசர்களும், குறுநில மன்னர்களும் அதுவே தருணமென் றெண்ணி அந்நாட்டின் மீது படையெடுத்து வந்து பற்பல ஊர்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே சோழநாட்டின் வலிகுன்றியது.

களந்தை என்னும் ஊரை ஆண்டுவந்த களப்பாளர் குலத்திலே தோன்றிய குறுநில மன்னரான ஒருவர் வலிமிகப் படைத்தவராய் மூவேந்தரையும் படையோடு சென்று பற்பல விடங்களில் போரிற் கலக்கி வெற்றிகொண்டு சோழநாட்டைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கினர். அக்குறுநிலமன்னர் தில்லையிலே முடி சூட்டப் பெற்றார். போர்க்களத்திலே அவர் பகைவர்களைக் கூற்றுவனைப்போல வென்று கொன்றதால் எல்லோரும் அவரைக் கூற்றுவன் என்றே அழைத்தனர். அவர் நல்லொழுக்கமுடையவர். நற்குணங்களும், மேன்மையும் தெய்வபக்தியும் அவரிடம் நிலைபெற்றிருந்தன. அவர் சோழ நாட்டைச் செவ்விய நெறியில் அரசு புரிவராய்க் குடிகளுக்கு நலம் பல விளைத்து ஆண்டு வந்தார். அவர் சைவ சமயத்தைக் கைக்கொண்டு நெறிபிறழாது இறைவனுக்குத் தொண்டுபுரிந்து வந்ததால் அவரைச் சைவர்கள் கூற்றுவ நாயனார் எனப் பெயரிட்டுப் புகழ்ந்து கொண்டாடினர்.

கூற்றுவ நாயனார் சோழ நாட்டைக் கைப்பற்றியதும்; கோச்செங்கணார் வழியில் வந்த ஒரு சோழன் நாடிழந்து மறைவிடந் தேடி ஒளிந்து வாழ வேண்டியதாயிற்று. அச்சோழன் சிறிது காலம் பெரும்பாளூர்த் தலைவனால் காப்பாற்றப்பட்டான். கூற்றுவனார் அதனை அறிந்து அங்குத் துரத்தி வரவே சோழன் அங்கிருந்து துறையூருக்கு ஓடிச் சென்றான். பின் அவன் பச்சை மலையை அடைந்து அங்கிருந்த மலைவாசிகளின் உதவியால் ஒரு மலைச்

சரிவிலே தன் வாழ்நாளை அமைதியாய்க் கழிக்க லானுன். அங்நிலையில் அவன் மனைவியும் அவனை அடைந்தாள். அவர்கள் தமக்குக் கிடைப்பனவற்றைக் கொண்டு ஒருவரும் அறியாதபடி வாழ்ந்து வரும் நாளில் அவர்களுக்கு மக்கள் நால்வர் பிறந்தனர். சோழன் மனைவியுடனும் மக்களுடனும் மலைச் சரிவிலே வனசரர்களின் துணைகொண்டு வாழ்ந்து வந்தான்.

அந்நால்வரும் வளர்பிறை யொப்ப நாளும் வளர்ந்து சிங்கக் குருளைகளைப்போல் சிறந்து விளங்கினர். அவர்களுள் ஒருவன் சேரநாட்டரசனிடம் சேனைத்தலைவனுக அமர்ந்தான். ஒருவன் வடநாட்டிற்குச் சென்று ஸமுத்திரகுப்தன் என்னும் ஆரிய மன்னனிடம் ஒரு தொழில் பெற்றுக் காலங் கழிப்பதானுன். மூன்றுவான் பாண்டிநாடு அடைந்து அங்கு ஒரு வேலையில் அமர்ந்தான். நான்காவான் பச்சை மலையிலேயே இருந்து கொண்டு தன்னுற்றலால் ஒரு குறுநில மன்னனுக விளங்கினுன். அன்னவன் வழித்தோன்றலாகிய செங்கதிர்ச்சென்னி என்பவனே பச்சைமலையை விடுத்துத் தனக்கு உரிமையுள்ள சோழ நாட்டை அடைய ஆவல் கொண்டனன். அவன் காலத்தில் சோழநாட்டைக் காடவர் குலத்தவரான பல்லவர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களுள் தலைசிறந்து விளங்கிய மகேந்திரவர்மன் என்பான் சளுக்கிய குல அரசனுை இரண்டாவது புலகேசி என்பவனேடு போர் புரிய எண்ணினன். அதனை அறிந்த செங்கதிர்ச்சென்னி தான் கொண்டிருந்த விழைவினை

முடித்துக்கொள்வதற்கு அதுவே தக்க காலம் என்று கருதிப் புலகேசியை அடைந்து ஒரு சேனைத்தலைவன் பதவியைப் பெற்றுக்கொண்டான். மகேந்திரவர்மனுக்கும், புலகேசிக்கும் கி. பி. அறுநூற்றிருபதாம் ஆண்டு போர் நடந்தது. அப்போரில் செங்கதிர்ச் சென்னி தன் ஆற்றலைப் பல்வகையானும் தோற்றுவித்தான். எனினும் அன்னவன் வீரச் செயல்கள் பயன்படா தொழிந்தன. மகேந்திரனுக்குச் சிறந்த போரிற் பழகிய வீரர்கள் அடங்கிய திரண்ட படையிருந்தமையாலும், புலகேசியின் படைவீரர்கள் தம்முள் ஒற்றுமை யின்றிச் சிதறினமையாலும் மகேந்திரன் புலகேசியை வெருண்டோடச் செய்தனன். ஆதலின் செங்கதிர்ச் சென்னி மீண்டும் பச்சைமலைக்கே வரவேண்டியதாயிற்று.

செங்கதிர்ச்சென்னி கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் பாழாயின. அவன், புலகேசி அடைந்த தோல்வியைத் தன்னுடையதாகவே கருதினுன். அதனுல் அவன் மனம் பல்பெருங் கவலைகள் தோன்றுதற்கு இடமாயிற்று. கவலைகளும் துன்பங்களும் மனத்தில் ஒருங்கெழவே அவன் ஊண் உறக்கமின்றி மிகவும் வருந்தலானுன். அவன் படுந் துயர் கண்ட அவன் மனைவி அங்கயற்கண்ணி என்பாள் அருகிற் சென்று, ''இன்னுயிர்த் தலைவ, தாங்கள் படுந் துயரைக் கண்டு நான் மிகவும் வருந்துகின்றேன். போரில் தோல்வியுற்றது புலகேசியே அன்றித் தாங்கள் அன்று. ஆனுல் தாங்கள் கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் பாழாயின என்பதை நான் அறிவேன். உலகில் அரசர்கள்

போரில் வெல்வதும் தோற்பதும் இயல்பே. மாறு பட்டு எழும் இருவேந்தருள் யாரேனும் ஒருவர் தோல்வியுறினன்றே மற்றவர்க்கு வெற்றி யென்பது உண்டாகும்? நம் குலத்தார் ஏழு தலைமுறைகளாகப் பராதீனப்பட்டிருக்கும் நாட்டை மீட்கக் கருதின ரோ? இல்லை; இல்லை. அதனால் நாம் மீட்க முயலு வது தவறாமோ? அதுவே நமது கடமையாதலின் அக்காரியத்தில் எவ்வளவு இடையூறுகள் வரினும் மனஞ்சலியாது முயற்சி செய்வதே நலமாகும். நாம் நாடிழந்தவராகவே வாழவேண்டும் என்று இறைவன் திருவுளமிருக்குமானால் நம்மாற் செய்யவல்லது என்? ஸ்ரீ கண்ணபிரானே தம் பக்கல் இருந்தும் பாண்ட வர்கள் நாடிழந்து கான் புகுந்து காலங் கழிக்க வில்லையா? இறுதியில் தாமிழந்த நாட்டை அவர்கள் கைப்பற்ற வில்லையா?

‘ ஆகுவ தாகுங் காலத் தாவது மழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்.’

—கம்பர்.

என்று பெரியோர் கூறுவாராதலின் மனத்தில் கொண்ட கவலையை ஆற்றி யிருத்தலே சிறந்ததா கும்” என மொழிந்தனள்.

அங்கயற்கண்ணி கூறியனவற்றைக் கேட்ட செங்கதிர்ச்சென்னி, “இன்மொழிப் பாவாய், அந்தோ! கரிகாற் பெருவளத்தானும், நெடுமுடிக் கிள்ளியும், இளஞ்சேட் சென்னியும், திகழொளி ஞாயிற்றுச் சோழனும், கோச்செங்கணானும் ஆண்டு

வந்த நாட்டையோ களப்பாளரும், காடவரும் ஆளு வது? என் முன்னோன இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளி இருந்தவிடத்திலோ சமணர்களைக் கொண் டாடித் திரிகின்ற மகேந்திரன் இருப்பது? அந்தோ! நான் உயிருடனிருந்தும் என்ன பயன்! என் குடி களை நான் புரக்க முடியவில்லையே! காபாலியர் முதலா யினோர் தோன்றித் தூய சைவ நெறியைத் தூர்க்கின் றனரே! என் தாதை கோச்செங்கணர் இறைவ னுக்கு எடுத்த ஆலயங்கள் எழுபத்தைந்துள் பல பழுதாயினவே! ஆ! தெய்வமே! என் செய்வேன்! நாடு இவ்வாறு சீர்கெடுவதைக் கண்டும் நான் எங்ங னம் பொறுத்திருப்பேன்,'' என்று கூறிக்கொண்டே நிலத்தில் விழுந்து புரண்டான்.

மன்னன் நிலையைக் கண்ணுற்ற தேவி மனமிக வருந்தி, "மன்னவ, தாங்கள் இவ்வாறு வருந்து வது தகாது. இவ்வாறு வருந்திக்கொண்டிருந் தால் முடிவில் உயிருக்கே ஏதமுண்டாகும். பின் நான் எப்படி உயிர் வாழ்வேன்? மற்றும் என் வயிற்றிலிருக்கும் சிசுவிற்கும் ஏதமே விளையும். பின் சோழர் மரபே அழிந்து விடுமன்றோ?'' எனக் கூறுதலும் மன்னன் ஒருவாறு தெளிந்து எழுந்து ஆசனத்தில் அமர்ந்தான். அப்பொழுது ஒரு முனிவர் மன்னனைக் காணக் கருதி அவ்விடத்திற்கு வந்தார்.

முனிவர் வருகையைக் கண்ணுற்ற செங்கதிர்ச் சென்னியும், அவன்மனைவியும் அவரை அன்புடன்வர வரவேற்றனர். அவருக்கு அவர்கள் பற்பல உபசாரங் களைப்புரிந்து வணங்கிமுன்நிற்ப,முனிவர் சென்னியின்

முகக் குறியால் அவன் பெருந் துன்பத்திற்குள்ளா யிருந்ததை அறிந்துகொண்டு அவனைக் காரணம் வினவினர். செங்கதிர்ச்சென்னி தன்னை வருத்தும் துன்பத்தைக் காரணத்துடன் கூறினன். அதனைக் கேட்ட முனிவர், "மன்னவ, உனக்கொன்று சொல்கின்றேன், கேள். இவ்வுலகில் யாவும் நிலையற்றன. தம் எண்ணப்படி கருமங்களை முற்ற நடத்துபவர் எவரேனும் உளரென்று நீ நினைக்கின்றனையோ? இவ்வுலகில் நிகழ்வன யாவும் இறைவன் அருளால் நிகழ்வன என்று அறிக. 'அவன் அன்றி ஓரணுவும் அசையாது' என்னும் ஆன்றோர் மொழியை அறிந்துள்ளாய் அன்றோ? ஆதலின் நாம் செய்யும் ஒவ்வொரு கருமமும் அவன் அருள்வாய்க்கப் பெறின் இனிது முடியும்; அல்லையேல் முடியாது. ஒரு கருமத்தைச் செய்ய வேண்டியது கடமையே. அதன் பயனைக் கருதுவது மடமையாகும். ஆதலால் நீ உற்ற தோல்வியைக் கருதி இங்ஙனம் வருந்துதல் அழகன்று. முந்நூறு, முந்நூற்றைம்பது வருடங்களுக்குமுன் தமிழ் நாடு சிறப்புற்றிருந்தது. அவ்வாறு சிறப்புறச் செய்தோர்கள் உன் முன்னோர்களே யாவர். பாண்டிய நாட்டில் தமிழ்ச் சங்கம் தழைத்தோங்கிச் சீரிய கல்வியிலும், செவ்விய நெறியிலும் பயின்ற பெரியோர் பலரைத் தோற்றுவித்துத் தமிழகத்திற்குப் பெருநன்மை விளைத்து வந்தது. கபிலனும், பரணனும், ஒளவையும் மற்றுமுள்ள பொய்யில் புலவர்களும் தமிழகத்திற்குச் செய்த நன்மைகள் அளவிடற்பாலனவோ? அவற்றைத் தமிழுலகம் நன்கறியும். பின்

நாடு சீர்கேடுற்றது. களப்பாளர் இப்பொழுது நாட்டைக் கைப்பற்றி யாண்டு வருகின்றனர். காடவர்களைப்பற்றி நீ சிறிதும் கவலைகொள்ளாதே. இனி விரைவில் நாடு நன்னிலை எய்தும். இப்பொழுது சமணனாயிருக்கும் மகேந்திரனும் சைவனாக மாறிவிடுவான். அவனைச் சமண நெறியினின்றும் திருப்புதற்கு வேளாள குலத்தில் ஒருவர் தோன்றியுள்ளார். அவர் சமணநூல்களை நன்கு ஓதி யுணர்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் அவனிடமே வாழ்ந்து வருகிறார். விரைவில் அவரும் சைவராகி அவனையும் சைவநெறி பற்றி ஒழுகும்படி செய்வார். அக்காலத்தில் பாண்டிய நாட்டில் ஒரு புதுமை தோன்றும். அங்குச் சைவ சமயத்தைப் பரவச்செய்ய உனக்குப் பிறக்கும் மகளே காரணமாவாள்,'' என்று கூறி முனிவர் மன்னனிடம் விடைபெற்றுத் தம் இருப்பிடஞ் சார்ந்தனர்.

அங்கயற்கண்ணி தன் கணவனைத் தேற்றத் தேறிச் செங்கதிர்ச் சென்னி இனிது வாழ்ந்திருந்தனன்.

முனிவர் செங்கதிர்ச் சென்னியிடம் வந்திருந்த காலத்தில் அவன் மனைவி அங்கயற்கண்ணி கருவுற்றிருந்தாள். முறையே பத்துத் திங்களும் கழிந்தன. இறைவன் அருளால் ஒரு நல்ல நாளில் 'பான் மதியுவரி யீன்றுலென' அங்கயற்கண்ணி ஒரு பெண் மகவைப் பெற்றாள். செங்கதிர்ச்சென்னி மன மிக மகிழ்ந்தான். அக்குழந்தைக்குச் செய்ய வேண்டுவனவற்றைச் சிறக்கச் செய்து தாய் தந்தையர்

மகிழ்ந்தனர். அவர்கள் அக் குழந்தைக்கு மங்கையர்க்கரசி எனப் பெயரிட்டு மிக்க அன்போடு வளர்த்து வந்தனர். சகுந்தலை கண்ணுவ முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்து வந்ததைப்போல, அவ்வரச குடும்பத்தில் பிறந்த குழந்தையும், நாடிழந்து கான் புகுந்து ஆசிரமவாசிகளாக விருந்த தாய் தந்தையரிடம் வளர்பிறை யொப்ப வளர்ந்து வந்தது.

———

அத்தியாயம் 2

மகேந்திர வர்மன்

மூத்தி நகரங்கள் ஏழில் ஒன்ருகிய காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் ஆண்டு வந்தான். அவன் பெருவலி படைத்தவன். கல்வி கேள்விகளில் அவன் சிறந்து விளங்கினுன். அவன் சபையில் பல துறை நூல்களிலும் செவ்வனே பயின்று அறிவு சான்ற பெரியோர்கள் குழுமி இருந்தனர். அவன் அவர்களுடன் பல் பெரு விஷயங்களைப்பற்றி வாதித்துத் தன் காலத்தை இன்பமாகக் கழிப்பான். கல்வி கேள்விகளால் மேதக்க சான்ருேர் வரின் அவரவர்கள் ஆற்றலுக் கேற்பப் பரிசளித்து மகிழ்வான். இத் தகைய சிறப்புப் பொருந்திய அரசன் சமண சமயத்தைத் தழுவி யிருந்தது பல்லோர்க்கும் பெருந் துயரத்தை விளைத்தது.

ஒருநாள் அரசன் சமண முனிவர்கள் சிலரோடு பேசிக்கொண் டிருக்கையில் ஓரந்தணன் அரசனைக் காண வந்தனன். அவ்வந்தணன் நான்கு வேதங்களையும் ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றமுமறக் கற்றுணர்ந்தவன்; ஒழுக்கநெறியிற் சிறிதும் பிறழாது செவ்வனே தன் வாழ்க்கையை நடத்திவந்தவன். அந்தணன் வந்ததும் அரசன் அவனுக்குத் தக்கதோர் ஆசனமளித்துப் பற்பல விஷயங்களைப் பற்றி யுரையாடலானுன்.

மகேந்திரன்—மறைவல்லுநரே, நான் கேட்கும் வினக்களுக்குத் தக்க விடையளிப்பீராஞல் நீர் நல்ல சன்மானம் பெற்று இன்புற்றுச் செல்வீர்.

அந்தணன்—மன்னவ, யான் அறிந்தவரையில் தக்க விடையளிக்கின்றேன்.

மகேந்திரன்—உங்களால் கொண்டாடப்படும் வேதத்தை இயற்றியவர் யார்?

அந்தணன்—வேதம் ஒருவரால் இயற்றப் பட்டதன்று. அது அநாதி. அதனைக் கண்டறிந்த சில பெரியோர்கள் காப்பாற்றி வந்தார்கள். அதனை நான்கு கூருகப் பகுத்தவர் வியாசர். அதனுல் அவருக்கு வேத வியாசர் என்னும் பெயர் உண்டாயிற்று.

மகேந்திரன்—உலகத்தில் எல்லோராலும் கண்டு அநுபவிக்கப்படுவதே மெய். அதுவன்றி ஒரு சிலரால் ஒன்று அநுபவிக்கப்பட்டு அதனை அவர்கள் மெய் என்று கூறுவராயின் அதனைப் பிறர் எவ்வாறு நம்பக்கூடும்? அப்படி அதனை அநுபவித்து உண்மையென்று கொள்வதற்கும் அந்தணர்களன்றிப் பிறர் வேதத்தை யோதி யுணரற்பாலரல்லர் என்று கூறி விட்டீர்கள். அவ்வாருயின் நீங்கள் கூறும் வேதத்தை உண்மை என்று எப்படித் துணிவது?

அந்தணன்—வேந்தே, அநுபவமின்றி ஒன்றையும் நம்புவதில்லை என்றும், பிறர் அநுபவித்துக் கூறுவதைத் தாமும் அநுபவித்தாலன்றி மெய்யென மதிப்பது மில்லை என்றுங் கூறுபவர் சிறந்த அறிவுடையவர்க

ளாவார்களோ? எவற்றையும் தாம்தாமே அநுபவித்து அறிவது என்பது இயல்வதாமோ? தவமுனிவர்கள் தாம் அநுபவித்ததை உலக நன்மையைக் கருதிக் கூறியுள்ளார்கள்.

மகேந்தரன்—அத்தகைய தவமுனிவர்களை இக் காலத்தில் ஏன் காண முடியவில்லை?

அந்தணன்—அவர்களை நாம் காணாவிட்டால் இல்லையென்றுவது, அவர்களைப் பிறர் காண முடியா தென்றுவது எவ்வாறு கூறலாம்?

மகேந்திரன்—இப்பொழுது நாம் மழையில்லாது வருந்துகின்றோம். வருண ஜபம் செய்தால் மழை வரும் என்று கூறுகிறீர்கள். வருண ஜபம் செய்யும் பொழுதெல்லாம் மழை வருகிறதா?

அந்தணன்—நாம் முறைப்படி உண்மையான பக்தியோடு வருண ஜபம் செய்தால் நிச்சயமாக மழை வரும்.

மகேந்திரன்—நன்று! நன்று! மழை பெய்தால் வருண ஜபத்தினால் வந்ததென்பீர். மழை வரா விட்டால் பக்தி யில்லை என்பீர் போலும்! மழைக்குக் காரணம் பக்தியா? மந்திரமா? ஆலோசித்துக் கூறும்.

அந்தணன்—பக்தியோடு சேர்ந்த மந்திரம்.

மகேந்திரன்—நல்லது, இனி ஒரு சமயம் மழை வேண்டும்போது உங்களுக்குத் தெரிவிக்கின்றோம். நீங்கள் வருண ஜபம் செய்து மழை வந்தால் உங்களுக்குப் பொருள் அளிப்போம், இல்லாவிட்டால்

உங்களைச் சிறைச்சாலையில் அடைப்போம். என்ன கூறுகின்றீர்?

அந்தணன்—இக்கட்டளையை ஒருவரும் தாங்க முடியாது.

மகேந்திரன்—நன்று. இதோ அமர்ந்திருக்கும் சமண முனிவர்கள் நிறைந்த கல்வி யுடையவர்கள். இவர்களுள்பலர் எதிர்கால விஷயங்களையும் உணர்ந்து சொல்லவல்லவர்கள். இவர்களை இக்காலத்து முனிவர்கள் என்று கூறுவதில் குற்றமில்லை. வைத்திய நூல்களைப் பயின்று தேர்ச்சி பெற்றவர்களும் இங்கு இருக்கின்றார்கள். இவர்கள் கூறுவதில் ஒரு பிழையும் காணமுடியாது. (எதிரில் இருந்த ஒரு சமண முனிவரைப் பார்த்து) ஐயா, பவழ நந்தி, இவ் வேதியரின் கைரேகையைப் பார்த்து இவருக்கு எத்தனை மக்கள் உள்ளார்களென்றும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் கூறும்.

பவழ நந்தி வேதியரின் கைரேகையைப் பார்த்து விட்டு, "மன்னவ, இவ்வந்தணருக்கு இரண்டு புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருக்கிறார்கள். புதல்வர்களிருவரில் ஒருவன் வேத மோதுகின்றான்; மற்றவன் கவிதை எழுதுகின்றான். புதல்வியின் மணங் குறித்துத் தந்தை வரன் தேடித்திரிகிறார். இவர் இங்குப் பணம் பெறவே வந்திருக்கின்றார்" என்றான்.

மகேந்திரன்—அந்தணரே, இவை உண்மை தாமே.

அந்தணன்—ஆம்; அரசே, உண்மைதான்.

மகேந்திரன்—அந்தண, இதனால் வேதத்தின் சிறுமையும், சமண நூற்களின் பெருமையும் விளங்குகின்றதன்றோ? இனி வேதத்தைக் கூறிக் கொண்டு இங்கு வரவேண்டாம். நீர் மந்திரியிடம் சென்று உம்முடைய மகள் மணத்திற்கு வேண்டிய திரவியத்தைப் பெற்றுச் செல்லும்.

அந்தணன் அரசன் கட்டளையை ஏற்று அவ்விடம் விட்டகன்றான். அரசன் அமைச்சர்களில் ஒருவனைப் பார்த்து, "மந்திரி, இவ் வந்தணன் என்ன செய்வான்? அறுதொழிலாளர்களான அந்தணர்களுக்கு யாகம் முதலியனவற்றை யெல்லாம் நிறுத்திவிட்டமையினால் இரக்கின்ற ஒரு தொழிலே உளதாயிற்று. நான் சமண மதத்தைத் தழுவியதனால் அறிவு நூல்களில் புலமைசான்ற அந்தணர்கள் வருந்துகின்றார்கள். என் தந்தை சிம்ஹவிஷ்ணு திருவொற்றியூருக்கு அருகிலே சதுர்வேதிமங்கலம் என்ற கிராமத்தைத் தம் பெயரால் தானமாக அளித்துள்ளார். குடந்தைக்கு அடுத்த கஞ்சனூரையும் அவர் தானமாக அளித்துள்ளார். இவற்றையெல்லாம் அறிந்த என் குடிகள் என்னை நாஸ்திகனென்று கருதுவது தவறாமோ? ஆயினும் என் கொள்கையை யான் எங்ஙனம் மாற்றுவேன். இதுநிற்க, தலைகொழுத்த புலகேசி மீண்டும் ஒருமுறை படையெடுப்பான் என்பது திண்ணம். செங்கதிர்ச் சென்னியும் அவனுக்கு உதவியாய் இருப்பான்—ஆ—அந்தச் சோழன் எங்கே மறைந்தான்? அன்றைய தினத்தில்

அவன் போர்க்களத்தில் மிருகேந்திரனைப்போல் கர்ஜனை செய்துகொண்டு வேலினைக் கையில் ஏந்திய வனாய் யாவரும் கண்டு அஞ்சி நடுங்கும் வண்ணம் பாய்ந்து திரிந்ததைப் பார்த்தீரன்றோ! அவன் என் மீது பாய்ந்து வந்த பொழுது என்னைக் கொன்று விடுவானோ வென்று யான் அஞ்சியது உண்மை. அவன் என் அண்மையில் வந்திருப்பினும் அவன் உயிரைப் போக்க நான் மனந் துணியேன். என்னே அவன் வீரத்தன்மை! அவன் இப்பொழுது எங்கிருக்கின்றான் என்பது யாருக்காவது தெரியுமா?'' என்றான்.

மந்திரி—அவன் இனிப் போருக்கு வாரானென்று நான் கேள்விப்பட்டேன்.

அரசன்—அதன் காரணம் யாது?

மந்திரி—அது விளங்க வில்லை.

அரசன்—உணர்வேன். அவன் அச்சத்தினால் போருக்கு வாராதிருக்கத் துணிந்தவன் அல்லன் என்பதை நான் உறுதியாய்க் கூறுவேன். ஆலோசிக்குமிடத்துப் புலகேசிக்கும், அவனுக்கும் ஏதோ சச்சரவு இருக்கவேண்டும். எந்த வீரன்தான் புலகேசியின் கீழ் அமைந்து வேலை செய்வான். பெருமிதங் கொண்ட புலகேசிக்கோ தன் பெருமையை எடுத்துக் கூறுவது இயல்பாயிற்று. நன்று; இருவரும் பிரிந்து விட்டார்கள். பாண்டிய நாட்டைப்பற்றி ஏதேனும் தெரியுமோ?

மந்திரி—அரசே, பாண்டியனுக்குத் தீராத நோய் தொடர்ந்து வருத்துவதால் அரசாட்சியைச் சேந்தன்

இடமே ஒப்படைத்துவிட்டான். பேருக்கு மட்டும் அவனிசூளாமணி அரசனாக விருக்கிறான். அவன் குமாரனும் தக்க பருவம் அடைந்துள்ளான்.

அரசன்—அவ்வாறு? நாம் மிகவும ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். அவனிசூளாமணியைப்போல் சேந்தன் போருக்கு அஞ்சுபவன் அல்லன். நாம் புலகேசியுடன் போருக்குச் சென்றிருந்த காலத்தில், சேந்தன் சேரனை யெதிர்க்கச் சென்றிருந்தான். அல்லையேல் அவனும் சென்னிக்குத் துணையாகச் சேர்ந்திருப்பான். அவ்வாறு யிருப்பின் நம் படை முழுவதும், 'பாயும் புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில்; அதுவே வலிமுன்னர் வைப்பாரம் இல்,' என்பதற்கு இலக்காய் விடுமென்றோ? இனி எவ்வாறு யினும் நம் படைகள் யாவும் எப்பொழுது போர் நேரிடினும் அதற்குச் செல்லத் தயாராய் இருக்க வேண்டும்.

அமைச்சன் அரசனுடைய அனுமதி பெற்று அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு வெளிச் சென்றான். பின், அரசன் சோதிடத்தில் வல்லுநனை ஒரு வித்துவானை அருகில் இருத்திக்கொண்டு மற்றை யோருக்கு விடை கொடுத்தனுப்பினன்.

அரசன்—குமணநந்தி சமண நூல்களில் சிறந்த நம்பிக்கை உமக்கு உண்டு அல்லவா? சமண நூல்களை நம்பி நான் பல காரியங்களைச் செய்துள்ளேன். எனினும் ஒவ்வொரு சமயங்களில் எனக்குச் சந்தேகம் உதிப்பதுண்டு. உங்கள் சாத்திரங்கள் எக்காலத்தும் உண்மையையே கூறுவனவன்றோ?

குமணநந்தி—அரசே, அதற்கென்ன சந்தேகம்? நீர் எத்தகைய கேள்வி கேட்பினும் அதற்குத் தக்க விடை யளிக்கின்றேன்.

அரசன்—நல்லது; இப்பொழுது செங்கதிர்ச் சென்னி இன்னவிடத்தில் இருக்கின்றா னென்று உம்மால் கூற முடியுமோ?

குமணநந்தி சற்று ஆலோசித்து, "அரசே நீர் அவனைப்பற்றி அறிந்துகொள்வதனால் அடையும் பயன் ஒன்றும் இல்லை. அவன் உம்மைப் பகைவனாகவே கருதியுள்ளான்," என்றான்.

அரசன்—இவ்விசாரம் என்னைச் சேர்ந்தது. உம்மை நான் மந்திரித் தொழிலில் அமைத்து ஆராய்ந்து கூறும்படி வேண்டும்போது இவ்வாறு கூறலாம். இங்கு நீர் சோதிடம் சொல்ல வந்திருக்கிறீர் என்பதை நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

குமணநந்தி—அரசே, நீர் கூறுவது உண்மை. ஆனால் ஒருவன் சோதிடம் கேட்கும்பொழுது, அச்சோதிடனிடத்தில் சிறந்த பற்றும், நம்பிக்கையும் வைத்து, அவன் சொற்படி நடந்துகொள்வானேயானால் சோதிடம் பலிக்கும் என்றும், அத்தகையானுக்கே சோதிடம் சொல்ல வேண்டும் என்றும் எங்கள் நூல்களில் விதந்தோதப்பட்டுள்ளன. என் வார்த்தையில் உமக்கு நம்பிக்கை உளதோ என்று ஆராய்ந்து அறியும்பொருட்டே நான் அவ்வாறு பேசினேன். உமக்கு என் வார்த்தையில் மதிப்பில்லை

என்பதை அறிந்தேன். ஆதலால் யான் சோதிடம் கூறுவதாற் பயனில்லை.

அரசன்—குமணநந்தி,நின் செருக்குடை மொழிகள் என் செவியிற் பட்டன. சற்று முன்பாக வந்த அந்தணன் பக்தியைப்பற்றிக் கூறியதை நீரும் கேட்டிருந்தீர் அல்லவோ? அதுபோலவே நீர் நம்பிக்கையைப் பற்றியும் மதிப்பைப் பற்றியும், என்னிடம் பேசுகின்றீர். உமக்குச் செங்கதிர்ச் சென்னியின் மறைவிடம் அறிந்துகொள்ளும் சக்தி இல்லை என்பது புலனாயிற்று. இதுவே உமது நூலின் பெருமை! எனக்கும் சமணமதத்தில் பற்று குறைந்து கொண்டே வருகின்றது. நல்லது, நீர் ஏகலாம்.

குமணநந்தி அரசன் வெகுண்டு கூறியவற்றைச் செவி மடுத்து வாய் பேசாது வணங்கிச் சென்றனன். பின்னர்,அரசன் கீழ்வருமாறு எண்ணுவானானன்:—

"வேதம் அநாதி என்பதும், அமானுஷ்யம் என்பதும் உண்மையே. அல்லையேல் அத்தகைய மேன்மையான நூலை யாரால் இயற்றக் கூடும்! வேதத்தின் பெருமையோ அளவிட்டறிதற்கு அரிதாகும். வேதத்தின் உட்பொருளை உண்மையில் ஓர்ந்துணராது அந்தணர்களும் அரசர்களும் யாகங்களைச் செய்து வந்தனர். அதனால் ஜீவவதை பெருகிற்று என்பது உண்மை. சாக்கிய முனிவரின் மதம் இந்நாட்டிற் பரவிய பின் ஜீவஹிம்சை நின்றது என்பது உண்மை.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று,'—குறள்.

என்ற பெரியார் வாக்கும் சிறப்புடைய தன்றோ! சமணர்கள் ஜீவவதை செய்வதில்லை. சீத்தலைச்சாத்தனாரும், மணிமேகலை என்னும் நூலில் வேதத்தை மறுத்துக் குற்றங் கூறவில்லை. இக்காலத்துச் சமணர்களோ வேதத்தைப் பொய் என்று நிந்திக்கின்றனர். இச் சமணர்களின் நடை, உடை, பாவனையும், பிறவும், எனக்கு வெறுப்பைத் தருகின்றன. உண்மையை நாடி யறிவது என் கடமையே யாகும்,'' என்று அரசன் எண்ணிக்கொண்டே அரண்மனைக்குச் சென்றான்.

அத்தியாயம் 3.

குறுநில மன்னர் கூட்டம்

சேலம் ஜில்லாவிலுள்ள ஆத்தூர் தாலுக்காவிற்கும், திரிசிராப்பள்ளி ஜில்லா முசிரி தாலுக்காவிற்கும், இடையே பச்சைமலை என்பதொன் றுண்டு. அது பல மலைத்தொடர்களால் சங்கிலிக் கோவைபோல் இணைக்கப்பட்டுப் பல பெயர்களுடன் விளங்குகின்றது. அம் மலைத்தொடரின் சரிவுகளில் பற்பல ஊர்கள் உள. அம்மலை பல யாறுகளுக்கு உற்பத்தி ஸ்தானமாக விளங்குகிறது. ஆத்தூர்த் தாலுக்காவிலுள்ள நாகூர்க்காடுகள், முசிரித் தாலுக்காவிலுள்ள மான்மலைக்கும் அரசடிக் காட்டிற்கும் இடையே கிடக்கின்றன. சற்றேறக்குறைய இருபது மைல் சதுர அளவுள்ள பரந்த இக்காடுகளுக்கும், மலைக்கும் பண்டைக்காலத்திலேயே வெவ்வேறு பெயர்கள் அமைந்திருந்தன. விண்முட்டும் மான்மலைச் சிகரத்திலிருந்து அநேக அருவிகள், தோன்றி மானாறு என்னும் பேராற்றிற் கலந்து தென்முகமா யோடி, சோபனபுரம் என்னும் நகரைச் செழுமைப் படுத்தி ஐயாற்றில் கலக்கின்றது. இந்த யாறு தோன்றுமிடத்து மான் மலையைச் சார்ந்த ஒரு குன்றம் இருக்கின்றது. அது வான்கரடு என்று புகழ்பெற்றது. அதற்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் ஒரு சிற்றூர் இருந்தது. செங்கதிர்ச்சென்னி இருந்த இடம் அதுவே. அவ்வூர் வளவன் துர்க்கம் என்னும் சிறப்புப் பெயரையும் கொண்டதாகும். மூந்நூற்

றைம்பது வருஷங்களுக்கு முன் செங்கதிர்ச் சென்னியின் முன்னோர்கள் அங்கு வசித்து வந்தமையால் அவ்வூர் அப்பெயர் பெற்றது. தெற்கு நோக்கி ஓடும் ஆற்றின் கரையோரமாய்ச் சென்றால் அல்லாமல் ஒருவரும் வளவன் துர்க்கத்தை யடைய முடியாது. மற்ற மூன்று புறங்களிலும் மான்மலை சூழ்ந்து அமைந்துள்ளது. சோழன் மறைந்து வசித்த கால முதல் வான் கரட்டிலே வனசரர்களை நிறுத்திக் காவல் செய்து வந்தனன். அவ்விடத்திலிருந்து மானாற்றின் கரையோரமாய்க் கீழ்பால் கிளிமூக்குக் கரடு என்ற குன்றம் ஒன்று உண்டு. அவ்விடத்தும் மலைவாசிகள் காவலாக வைக்கப்பட் டிருந்தனர். இவ்விரு குன்றங்களுக்கு மிடையே அமைந்திருந்த பெருவெளியில் சில வனசரர்கள் ஆடு மேய்ப்பவர்களைப் போல எப்பொழுதும் திரிந்து காவல்செய்து வந்தனர். பகைவன் ஒருவன் தப்பி அவ்வழி வந்துவிட்டால் அவன் உயிர்கொடு போகான் என்பது திண்ணம். ஆதலினாற்றான் சோழன் அவ்வளவன் துர்க்கத்தே மறைந்திருந்து ஒருவரு மறியாதபடி காலம் கழித்து வந்தான்.

வளவன் துர்க்கத்தில் சோழ மன்னர்கள் மறைந்து எவ்வாறு காலங்கழித்து வந்தனரென்பதை இனி ஆராய்வோம். அவர்கள் அங்குக் குறுநில மன்னரைப்போல் வாழ்ந்து வந்தனர். நீண்ட காலமாக அவர்கள் சோழநாட்டை யாண்டு வந்தமையினால் நாகரிகமுடையவர்களாயும், அரசியற்றும் முறையில் சிறந்தவர்களாயும் விளங்கினர். மற்ற குறுநில மன்னர்கள் சோழர்களிடத்தில் மிக்க அன்புடன் ஒழுகி

வந்தனர். பல்லவர்கள் சோழநாட்டைக் கைப்பற்றி ஆண்டு வருவதைக் குறுநில மன்னர்க ளறிந்து வருந் தினர்களேனும் சோழர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய அவர்களால் இயலவில்லை. குறுநில மன்னர்க ளுக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண் டிருந்ததே முக்கிய காரணமாகும். பல்லவர்கள் அந் நிலையிலிருந்த குறுநில மன்னர்களின் நிலங்களைக் கவர்ந்துகொள்ள முயன்றதும் உண்டு. ஆனால் செங் கதிர்ச்சென்னியின் பாட்டனை கூர்வேல்வளவன் மான்மலையில் எப்பொழுதும் திரிந்துகொண்டிருந்த முனிவர்களுள் ஒருவரை அழைத்துச் சென்று ஒவ் வொரு நிலமன்னனையும் கண்டு தந்திரமாய்த் தனித் தனியே உடன்படிக்கை செய்துகொண்டான். அவ் வுடன்படிக்கையில் ஒவ்வொரு குருநில மன்னனும் சோழனைத் தலைவனாய் ஏற்று அவன் சொற்படி நடக்க வேண்டுமென்றும், அவர்கட்குள் ஏற்படும் வழக்கு களைச் சோழனே தீர்க்கவேண்டுமென்றும், குறுநில மன்னர்களின் நலத்தையே கருதும் சோழனுக்குக் கைம்மாறாகக் கப்பங் கட்டிவருதல் வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தன. அதுமுதல் வளவன் துர்க்கத்தி லிருந்த சோழர்களுக்குப் பெருமையும், வலிமையும், மிகுவதாயின.

செங்கதிர்ச் சென்னி காலத்தில் குறுநில மன்னர் கள், அவனை அன்புடன் நேசித்துவந்தனர். அவர்கள் இயற்கையில் மிகக் கொடியவர்களாயினும் அவன் சொல் தவறி நடவாமல் இருந்தார்கள். செங்கதிர்ச் சென்னியின் உயர்ந்த குணங்களே அவர்களை வசீ

கரித்தன. அவன் புத்தம் புதுச் சட்டங்களை ஏற்படுத்தி, அவர்களை நாகரிகப்படுத்தி வந்தான். ஆண்டில் இருமுறை குறிப்பிட்ட தினத்தில் அவர்கள் வளவன் துர்க்கத்தை யடைந்து தத்தம் குறைகளைக் கூறித் தீர்த்துக்கொண்டு செல்வார்கள். அவ்வாறு அவர்கள் வந்து பிரிந்து போகும் சமயங்களில் செங்கதிர்ச்சென்னி விருந்தளிப்பது வழக்கம். மலைச்சரிவுகளிலே கூட்டங் கூட்டமாய்த் திரிந்துகொண்டிருக்கும் மான்களைக் கொன்று கறி சமைத்து அவர்களுக்கு உணவளிப்பதோடு, நிறைந்த கள்ளையும் அளிப்பான். அவர்கள், மான்கறி யுண்டு கட்குடித்து அவனைப் புகழ்ந்து பேசி மகிழ்ந்து செல்வார்கள்.

இத்தகைய கூட்டமொன்று ஒருசமயம் நடைபெற்றது. ஏறக்குறைய முப்பது குறுநில மன்னர்கள் வளவன் துர்க்கத்துச் செங்கதிர்ச் சென்னியின் விருந்தினர்களாக வந்திருந்தனர். அவர்களுள், கானற்பாடிக் காத்தான், கறுப்பங்காட்டு வேலன், செங்காட்டுத் திம்மன், பழமலைக் கட்டி, சிறுகுன்றத்துச் சீயன், புளியஞ்சோலைத் தித்தன், அரசடி ஆந்தை என்பவர்களே வலிமை பெற்றோர் ஆவர். இவர்கள் வருகையைப் புலிக்கண் அஞ்சி என்பான் செங்கதிர்ச் சென்னியிடம் தெரிவித்தான். அவ்வஞ்சி என்ற வீரன் சோழனுக்கு உயிர்த்தோழனாய் அமைந்திருந்தான். செங்கதிர்ச் சென்னி கௌணிய முனிவரோடு குறுநிலமன்னர் கூட்டத்திற்கு வந்தான். சோழனைக் கண்ட குறுநிலமன்னர்கள் எழுந்து வணங்கி நின்றனர்; சோழன் அவர்களை அமரச் செய்து

தக்கதோர் ஆசனத்தில், அம்முனிவருக்கு அருகே அமர்ந்தான்.

செங்கதிர்ச் சென்னி — மன்னர்களே, இரண்டு தலைமுறைகளாக நீங்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாய் இருப்பதைக் காணுந்தோறும் என் மனம் மகிழ்கின்றது. சென்ற கூட்டத்தில் தீர்மானித்தபடி பழமலைக்கட்டி கவர்ந்த ஆநிறைகளை யெல்லாம் சீயனுக்குக் கொடுத்தாய்விட்டதா ?

கட்டி—சிலவற்றைக் கொடுத்தேன்; சில இறந்து போயின.

சீயன்—வேந்தே, என் மாடுகளைத் தராவிட்டால் அவற்றின் விலையையேனும் அவன் கொடுத்திட வேண்டாவோ? அவற்றை அவன் செம்மையாய்ப் பாதுகாத்திடாமையினாலன்றோ அவைகள் இறந்தன? பழமலையில் புல் இல்லையா? நீர் இல்லையா? அவன் மாடுகள் ஏன் இறக்க வில்லை? என் மாடுகள் மட்டும் இறப்பானேன்?

சென்னி—எவ்வளவு மாடுகள் இறந்தன?

கட்டி—ஐந்நூறு மாடுகள் இறந்தன.

சென்னி—அவற்றிற்கு எவ்வளவு விலை கேட்கிறாய்?

சீயன்—இருநூற்று ஐம்பது மூட்டை நெல் கேட்கிறேன்.

சென்னி—கட்டி, அவைகள் இறக்கக் காரணமென்ன ?

கட்டி—என் மலையின் ஒரு சார்பில் ஒரு வகை நோய் கண்டது. அவன் மாடுகள் கட்டி யிருந்த இடத்தில் அந்நோய் மிகவும் பரவலாயிற்று. அதனால் அவைகள் இறந்தன.

சென்னி—சீயனே, சிறு குன்றத்தில் இவ்வருடம் எவ்வளவு மாடுகள் இறந்தன ?

சீயன்—இச்சிறு குன்றத்தில் அந்நோய் காண்பது மில்லை ; மாடுகள் இறப்பதுமில்லை.

சென்னி—வேறு எவ்விடத்திலேனும் மாடுகள் இறந்தனவோ ?

காத்தன்—அரசே, இவ் வருடம் சிறு குன்றத்தைத் தவிரப் பிற விடங்களில் இந்நோயால் மாடுகள் மிக இறந்தன. என் பாடியில் முந்நூறு பசுக்கள் மாண்டன.

திம்மன்—என் காட்டிலே இருநூறு போயின.

தித்தன்—என் சோலையிலும் நோய் கண்டது : ஆயினும் அதிகச் சேதம் இல்லை.

சென்னி—சீயனே, இவர்கள் கூறுவனவற்றைக் கேட்டனையோ? நீ ஒருவன்தான் மாட்டு நோயினால் வருந்தாதவன். ஆதலின் நீயும் இந்நஷ்டத்தில் கொஞ்சம் பங்கிட்டுக்கொள்ளவேண்டியது நியாயமே. கட்டி, உன் சொந்த மாடுகளில் எவ்வளவு இறந்தன?

கட்டி—அவ்வளவு அதிக மில்லை.

சென்னி—ஆனால் நீ பாதி அவன் பாதியாக நஷ்டத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். மாடு கொடுக்கின்றாயா ? விலை கொடுக்கின்றாயா ?

கட்டி—நான் இருநூற்றைம்பது மாடுகளைக் கொடுத்து விடுகின்றேன்.

சேன்னி—நல்லது; சீயா, நீ அவற்றைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கின்றாயா?

சீயன்—அரசே, என் மாடுகள் விலையுயர்ந்தவை. அவன் மாடுகள் சிறியவை.

சேன்னி—சீயா, அவற்றைக் கூறுவதால் யாது பயன்? அவன் நஷ்டமடைந்துள்ளான். உன் ஊரிலோ மாடுகள் நன்றாய் வளர்கின்றன. புலி பிடிப்பதுமில்லை. ஆதலால், நீ அவற்றை ஏற்றுக்கொள்.—சரி, வேறு யாதேனுங் குறை உளதோ?

வேலன்—அரசே, என் காட்டிலுள்ள காளியம்மனுக்குத் திருவிழா நடத்தவேண்டி இருந்தமையால் பணம் பெற்று வரும்படி என் ஆளை ஆந்தையிடமும், தித்தனிடமும் அனுப்பினேன். அவர்கள் அவனை ஒரு மரத்திற் கட்டி அடித்தார்கள்.

சேன்னி—தித்தா, அஃது உண்மைதானா?

தித்தன்—அரசே, ஆம்; அவனால் அனுப்பப்பட்டவன் என்னை அவமானம் செய்தான்.

சேன்னி—அவ்வாறாயின் நடந்தவை யெல்லாம் கூறுங்கள்.

ஆந்தை—மன்னவ, அவனால் அனுப்பப்பட்டவன் முதலில் என்னிடம் வந்தான். அவன் என்னைப் பணம் கேட்டபோது, 'நான் பணம்கொடுத்து வேலன் விழா நடத்தவேண்டுமானால் அவன் நிலை தாழ்வா

னதே' என்று பரிகசித்தேன். அவன், என்னை 'வேலன் வெகு விரைவில் ஆந்தைபோல் விழிக்கச் செய்ய வல்லமை யுடையவன்' என்றான். அதனைக் கேட்டதும் தித்தனுக்கும் எனக்கும் கோபம் வந்தது. அதனால் நான் அவனை ஆந்தைபோல் விழிக்க வைத்தேன். இதுவே நடந்த விஷயமாகும்.

சென்னி—தித்தனுக்குக் கோபம் வருவானேன்?

ஆந்தை—அரசே, என் மகள் கிள்ளையைத் தித்தனுக்கு அல்லவோ மணஞ்செய்து வைக்கப் போகின்றேன்.

சென்னி—இக்கதை மிகவும் விந்தையே. வேலன் உங்களிடம் பணம்பெற வந்த விஷயத்தை நீங்கள் சற்றும் ஆராய்ந்து பார்க்க வில்லை. எல்லோர்க்கும் பொதுவானதும் தெய்வ விஷயமானதுமான காரியத்திற்கல்லவோ அவன் உங்களைப் பணம் வேண்டுகிறான்? அவன் தன் சொந்த காரியத்திற்காகக் கேட்கவில்லையே! ஆதலின், ஆந்தை செய்தது குற்றமே? ஆனால், வேலன்மீதும் சிறிதளவு குற்றமுண்டு. அஃதென்னவெனில், இத்தகைய பொது விஷயங்களைக் கூட்டத்தில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இனியேனும் பொது விஷயங்களைக் கூட்டத்தில் எல்லாருக்கும் தெரிவித்துப் பின் அக்கூட்டத்தார் கூறும் முடிவின்படியே நடந்து கொள்ள முயலுங்கள். வேலா, நீ விழா நடத்தியாய் விட்டதா?

வேலன்—பணம் சேராமையினால் விழா நடத்தப்படவில்லை.

சென்னி—உங்களுக் கெல்லாம் விழா நடத்த விருப்ப முண்டா?

எல்லோரும் திருவிழா நடத்தவேண்டும் என்று ஒப்புக்கொள்ளவே சென்னி அவர்களைப் பார்த்து, "அன்பர்களே, இம்மலைநாடுகளுக் கெல்லாம் அக் காளி கோயில் ஒன்றுதான் உள்ளது. அக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் அன்னையான காளிதேவிக்கு எல்லோரும் சேர்ந்தே திருவிழா நடத்த வேண்டும். மக்களின் சமுதாய வாழ்க்கையில் இன்பம் வேண்டுவது அவசியமே. மற்றும், 'குழந்தையும் தெய்வமுங் கொண்டாடும் இடத்திலே,' என்றபடி நாம் தெய்வத் திற்குப் பூசை, திருவிழா முதலியன செய்தால்தான் தெய்வமும் நமக்கு நன்மையைச் செய்யும். ஆதலின், திருவிழாவை வேலன், காத்தன், ஆந்தை, சியன் என்பவர்கள் சேர்ந்து நடத்தவேண்டும். அவர்கள் நமது குலகுருவான கௌணிய முனிவரின் சொற்படி நடந்து திருவிழாவை நடத்த வேண்டும்," என்று கூறி அவர்களுக்கு வழக்கம்போல் செழுமையான விருந்தளித்தான்.

அவர்கள் அனைவரும் விருந்துண்டு களிப்புடன் தத்தம் நாட்டை யடைந்தனர்.

அத்தியாயம் 4

திருநாவுக்கரசரும் மகேந்திரனும்

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில், புகழனுருக்கும் மாதினியாருக்கும் புதல்வராய்த் திலகவதியாரின் தம்பியாய்த் திருநாவுக்கரசர், மருணீக்கியார் எனும் பெயரோடு பிறந்தார். திலகவதியார் மணப் பருவம் எய்தியதும் தாய் தந்தையர் அவரைக் கலிப் பகையார் என்பவருக்கு மனம் செய்து கொடுப்பதாய்த் தீர்மானித்தனர். ஆனுல், மணவினை நிகழு முன்னர்க் கலிப்பகையார் சோழவரசன் கட்டளைப் படி, படையுடன் போருக்குச் சென்றனர். அவர் போருக்குச் சென்ற சிறிது காலத்திற்குள் புகழனுரும், மாதினியாரும் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர். சுற்றத்தார் தேற்றத் தேறித் திலகவதியாரும், திருநாவுக்கரசரும் வாழ்ந்துவரும் நாட்களில் கலிப் பகையார் போரில்பட்டு வீர சுவர்க்க முற்றனரெனத் திலகவதியார் கேள்விப்பட்டுத் தாமும் உயிர் துறப் பத் துணிந்தனர். அதனை அறிந்த திருநாவுக்கரசர் பன்முறை வேண்டிக்கொள்ளத் திலகவதியாரும் தம்பியார் உளராகவேண்டு மென்னுந் தயவால், உயிர் துறவாது தம்பொருள்களை யெல்லாம் அறத்திற் காக்கித் திருவதிகை வீரட்டத்தானம் என்னும் தலத்தில் இறைபணியில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார்.

திருநாவுக்கரசர் கல்வி கற்று மேம்பாடுற்ற நிலையில் காஞ்சியில் இருந்த பல்லவ அரசனுன மகேந்திர வர்மன் அவரை அழைத்துச்சென்று பெருமைப் படுத்தினுன். திருநாவுக்கரசர் சமணநூல்களை முற்றும் பயின்று அம்மத குருவாகத் தருமசேனர் எனும் பெயரோடு வாழ்ந்துவந்தார். அவ்வாறு தம்பி பிறமதம் புக்கது திலகவதியாருக்கு மிக்க துன்பத்தை விளைத்தது. அதனுல் அம்மையார் இறைவனை வேண்ட, இறைவன் தருமசேனர் வயிற்றில் சூலை நோயை உண்டாக்க அதனுல் வருந்திய தருமசேனர் மணி மந்திர ஔஷதாதிகள் ஒன்றினுலும் அந்நோய் நீங்காமை கண்டு ஓரிரவு சமணசமய வேஷங்களைக் களைந்து தம் தமக்கையாரிடம் சென்றனர். தம்பியின் வருகையைத் திலகவதியார் அன்புடன் ஏற்று மறுநாள் தம்முடன் அவரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைவனைப் பாடும்படி கூற, அவரும் பாட, நோயு மகன்றது. அவர் வாக்கு சிறந்திருந்தமையின் இறைவன் அவருக்குத் 'திருநாவுக்கரசர்' எனும் நாமமும் அளித்தனர். அது முதல் திருநாவுக்கரசர் சைவநெறிபற்றி ஒழுகலாயினர்.

தருமசேனர் சைவசமயம் புகுந்ததைக் கேள்விப் பட்ட சமணர்கள் தங்களுக்கு அவரால் பெருங் கேடுண்டாகு மென்றறிந்து அரசனிடம் சென்று கோள்சொல்லினர். அவற்றைக் கேட்ட அரசன் திருநாவுக்கரசை அழைத்துவரும்படி ஏவலாளரையனுப்பினுன். அவர்கள் சென்று திருநாவுக்கரசரை அழைத்து வந்து அரசன் முன் விட்டனர்.

மகேந்திரன்—ஐயா, நன்று, நன்று நும் செய்கை! இங்கு வந்து சமண நூல்களை எல்லாங் கற்று, இம் மதத்திலுள்ள மந்திரங்களையெல்லாம் அறிந்த பின்னர் இதனைக் கைவிட்டுச் செல்வதுதான் நியாயமோ? எவ்வுண்மைகளைக் கண்டு நீர் சைவ சமயத்தில் புகுந்தீரோ நான் அறிகிலேன்? யாவராலும் தீர்க்க முடியாத சூலைநோய் வந்ததாகப் பாசாங்கு செய்து சென்ற நும் தந்திரம் மிகச் சிறந்ததே!

திருநாவுக்கரசர்—மன்னவ, உம்மை ஏமாற்றிச் செல்லவேண்டும் என்னும் எண்ணம் என் மனத்தில் சிறிதும் இல்லை. எனக்குச் சூலை நோய் வந்தது உண்மை. மணி மந்திர ஔஷதங்களால் அந்நோய் தீராததும் உண்மை. தமக்கையாரால் அழைத்தேகப் பட்டு இறைவன் திருமுன் இறைஞ்சி நிற்றலும் நோய் அகன்றதும் உண்மையே.

மகேந்திரன்—ஆயின், உமக்கு இப்போது எம் மதம் உண்மையானதென்று புலப்படுகிறது?

திருநாவுக்கரசர்—நான் யாது கூறுவேன்? இறைவன் திருவருள் எனக்கு வாய்த்தது நான் சைவ சமயம் புகுந்த பின்னரே யன்றோ? அதனால் என் அனுபவத்திற் கண்ட மதத்தைத்தானே நான் கூற வேண்டும்!

மகேந்திரன்—அவ்வாறானால் வைணவம், சமணம் முதலிய மதங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவன வன்றோ?

திருநாவுக்கரசர்—இக்கேள்விக்கு யான் எங்ஙனம் விடை யளிப்பேன். என் அனுபவத்தால் கண்

டதை யன்றிப் பிறிதொன்றைப்பற்றி நான் எவ்வாறு கூற இயலும்? சாப்பிட்டால் வயிறு நிறையும். எழுதிப் படித்தல் வயிறு நிறையுமோ? உணவை உண்டால்தானே வயிறு நிரம்பும்?

மகேந்திரன்—அப்படியானுல் உம்முடைய மதத்தை 'அனுபவ மதம்' என்று கூறவேண்டுமே யன்றிச் சைவம் என்று எவ்வாறு கூறலாம்?

திருநாவுக்கரசர்—மன்னவ, நீர் அதற்கு எப்பெயரைத் தரினும் எனக்குச் சம்மதமே. நான் என் அனுபவத்தில் இறைவன் திருவருளைக் கண்டேன். இனி, எல்லாம் அவன் செயலே என்பதையும் அறிந்தேன். ஆதலின், 'ஊனத்தை நீக்கி யுலகறிய என்னை யாட்கொண்டவ' னுக்கு, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' யாகும். 'அவன் கடன் அடியேனையும் தாங்குதலே.'

இவ்வாறு கூறக் கேட்ட மகேந்திரன் சீற்றங் கொண்டு சமண முனிவர்களின் துர்ப்போதனையால் திருநாவுக்கரசரைத் தண்டிக்கலானுன். அரசன் அவரை நீற்றறையில் இட்டும், நஞ்சு கலந்த பாலூட்டியும், யானையின் காலிலிடறச் செய்தும் ஒருவாற்றுனும் அவர் இறவாமை கண்டு முடிவில் அவரைக் கல்லோடு பிணித்துக் கடலில் எறியுமாறு கட்டளையிட்டான். திருநாவுக்கரசரோ அரசன் செய்த கொடுந் தண்டனைகளுக் கஞ்சாது இறைவனைத் துதித்து யாவற்றினும் தப்பினுர். கடலில் இடப்பட்ட காலத்துத் திருநாவுக்கரசர் இறைவனைத் துதிக்கத் தன்னைக் கட்டியிருந்த தளைகள் அறுபடவும், கல் தெப்பமாக

மிதக்கவும் தாம் அதன்மீது அமர்ந்து பவக் கடலை நீந்துவார்போல் உவர்க் கடலை நீந்தித் திருப்பாதிரிப் புலியூர்க் கரையில் ஏறினர்.

இவற்றை யெல்லாம் அறிந்த மகேந்திரன் தன் அறியாமைக்கு வருந்தினன். அவனுக்கு வெகு காலமாகச் சமண மதத்தில் இருந்த நம்பிக்கையு மொழிந்தது. திருநாவுக்கரசர் கூறிய யாவும் உண்மை என்று அவனுக்குப் புலப்பட்டது. புலப்படவே, மகேந்திரன் சைவனானன். சமணப் பள்ளிகளைகளை யெல்லாம் அழித்துச் சிவாலயங்கள் பல கட்டினன். வல்லம், மகேந்திரவாடி, தளவனூர், சீயமங்கலம், பல்லாவரம் முதலிய இடங்களில் அவனல் கட்டப்பட்ட ஆலயங்கள் பல இன்றும் காணப்படுகின்றன. அவன் சிறப்பாகத் தன் பெயரால் 'குணபதீச்சரம்' என்னும் ஆலயத்தையும் கட்டுவித்தான். பின் அவன், தன் வாழ்நாள் முழுதும் சைவநெறிபற்றி ஒழுகி இன்புற வாழ்ந்து இறைவனடிமலர் எய்தினன். அவனுக்குப் பின் நரசிம்மவர்மன் அரசனானன்.

———

அத்தியாயம்—5

வளவன் துர்க்கத்து நாடகம்

மானாற்றின் உற்பத்தித் தானத்தில் பல சிறு நதிகள் உற்பத்தியாகின்றன. அவை யாவும் பற்பல பாகங்களில் அருவிகளாயோடிப் பின் மானாற்றில் கலக்கின்றன. ஆதலின், அம்மலைச் சரிவுகளெங்கும் பூந்தோட்டங்கள் அவ்வாற்றின் இரு கரைகளிலும், அருவிகளின் கரைகளிலும் அமைந்திருந்தன. அருவிகளனைத்தும் ஆழ மற்றவை யாதலின் யாவரும் அவற்றைக் கடந்து செல்லல் கூடும். அம்மலைச் சரிவுகளில் காணப்படும் சிறு சிறு குகைகளில் பல விக்கிரஹங்கள் உண்டு. அவ்விடங்களுக்குப் பரதேசிகளும், முனிவர்களும் வந்து செல்வ துண்டு. மருண்ட பார்வையை யுடைய மான்கள் கூட்டங் கூட்டமாய் நிற்பதும், ஓடுவதும், மயில்கள் தோகை விரித்தாடுவதும் பார்ப்பவர் மனத்தையும், கண்களையும் மகிழ்விப்பன வாகும்.

மங்கையர்க்கரசி தன் தோழிமார்களுடன் அவ்வாற்றங் கரைகளிலுள்ள பொழில்களுக்குச் சென்று உலாவி வருவதும் உண்டு. மாலைக் காலங்களில் அங்குக் காணப்படும் இயற்கை யெழில்களை இன்புறக் கண்டு அவள் களிப்பாள். அவள் தோழிமார்களனைவரும் அம்மலைநாட்டு மன்னர்களின் புதல்விகளே யாவர்.

ஒரு சமயம் உலாவச் சென்றிருந்தபோது அவள் தோழிகளை நோக்கி, "நான் ஒரு புதிய விளையாட்டைக்

கண்டுபிடித் திருக்கிறேன். அதனை நாம் இப்பொழுது ஆட வேண்டும்,'' என்றாள். தோழிகள், "அஃது யாது ?'' என்று வினவினர். மங்கையர்க்கரசி, நான் ஆட நினைத்திருப்பது ஒரு நாடகம். அந் நாடகத் தின் கதை மிகச் சிறந்தது. அதன் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்: என்னைத் தாக்ஷாயணி என்று நினைத்துக் கொள்ளுங்கள். என் கணவ ரான சிவபெருமானுக்கும், என் தந்தையான தக்க னுக்கும் விரோதம் உண்டு. என் தகப்பனார் ஒரு யாகம் செய்யப்போகிறார். அதற்கு அவர் என் கணவ னாரை யழைக்கமாட்டார். அந்த யாகத்திற்குத் தேவர்கள் எல்லோரும் வருவார்கள். என் கணவனார் வார்த்தையைத் தடுத்து நானும் யாகத்திற்கு வரு வேன். அப்போது என்னை என் தகப்பனார் அலட்சி யம் செய்வார். நான் அதனைப் பொறுக்கமாட்டா மல் ஓடி ஓமகுண்டத்தில் விழுந்து உயிர் துறப்பேன். அதனை என் கணவனார் அறிந்து வீரபத்திரனை யேவி யாகத்தைக் கலைத்து விடுவார். அவர் என் தகப்ப னாரையும் கொன்றுவிடுவார். பின் அவர் வீராவேசங் கொண்டு யாவரையும் துரத்துவார். அப்பொழுது அனைவரும் அவர் காலில் வீழ அவர் சாந்தமடைவார். நான் பர்வத ராஜனுக்குப் புத்திரியாய் உமை எனும் நாமத்தோடு தோன்றி வளர்வேன். இதுவே கதை. நடிப்பதற்கு இது வெகு நன்றாக விருக்கும்,'' என்றாள்.

தோழிமாரில் ஒருத்தி மங்கையர்க்கரசியை நோக்கி, "பூங்கொம்பே, இதனை எங்கிருந்து கற்

ருய் ?,'' என்று கேட்டாள். அதற்கு மங்கையர்க் கரசி, "என் அருமைத் தோழி, நான் நேற்று இங்கு வந்திருந்த பொழுது காவி உடை தரித்த, பெரியார் ஒருவர் இந்த வழியே சென்றுகொண்டிருந்தார். அவரை நான் ஒரு கதை சொல்லும்படி கேட்டுக் கொண்டேன். அவர் இக்கதையைச் சொன்னார். இதனை நாடகமாக நடித்தால் மிக நன்ருய் இருக்கு மென்று நினைத்தேன். கோதாய், நீதான் என் கணவ னாகிய பரமசிவன் ; முத்து, நீ தக்கன்; வள்ளி, நீ வீரபத்திரன்; சோணை, நீ இந்திரன்; கிள்ளை, நீ சூரி யன் ; நான் தாக்ஷாயணி,'' என்று இவ்வாறு நாடக பாத்திரங்களை நிர்ணயித்துப் பின் அவரவர்களுக் கேற்பப் பனையோலைகளினாலும், இளந் தளிர்களாலும் கான் மலர்களாலும், மாவிலைகளாலும் அவர்களை அலங்கரித்தனள். பின் ஒரு குழியைத் தோண்டி அதில் காந்தட் பூக்களை நிரப்பிச் சுற்றிலும் அனை வரையும் அமரச் செய்து ஓமம் வளர்க்கும் பாவனை யைச் செய்தாள். நாடகம் ஆரம்பத்தில் விநோத மாக விருந்தமையால் யாவரும் களிகொண்டனர். தக்கன் தாட்சாயணியை அவமதிக்கும் சந்தர்ப்பம் வந்தது. தக்கன் வேஷம் தரித்த முத்து தாக்ஷா யணியை அவமதிக்க மங்கையர்க்கரசி பேராவேசம் கொண்டு சினம் மிக்கவளாய் அக்குழியில் குதித்து நடுவில் நின்றுகொண்டு பல்லை 'நறு நறு' வெனக் கடித்து மருண்ட பார்வையுடன் யாவரையும் சுற்றிப் பார்த்தாள். அதுவரையில் விளையாட்டென நம்பிய தோழிமார்கள், அப்பொழுது இருந்த அவள் தோ

றத்தைக் கண்டு அஞ்சினர்கள். தாக்ஷாயணி பரம சிவன் பராக்கிரமத்தையெல்லாம், பலவாறு எடுத்துக் கூறித் தோற்றப் பொலிவால் தோழியர்களுக்கு அச்சத்தை யுண்டாக்கி அக்குழியில் விழுந்து புரண்டாள். அவள் நிலையைக் கண்ட தோழிகள் அவளைத் தூக்கிச் சென்று ஆற்றங்கரையை யடைந்தனர்.

அங்கு அவர்கள் அவள் முகத்தைக் கழுவியும், அவளை நீர் பருகும்படி செய்வித்தும் அவள் மூர்ச்சையைத் தெளிவித்தனர். பின், அனைவரும் வேஷங்களைக் களைந்தனர். பொழுது பட்டது கண்டு அவரவர்கள் வீட்டுக்குச் சென்றனர்.

அத்தியாயம்—6

மங்கையர்க் கரசியின் திருமணம்

பாண்டிய நாட்டைச் சேந்தன் அரசாண்டு வந்தான். அவனுக்கு ஒரு குமாரன் உண்டு. அப் புதல்வன் வெகு திறமை வாய்ந்தவன். அவன் எல்லாக் கலைகளிலும் செவ்வனே பயின்றிருந்தான். அவன் நீண்டு வளர்ந்திருந்தமையால் அவனை நெடு மாறன் என்று எல்லாரும் அழைத்து வந்தனர்.

நெடுமாறனுக்குக் குதிரைச் சவாரியில் மிகப் பிரியம் உண்டு. சிற்சில சமயங்களில் அவன் குதிரை மீதேறி நெடுந்தூரம் போய்விடுவதுமுண்டு. குதிரைப் படைக்குத் தலைவனாயிருக்குந் தன்மையையே அவன் எப்பொழுதும் விரும்புவான். போருக்குச் சென்று வெற்றிபெற்று மீளுங் காலங்களில் தன் ஆபணங்களை யெல்லாம் கழற்றிவிட்டு மலைவாசியைப்போல் வேடம் பூண்டு குதிரையின் மீது ஏறி மலைகளிலும் காடுகளி லும் அவன் சுற்றித் திரிவான். அவ்வாறு அவன் செல்லுங் காலங்களில் முனிவர்களைக் கண்டு பல விஷ யங்களைக் கேட்டு அறிவான்.

சேந்தன், சேரனுடன் போர் புரிய நேர்ந்தது. அப்போரில் சேரன் வெகு திறமையுடன் பகைவனை யெதிர்த்தான். பழனிமலையில் இருந்த குறுநிலமன்ன னைக் கொண்டு மதுரைக்குப் படையை அனுப்பினான். பின் அவன் தன்படைகளைத் திரட்டிக்கொண்டு பேரூ ரின் வழியாகச் சென்று கரூவூரில் தங்கினான்.

மகேந்திர பல்லவன் புலகேசியைத் தடுத்து நிற்க வண்டியவன் ஆயினமையால் சேரனோடேனும், பாண்டியனோடேனும் போர்புரிய இயலாதவன் ஆனான். சேந்தன், தன் மகன் நெடுமாறனை ஒரு பெரும் படைத் தலைவனாக்கிக் கருவூர் நோக்கிச் செல்லும்படி பணித்தான். திரண்ட படையுடன் சேந்தன் சேரனை யெதிர்க்கப் பழனிமலையை நோக்கிச் சென்றான்.

நெடுமாறனுடைய போர்த் திறனை அறிந்திடாத சேரன் சேனாதிபதி குதிரைப் படையுடன் எதிர்த்து வரும் நெடுமாறனைத் தாக்கினான். கருவூருக்கு அருகிலேயே இருதிறத்தாருக்கும் போர் நடந்தது. நெடுமாறன் சேரன் படைகளைக் கண்டு சிறிதும் அஞ்சாது தன் படைவீரர்களுக்கு ஊக்க மூட்டி ஆரவாரித்தெழுந்து சேரன்படைகளை இருபுறங்களிலும் வளைத்துக் கடும்போர் புரிந்தான். சேரன் சேனாதிபதியும் அஞ்சா உள்ளத்தனாய் அமராடினனேனும் அவன் படையில் நடந்த குழப்பத்தால் பின் நோக்கி ஓட வேண்டியதாயிற்று. புல்வாயைப் பற்றும் புலிபோல் நெடுமாறனும் பின் தொடர்ந்து திருச்செங்கோட்டு மலை வரையிற் சென்று அவனைப் பற்றிக்கொண்டான். நெடுமாறன் அவன் வாளையும் கைப்பற்றிக்கொண்டு அவனை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். பின், தன் சேனைகளையெல்லாம் மதுரையை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டு ஒரு வழிப்போக்கன் போல் வேடந் தரித்து நெடுமாறன் துறையூரை யடைந்தான், அங்கு ஒருநாள் தங்கிக் களைப்பினை ஆற்றிக்கொண்டு அங்கிருந்தும் புறப்பட்டு மானாற்றின்

கரைவழியே வரும்போது சிலர் ஆடு மாடுகள் மேய்த்துக்கொண்டிருப்பதை நெடுமாறன் கண்டான். அவர்களுள் ஒருவன் நெடுமாறன் வருகையை உற்று நோக்கிக்கொண்டே யிருந்தான். அவனைக் கண்ணுற்ற நெடுமாறன் அணுகி, "இவைகளை இக்காட்டில் மேய்த்துக்கொண்டிருப்பதன் காரண மென்ன ? இன்று கேட்டான். அதற்கு ஆடு மேய்ப்போன், "இவைகளை வளர்த்து நல்ல விலைக்கு விற்று ஜீவனம் செய்வதே என் தொழிலாதலின் நான் மேய்க்கின்றேன்." என்முன். நெடுமாறன் அவன் கூறியதைக் கேட்டு அவனைநோக்கி, "இவற்றை வாங்குபவர்கள் கொன்று தின்பார்கள் அல்லவா? இவைகள் இங்கு எவ்வளவு சந்தோஷமாகவும், சுயேச்சையாகவும் வளர்கின்றன! உனக்கு வேண்டுவது பணம்தானே ? அதனை நான் தருகின்றேன். ஆடுகளை எனக்கு விற்றுவிடுகின்முயா ?" என்று கேட்டான்.

நெடுமாறன் கேள்வி ஆடுமேய்ப்போனுக்கு ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது. ஆனல் அவன் நெடுமாறனை நோக்கி, "ஐயா நான் இதுவரையில் இவ்வாறு சொல்பவர்களைக் கேட்டதும் பார்த்துமில்லை. நீங்கள் யார்? இவ்வாறு இந்த ஆடுகளின்மீது பட்சம் காட்ட வேண்டிய காரண மென்ன?" என்று கேட்டான்.

நெடுமாறன் தன்னை ஒருமுனிவன் என்றும், தான் பிரயாணியைப்போல் உடை தரித்திருப்பது உலகத்தவர்க்குப் பயந்தே என்றும், ஜீவ வதையைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சி செய்வது தன் கடமை என்றும் கூறினன். அதனைக் கேட்ட ஆடுமேய்ப்

போன் தான் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆடு களை அவனிடம் ஒப்புவித்தால் அவற்றை மேய்க்கும் தொழிலை வழிப்போக்கனுகிய அவன் எவ்வாறு நடத்தக் கூடும் என்று சந்தேகங் கொண்டு நெடுமாறனை வினவினன். அதற்கு நெடுமாறன் பணத்தைத் தான் கொடுத்துவிடுவதாயும் ஆடுகளை விற்காமல் வழக்கம்போல் மேய்த்துக்கொண்டு வருவது அவனுடைய கடமையே என்றும் கூறக் கேட்டு ஆடு மேய்ப்போன் களிப்படைந்தான். நெடுமாறன் அவனுக்குச் சிறிது பணம் கொடுத்து அவனுல் பக்கத்திலிருந்த வூரின் வழியையும் தெரிந்துகொண்டு பிரயாணமானுன். ஆடுமேய்ப்பானும் பணத்தைப் பெற்றுக்கொண்டு மனமகிழ்ச்சியோடு தன் தொழிலின் மேற் சென்ருன்.

மாணுற்றின் கரையோரமாய் நெடுந்தூரஞ் சென்ற நெடுமாறன் முடிவில் ஒரு பொழிலை அடைந்தான். அப்பொழிலில் மான்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளைக் கண்ணுற்ற நெடுமாறன் சிறிதுநேரம் அங்கு நின்று அவைகள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது ஒரு மான் அவன் அண்மையில் வந்து நின்றது. அதனைப் பிடிக்க நெடுமாறன் முயன்ருன். அது துள்ளிக் குதித்தோடியது. நெடுமாறன் அதைத் தொடர்ந்து சென்ருன். அது அகப்படுவதுபோல் அண்மையில் தோன்றி, அருகு எய்துதலும், விரைவிற் குதித்தோடி அவனை வெகுதூரம் அழைத்துச் சென்றது. முடிவில் அம் மான் ஒரு தோட்டத்தில் புகுந்து மறைந்ததை நெடு

மாறன் அறிந்து தானும் அத்தோட்டத்திற்குள் புகுந்தான். அத்தோட்டத்திற்குள் மானைத் தேடித் திரிந்து அகப்படாமையினால் சலித்து மல்லிகைப் பந்தரின் ஒருபுறத்தில் நின்றுகொண்டிருந்த நெடுமாறன் செவிகளில், ஒரு பெண் பேசும் வார்த்தைகள் விழுந்தன. நெடுமாறன் உற்றுக் கேட்கலானான்.

"கோதாய், நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்; இக்காட்டில் வளரும் என்னை எவ்வரசகுமாரன் மணப்பான்? தாயோ இறந்தனள். தந்தைக்கோ வயதாகி விட்டது. நான் சோழன் மகளாகப் பிறந்திராவிட்டால் தித்தனோ, திதியனோ, கங்கனோ, கட்டியோ, இவர்களில் யாவரேனும் ஒருவர் என்னை மணம்புரிந்து கொண்டிருப்பரன்றோ? தோழி, நான் மணத்தை விழைந்தேன் அல்லள். ஆனால், யான் மணம்செய்து கொள்ளாவிடில் இச்சோழர்குடி சந்ததியின்மையால் அழிந்துவிடுமே என்று அஞ்சுகின்றேன். நன்று; 'அவனன்றி ஓர் அணுவும் அசையா'தல்லவா? நான் வருந்துவதால் யாது பயன்?" என்று மங்கையர்க்கரசி தன் தோழியுடன் கூறினாள். அதற்குத் தோழி, "சோழர்தம் பூங்கொடியே, நீ இவ்வாறு வருந்துவது தக்கதன்று. உனக்கு வயது பதினைந்துதானாகின்றது. உன் உயர்குணமும், பெருமையும் பொலிந்து விளங்கத்தக்க நாயகன் ஒருவன் வாரானோ? திண்ணமாக வருவான். இங்கு வரும் முனிவர்கள் உன்னைப்பற்றிப் பிற அரசர்களிடம் கூறுதிருப்பரென்றோ எண்ணுகின்றாய்? உன்னைத் தேடிவந்து ஒரு பேரரசன் மணம் செய்துகொண்டு போவான் என்பதை நீயே கொஞ்ச

காலத்திற்குள் அறிவாய். ஆதலின் நீ வருந்துவது தக்கதன்று,'' என்றாள். மங்கையர்க்கரசி தோழியின் கூற்றைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தாள். பின், அவள் தோழியை நோக்கி, "தோழி, நன்று சொன்னாய்! நீ கூறியன யாவும் என்பால் வைத்திருக்கும் அன்பினைத் தோற்றுவிப்பனவே யன்றி மற்றன்று. ஆண்டிகளோ ஆடவரின் அழகினை அறியும் திறனுடையார்? பாண்டிய நாட்டில் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இறந்தபின் அவன் மகன் அரசனானான். அவன் ஒரு நாள் வேட்டையாடச் சென்றான். வெகு தூரத்திலிருந்து ஏதோ ஒன்றைப் பார்த்துக் குறிவைத்து அம்பெய்தான். அவ்வம்பு ஒரு முனிவர்மேல் பாய்ந்தது. அவ்வாபத்து முதுமுறைக் காட்டிலேதான் நடந்தது. இறந்துபோவதற்குமுன் அம் முனிவர் அம்மன்னன் குலம் அழிந்துபோகுமாறு சபித்தார். அதன்படியே பாண்டி நாடும் களப்பாளர் கையகப்பட்டது. வேந்தனும் தற்கொலை புரிந்துகொண் டிறந்தான். அவன் மகனே ஆரிய மன்னனிடம் தொழிலில் அமர்ந்து ஊழியம் செய்யவேண்டியதாயிற்று. அவன் நாளடைவில் தென்மொழியை முற்றிலும் மறந்து வடமொழிப் பயிற்சி மிக்குடையவனானான். அவன் வழியிற்றோன்றிய கடுங்கோன் என்பவன் படை திரட்டி வந்து பாண்டி நாட்டை மீட்டுக் கொண்டான். பின், அவன் மகனும், அவனுக்குப் பின்னாக இப்பொழுது சேந்தனும் அந்நாட்டை யாண்டு வருகின்றான். சேந்தனுக்கு நெடுமாறன் என்று ஒரு புதல்வன் இருக்கின்றானாம். அவனுடைய குணங்களைப்பற்றியும், வீரத் தன்மை

யைப்பற்றியும் முனிவர்கள் புகழ்ந்து பேசுகின்றனர். அவனைப்பற்றிக் கேட்டது முதல் என் மனம் அவனையே நாடி நிற்கின்றது. பாண்டியர், எங்களைப் போல் நாடிழந்தவராகியும் பின் நாட்டினைப் பெற்றார் களல்லவா? நானும் ஓராண்மகனாகப் பிறந்திருந்தால் என் நாட்டையும் மீட்பேனன்றோ? என்று என் மனம் வருந்துகின்றது,'' என்றாள்.

தோழி, "நங்காய், இதென்ன பேதைமை! நீ பெண்ணாய்ப் பிறந்துவிட்டதால் இழந்த நாட்டை மீட்பது அரிதாகுமோ? நீ மணாளனாகக் கொள்ள விரும்பும் நெடுமாறன் உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டு இங்கு ஏன் வரக்கூடாது? அவனையே மணந்து இழந்த நாட்டைக் கைப்பற்றுவது எளிதில் ஆவதாயினும் ஆகும்; அறிவார் யார்? "எல்லாம் ஈசன் செயல்,'' என்றாள். மங்கையர்க்கரசி,"கோதாய், நீ கூறுகிறபடி நான் நினைத்துவிட்டால்தான் என்ன குற்றமோ?'' என்றாள்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண் டிருக்கும் போது நெடுமாறன் திடீரென அங்குத் தோன்றி, "ஒரு குற்றமு மில்லை. ஆனால் அந்தப் பாக்கியம் மாறனுக்கு வாய்க்குமோ என்பதுதான் சந்தேகம்,'' என்றான்.

எவரையும் அங்கு எதிர்பாராத அப்பெண்கள் திடுக்கிட் டெழுந்தார்கள். நெடுமாறனைக்கண்ட மங்கை யர்க்கரசி ஒன்றும் தோன்றாதவளாய்த் தலை குனிந்து நின்றாள். ஆனால் உள்ளத்தில் மட்டும் யாதோ ஒரு வித நெகிழ்ச்சி யுண்டாயிற்று. இயற்கையாக அன்பு

தோன்றவே தலை குனிந்தவளாய் நின்றாளேனும் கடைக்கண்ணால் மாறன் அழகைக்கண்டு மகிழ்ந்தாள். நாணமும் இயல்பாகவே தோன்றிற்று. மங்கையர்க் கரசியின் தோழியருள் ஒருத்தி மாறனை நோக்கி, "ஐயா, நீர் யார்? பெண்கள் தனிமையாய் இருக்கும் இடத்தை நீர் அடைவதற்குக் காரணம் யாது?" எனக் கோபித்தவள்போல் கேட்டாள். மங்கையர்க் கரசி சற்று ஒதுங்கி நின்றாள்.

"பெண்ணே, நான் ஏன் இங்கு வந்தேன் என்பது இப்போது எனக்கே விளங்கவில்லை. நான் கைப் பற்றி விளையாட எண்ணிய மான் இங்கு என்னை அழைத்து வந்தது. இப்பொழிலில் அந்த மானைத் தேடிக் கண்டுகொள்ளும் பொருட்டே நுழைந்தேன். ஆ! என் முன் தோன்றிய மானை என்னவென்று கூறுவேன். அதைக் காணவந்த என் செவியில் உங்கள் பேச்சுக் குரல் கேட்டது. அச் சம்பாஷணையில் என் மூதாதையரின் விருத்தாந்தங்கள் செவ்வனே உணரக் கிடந்தமையால் யானும் மறைந்து விழைந்து கேட்டேன். என் முன்னோர் விருத்தாந்தங்களை நன்கு அறிந்துகொள்ளுமாறு இன்று இறைவன் இன்னருள் இருந்த நிலையை எண்ணி எண்ணி என் மனம் மகிழ்கின்றது. எனக்கு இப்பேருதவி உங்களாலன்றோ கிடைத்தது. ஆதலின் உங்களைக் கண்டு என் நன்றியறிதலைத் தெரிவிக்கவே எண்ணினேன். இம்மங்கையின் சம்பாஷணையையும் கேட்டேன். இனி நான் யார் என்பதைத் தெரிவிப்பதில் குற்றமில்லை என்று நினைத்து உங்கள் முன் தோன்றினேன். நான்தான்

நெடுமாறன்'' என்று நெடுமாறன் இனிய மொழி களால் பதில் கூறினன்.

தன்முன் நிற்பவன் நெடுமாறன் என்று உணர்ந்த தும் மங்கையர்க்கரசி இறைவன் திருவருளை நினைத் துத் துதித்தாள். அவளுக்கு அவனுடன் எவ்வாறு பேசுவதென்பது தெரிய வில்லை. நாணம் ஒருபுறம் அவளை வலித் திழுத்தது; அன்பென்னும் பாசத்தால் தளைபட்டுப் பேசவும் விரும்பினாள்; அவனை இன்னா ரென்று உணர்ந்தபின் மரியாதைக்காகிலும் உபசார மொழிகள் கூறவேண்டுவது அவசியமே யென்றும் அவள் அறிந்து கொண்டாள். அதனால் அவள் "மன்ன, தாம் இங்கே இருப்பது நியாய மன்று. இராப் பொழுதும் நெருங்கிற்று. நாங்களும் செல்ல வேண்டும். தகுதியான இடத்தைத் தாங்கள் அடைவ தற்குள் இருள் மூடிக்கொள்ளுமே. தாங்கள் இன்று என் தந்தையை யடைந்திருக்க வேண்டுகின்றேன்''. தோழி-கோதாய்-இவரை அழைத்துச் சென்று என் தந்தையாருக்கு அறிமுகப்படுத்து'', என்று கூறித் தான் அவ்விடம் விட்டுப் பெயர்ந்தாள்.

நெடுமாறன் அவள் அகல்வதை நிறுத்த வெண்ணி, "நங்காய், என்னை உன் தந்தைபால் நீயே அறிமுகப்படுத்தினால் நலமாகு மன்றோ—மற்று—என்னை—உன் தந்தை—சிறக்க ஏற்றுக்கொள்ளும்படி செய்வது உன்னால்தானே?'' என்று கூறி அவள் முகத்தைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த் தாள். இந்நிலையில் கொய்துவைத்த பூக்கள் நிறைந்த பூக்கூடையை எடுத்து வருவதாகக் கூறித் தோழியும்

அகன்ருள். இருவரும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணமாய் வாளா விருந்தனர். பின் சம்பாஷிக்கத் தொடங்கி அரசர்க்குரிய கந்தருவ முறையில் மணந்து அவர்கள் காதலன் காதலிகளாயினர். கோதை நெடுநேரமாகியும் வாராமையால் மங்கையர்க்கரசி நெடுமாறனுடன் இல்லம் ஏகினள்.

இவர்கட்கு முன்பே சென்ற கோதை என்னும் தோழி செங்கதிர்ச் சென்னியை யடைந்து நெடுமாறன் வருகையைப்பற்றிக் கூறினுள். செங்கதிர்ச் சென்னி மங்கையர்க்கரசியின் உள்ளத்தை உணர்ந்திருந்தானுதலினுலும், அவள் கோதையோடு வாராமையாலும் நெடுமாறனும் அவளுமாகவே வருவார்கள் என்று எண்ணி அவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்தான்.

நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் இல்லமடைந்தனர். சென்னி, நெடுமாறனை அன்புடன் வரவேற்ருன். மங்கையர்க்கரசி நாணித் தந்தையின் பின் ஒரு புறத்தில் நின்றனள். செங்கதிர்ச்சென்னி, "அரசிளங்குமர, 'வளைபயில் கீழ்கடல் நின்று இட, நேர்கழி, மேல் கடல்வான் நுகத்தின் துளைவழி கோத்தது' போலத் தெய்வத் திருவருளால் இங்கு இருவருமாக இன்றுவந்தது எனக்குப் பெருமகிழ்வை யளிக்கின்றது. இனி இவளை உனக்கே அளித்தேன். நீ இங்கு மணவினையை முடித்துக்கொள்ளவேண்டும். ஆதலின் நின் தந்தையை வரவழைக்கவேண்டும். தகுந்த ஆடவனைத் தேடி இவளை மணம் செய்விக்க வேண்டுமென வருந்திக்கொண்டிருந்த என் மனம்

இன்றே கவலையற்றிருக்கின்றது,'' என்று கூறினன். மங்கையர்க்கரசியும் களிப்படைந்தாள்.

நாட்கள் சில கடந்தன. சேந்தன் தன் மைந்தன் மணவினைக்கு வேண்டுவனவற்றோடு வந்து சேர்ந்தான். மணவினைக்குரியன யாவும் சேர்க்கப்பட்டு நாளும் குறிக்கப்பட்டது. குறுநில மன்னர் அனைவர்க்கும் மங்கையர்க்கரசியின் மணவினை தெரிவிக்கப்பட்டது. குறித்த தினத்தில் அவர்களும் நிறைந்த பரிசுகளை எடுத்துக்கொண்டு வளவன் தூர்க்கத்தையடைந்தனர். வளவன் தூர்க்கத்தைத் தேவேந்திர நகரம்போல் அலங்கரித்தனர். எல்லோரும் கண்டு களிக்க நெடுமாறனுக்கும், மங்கையர்க்கரசிக்கும் நல்ல நாளில் மணவினை நடந்தேறியது.

அத்தியாயம் 7

சமணர் பாண்டிய நாட்டில் குடியேறியது

வளவன் தூர்க்கத்தில் நெடுமாறன் ஒரு மாத காலம் தங்கியிருந்து பின், மங்கையர்க்கரசியுடன் தன் நாட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். செங்கதிர்ச் சென்னி, மங்கையர்க்கரசியின் பிரிவால் பெரிதும் வருந்தினன். சகுந்தலை கணவன் வீட்டிற்குச் செல் லப் புறப்பட்டபோது கண்ணுவ முனிவரே அவளைக் கண்டெடுத்து வளர்த்த பாசத்தால் பிரிந்திருக்க வருந்தினர் என்றால் செங்கதிர்ச் சென்னி வருந்தியது ஒரு வியப்போ! ஆயினும் அவன் தன்னை ஒருவாறு தானே தேற்றிக்கொண்டு, தன் செல்விக்கு வேண்டுவனவற்றைச் சிறக்க வளித்து, நல்ல ஆசிகள் கூறி, நெடுமாறனுடன் செல்லுமாறு செய்தான்.

நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் பிரயாணப் பட்டுப் பாண்டியநாட்டு மதுரையம் பதியைச் சில தினங்களில் அடைந்தனர். அவர்கள் வருகையை முன்னமேயே அறிந்த அந்நகர மாந்தர்கள் அம் மதுரை மா நகரைத் தேவலோகம்போல் அலங்கரித் திருந்தனர். குடிகள் அனைவரும் தம்மை அலங்கரித் துக்கொண்டு, மனைவியோடு மகிழ்ந்து வரும் இள வரசனை முன் சென்று வரவேற்றனர். சேந்தனும், நெடுமாறனையும், அவன் மனைவியையும் அன்புடன் வரவேற்றான். யாவரும் போற்ற நெடுமாறனும், மங் கையர்க்கரசியும் அரண்மனை புக்கனர்.

சேந்தன் வயது முதிர்ந்தவனானன். ஆதலால் அரசாட்சியைத் தன் மைந்தனுக்கு அளித்திடவேண்டும் என்னும் அவா அவன் மனத்தில் தோன்றிற்று. சேந்தன் மந்திரிகளை அழைப்பித்துத் தன் கருத்தை வெளியிட்டான். அவர்களும் மன்னன் நினைத்ததே மாண்புடையதென்றனர். அரசன் நெடுமாறனுக்கு முடிசூட்டும் விழாவினை முடிக்க ஏற்பாடுகள் செய்தான்; நாளும் குறிக்கப்பட்டது. முடிசூட்டு வினைக்கு வேண்டுவனவும் சித்தமாயின. சிற்றரசர்களுக்குத் திருமுகம் அனுப்பப்பட்டு அவர்களும் மதுரையை யடைந்தனர். குறித்த நாளும் நெருங்கவே எல்லோரும் கண்டு களித்து மகிழ நெடுமாறன் பாண்டிய நாட்டரசனானன். மங்கையர்க்கரசியும் பட்டமகிஷியாயினள்.

சிலகாலம் சென்றது ; நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் குடிகளுக்குத் தந்தையும் தாயும்போல் விளங்கினர். யாவரும் அவர்களைப் புகழ்ந்து போற்றலாயினர். மைந்தன் யாவரும் மகிழ இன்பவரசு நடத்துவதைக் கண்டு சேந்தன் மன மிக மகிழ்ந்தான். சேந்தன் நாளடைவில் நோய் வாய்ப்பட்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்தான். அதனால் அந்நாட்டுக் குடிகள் மிகவும் வருந்தினர்.

நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் குடிகளுக்கு நன்மை புரிவதிலேயே தம் கருத்தைச் செலுத்தியிருந்தனர். ஒருநாள் மங்கையர்க்கரசி நெடுமாறனை நோக்கி, "இன்னுயிர்க் காதல, நம் நாட்டில் கல்வி

கேள்விகளில் துறைபோகிய புலவர்கள், ஆதரிப் போர் அற்றுப் பெரிதும் வருந்துகின்றனர் என் பதை நான் அறிந்தேன். நம் முன்னோர் இந்நாட்டில் இம்மதுரையினும், பிறவிடங்களினும் சங்கங்கள் நிறுவி அவர்களை ஆதரித்துப் பேரும் புகழும் எய் தினர். ஆதலின் நாமும் அவ்வாறே செய்யவேண்டு மென எண்ணுகின்றேன். கல்வியால் நிறைந்த பெரி யோர்களை அரசர்கள் ஆதரிக்காமல் இருந்தால் ஆத ரிப்பவர் வேறு யாவரே!" என மொழிந்தனள். அதனைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து தன் உயிர்த் தோழரும் கல்வியால் நிறைந்தவருமான முசிரி நீல கண்டனார் என்னும் புலவரை அழைப்பித்தான். அவரும் அரசனைக் காண வந்தனர். அவரை நெடு மாறன் அன்புடன் வரவேற்று ஆசனமளித்து அம ரச் செய்து, "புலவர் பெருமானே, இம் மதுரைமா நகரில் சங்கமொன்று நிறுவி அதன் வாயிலாகக் கல்வியைப் பரவச் செய்வதுமன்றிப் புலவர்களையும் ஆதரிக்க வேண்டுமென என் மனைவி விரும்புகின்ற னள். அதற்கு ஆனவற்றைத் தாமே செய்யவேண் டும்," எனக் கூறினன்.

முசிரி நீலகண்டனார் அரசன் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ந்து, "மன்னவ, நின் எண்ணம் மாண் புடையதே. ஆதரிக்கும் பெருந்தகை ஒருவ னுளன் என்பதைப் புலவர்கள் அறிவாராயின் தேனீக்கள்போல் நெருங்கி வந்தடைவ ரன்றோ? ஒவ்வொருவரும் தம் ஆற்றலைத் தோற்றுவிப்பர். ஒழுக்கமும் நாட்டில் தலைசிறந்து விளங்கும். கலை

மகள் நம் நாட்டில் மகிழ்ந்து வீற்றிருப்பாள். அவர் களை நான் அழைப்பிக்கின்றேன்," என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

சில தினங்களுள் மதுரை மாநகரில் புலவர்கள் மிகுதியாகக் காணப்பட்டார்கள். ஒருநாள் அவர்கள் எல்லோரையும் நீலகண்டனார் அரசனிடம் அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு அரசன் ஏற்ற விருக்கை யளித்து உபசரித்தான். நீலகண்டனார் அப்புலவர் குழாத்திற்குத் தலைவரானார். புலவர்கள் தத்தம் ஆற்றலைத் தோற்றுவித்துப் பரிசில்கள் பெற்றனர். புலவர்களிற் பலர் சமணர்கள்; சிலர் சைவர்; சிலர் வைணவர். அரசன் எல்லோரையும் ஒப்ப நோக்கி அவரவர்கள் கல்வியறிவிற் கேற்றவாறு பரிசளித்தான். வெள்ளைப் பாட்டு நேமிநாதன், கிழற்குன்றத்து நக்க நந்தி, அயிரைக் காட்டுக் கன தன், என்பவர் சமணப் புலவர்கள். அவர்கள் பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை நிறைந்து இன்பூட்டின. அழகர்மலை ஐயன் என்னும் வைணவ அந்தணப் புலவன் குறிஞ்சித் திணையில் கவி ஒன்று பாடிப் பரிசுகள் பெற்றான். சிலர் புராணங்கள் பாடிப் பரிசுகள் பெற்றனர். சிலர் தூதுகளும், தனிக் கவிகளும், சித்திரக் கவிகளும் பாடிப் பரிசு கள் பெற்றனர். திங்கள்தோறும் அவர்கள் புத்தம் புதுச் செய்யுட்கள் யாத்து அரங்கேற்றிப் பரிசுகள் பெறுவாராயினர். இவ்வாறு சங்கம் ஒன்று நிறு வப்பட்டது. மன்னன் எல்லோரையும் ஒப்ப நோக்கும் உயர்குணமுடையவனா யிருத்தலை அறிந்து

அனைவரும் அவனை 'அஸமஸமன்' என்று சிறப்பித்துக் கூறினர்.

நாடெங்கும் தமிழ் மணம் கமழ்ந்தது. நால்வகைப் பாக்களிலும் நூற்கள் யாக்கப்பட்டன. தமிழணங்கு எழில் பெற்று விளங்கினாள் புலவர் குழாங்கள் கூடிக் கூடிப் பெருவிஷயங்களைப்பற்றி ஆராய்ந்தனர். இலக்கண இலக்கியங்கள் மலிந்தன. ஆயினும் புலவர்களிற் பெரும்பாலோர் சமணர்கள்.

நெடுமாறனுக்கு வைத்தியசாலைகள் அமைத்து ஏழைகளுக்கு உண்டாகும் நோய்களை நீக்கி நன்மை புரியவேண்டும் என்னும் பெருவிருப்பம் இருந்தது. அதனை மங்கையர்க்கரசியிடம் தெரிவித்தான். மங்கையர்க்கரசி மன்னன் கருதியதற்கு மாறுபட்டிலளேனும் அக்காலத்தில் சமணர்களே வைத்திய நூன் முறைகளிற் சிறந்து விளங்கி இருந்தமையினால் அவர்கள் நாட்டில் மிகுவார்களாயின் சைவசமயம் அழிந்து விடுமே என்று அஞ்சினாள். அரசன் அவளுக்குத் தக்க உறுதி கூறிய பின் அவளும் அரசன் கருத்திற் கிணங்கினாள். பின் அரசன் தகுந்தவர்களைக் கொண்டு நாடெங்கும் வைத்தியசாலைகள் கட்டுவித்தான். நூன் முறையிலும், வைத்தியத் தொழிலைக் கையாளும் முறையிலும் சிறந்த வைத்தியர்களை அங்கங்கு வைத்திருந்தான். அவ்வாறு செய்தது நாட்டிற்குப் பெரும் பயனளித்ததென்பதில் ஐயமில்லை. ஆயினும் பெரும்பாலோர் சமணர்களாக இருந்தனர்.

திருநாவுக்கரசர் சைவ மதத்திற் புகுந்து மகேந்திரனைச் சைவனாக்கியது முதல் சமணர்கள் காஞ்சி

யிலும் பிற விடங்களிலும் வாழ முடியாதவர்கள் ஆயினர். அவர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. சமணப் பள்ளிகளும், மடங்களும் தகர்த்தெறியப்பட்டுச் சிவாலயயங்களும், சைவமடங்களும் கட்டப்பட்டன. சமணர்கள் பல நாடுகளை யடைந்து மலைகளிலும், காடுகளிலும், சிறு சிறு கிராமங்களிலும் மறைந்து வசிப்பாராயினர். நெடுமாறன் வைத்தியசாலைகளை நாடெங்கும் அமைத்தது சமணர்களுக்குப் பாண்டிய நாட்டிற் புகுந்து வசிப்பதற்கு அநுகூலமாயிற்று. வைத்தியசாலைகள் நிறுவப்பட்ட சில ஆண்டுகளுக்குள் பாண்டிய நாடெங்கும் சமணர்கள் மிகுதியாகக் காணப்பட்டனர்.

மங்கையர்க்கரசி சைவ மதத்தில் முழுப் பற்றுடையவள். அவளுக்கு நாடெங்கும் சத்திரங்கள் அமைத்துத் தலயாத்திரை செய்வார்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்ற எண்ண முண்டாயிற்று. அவள் தன் கருத்தை அரசனுக்குத் தெரிவித்தாள். அரசனும் அநுமதி அளித்தான். பாண்டிநாடெங்கும் சத்திரங்களும், சைவ மடங்களும் கட்டப்பட்டன. குடிகள் யாவரும் இன்புற்றிருந்தனர். சிவனடியார் சத்திரங்கள் தோறும், சைவ மடங்கள் தோறும் நிறைந்திருந்தனர். அவர்கள் பாண்டிய நாடெங்கும் சைவ முழக்கம் செய்து வந்தனர்.

சமணர்கள் நாளுக்கு நாள் அதிகமாகவே அவர்கள் ஆதிக்கமும் அதிகமாயிற்று. முன்பு மறைவிடமாக இருந்து சைவர்களையும் வைணவர்களையும் இழிவுபடப் பேசி வந்த சமணர்கள் நாளடைவில்

வெளிவந்து எதிர்முகமாக நின்று இழிவுபடப் பேசுவாராயினர். அதனல் சைவர்கள் சிறிது துன்பப்பட வேண்டியதாயிற்று. குடிகள் அங்கங்குக் குழுமிச் சமணர்கள் செய்யும் அதிக்கிரமங்களைக் கூறி மன்னனையும் பழிப்பாராயினர். குடிகள் பேசுவனவும் நாளடைவில் நெடுமாறனுக்கும், மங்கையர்க்கரசிக்கும் தெரியவந்தன.

அத்தியாயம் 8

சேர பாண்டியர் யுத்தம்

மங்கையர்க்கரசி நாள்தோறும் சமணர்களால் சைவர்கள் துன்பப்படுகின்றனர் என்று கேள்விப் பட்டு வருந்தினள். வளவன் தூர்க்கத்தில் கௌணிய முனிவர் என்னும் பெரியார், "ஒரு சமயம் முன் வினைப் பயனால் நின் கணவன் சமண மதத்தில் சிக் குண்டு உழல்வான்," என்று கூறியது ஞாபகத் திற்கு வந்தது. நாட்டில் நடைபெறும் தன்மை களை ஆராய்ந்து பார்க்கையில் அக்காலமும் முனிவர் கூறியதற்குப் பொருத்தமாகவே இருந்தது. அத னால் அவள் யாது செய்வதென ஆலோசித்தாள். சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தலே ஏற்ற துணையாகும் என அவள் கருதினாள். அகத் தியர் தங்கிய பொதிய மலையே அதற்குத் தகுந்த விடம் எனவும் அவள் கருத்தில் கொண்டாள்.

சேரநாட் டரசன் சிறிது சிறிதாகச் சேனை களைச் சேர்த்துக்கொண்டு தன் குறுநில மன்னர் களின் துணையால் பாண்டி நாட்டின் தென்பாகத் தைக் கைப்பற்ற எண்ணினான். அவ்விஷயம் நெடு மாறனுக்குத் தெரியவந்தது. உடனே நெடுமாறன் அவன் வலியை அடக்க எண்ணினன். ஆதலின் நெடுமாறன் சேரனோடு படை எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாயிற்று. அவ்விஷயத்தை அவன் மங்கையர்க்கரசியிடம் சொன்னான்.

தன் கருத்தை முற்றுவித்துக்கொள்ளத் தருணம் பார்த்திருந்த மங்கையர்க்கரசி அரசன் கூறியவற்றைக் கேட்டதும் மகிழ்ந்து தானும் போருக்கு வருவதாகக் கூறினள். மன்னன் போர்க்களத்தின் நிலையை அவளுக்குப் புலப்படுத்தி அங்கு அவள் தொடர்ந்து வருதல் ஆபத்தானது என்று கூறினன். ஆனல் மங்கையர்க்கரசி, தக்க சமாதானங்களைக் கூறி அரசனைச் சம்மதிக்கச் செய்தாள். மங்கையர்க்கரசி ஆணுடை யணிந்து குதிரைமேலேறி நெடுமாறனுடன் புறப்பட்டாள். சேனைகள் யாவும் முன்னமே தக்க சேனதிபதிகளின் வசம் ஒப்புவிக்கப்பட்டுச் சென்றன. நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் குதிரைகளின்மே லமர்ந்து, திருமங்கலம், வில்லிபுத்தூர், சிவகிரி முதலிய ஊர்களின் வழியாகச் சென்று தென்காசியை அடைந்தனர். சேரன் இவர்கள் வருவதற்கு முன்பே செங்கோட்டை வழியாகச் சென்று நெல்வேலியைக் கைப்பற்றிக் கொண்டான். அதனை அறிந்த நெடுமாறன் ஒரு பகுதிப் படையுடன் நெல்வேலி நோக்கிச் சென்றன். கருவூரில் அடைந்த தோல்வியைச் சேரன் மறக்கவே யில்லை. குதிரைப் படைகள் நிறைந்துள்ள பாண்டியனை யானைப்படைகளுடன் சென்று தாக்குவதால் பயனில்லை என்பதையும் சேரன் உணர்ந்திருந்தான். அதனல் அவன் தன் வீரர்களை அழைத்து விற்களை யெல்லாம் வேலி போல் வைக்குமாறு பணித்தான். சேரன் படை வீரர்கள் வில் வித்தையில் சிறந்தவர்கள். அதனல் சேரனுக்கு 'வில்லவன்' என்ற பெயரும் உண்டு.

இதனை அறிந்த மாறன் மங்கையர்க்கரசிக்குத் தெரிவித்து அந்நிலையில் செய்வதியாதென ஆலோசிக்கலானான். நெடுநேரம் வரை இருவரும் வடக்கிலும் தெற்கிலும் சேனைகளை நடத்திவந்து திடீரெனச் சேரனைத் தாக்குவதென்று தீர்மானித்தனர். அவ்வாறே மாறன் தன் சேனைகளை இரு கூறுக்கி வடக்கிலும் தெற்கிலும் வரும்படி ஏற்படுத்தினான். அவ்வாறே சேனைகள் இருகூறுபட்டு இருபுறங்களிலும் வந்து தாக்கின. கடும்போர் மூண்டது.

அப்போரில் நின்றநிலை பெயராது போர் புரிந்தோர் நெடுமாறனும், மங்கையர்க்கரசியும், சில வீரருமே யாவர். வில்வேலி யழியவே சேரன் சேனை வீரர்கள் வாட்போர் புரியவேண்டியவர்களாயினர். திடீரென்று நெடுமாறனுக்கு ஓர் ஆபத்து நேர்ந்தது. சேரன் படை வீரர்களில் ஒருவன் பாண்டியன் குதிரைமேலேறிக்கொண்டு நெடுமாறனைத் தாக்க வந்தான். அவன் வாளைக் கையில் ஏந்தியவனாய்ப் பாய்ந்து வந்ததை நோக்கின் யாவரும் அஞ்சுவர். அவன் நேரே வந்து நெடுமாறன் தலைக்குமேல் வாளை ஓச்சத் தொடங்கினான். அந்நிலையில் ஒரு வீரன் கடிது பாய்ந்து சேரன் சேனை வீரனின் கழுத்தையும், வாளோச்சிய கையையும் பிடித்து அழுத்தவே அவ்வீரன் 'ஓ' வென்றலறிக்கொண்டு கீழே விழுந்தான். ஒரு நொடியில் தன்னுயிரைக் காத்த வீரனை ஒருமுறை நெடுமாறன் முற்ற நோக்கிப் பின் தன்னைக் கொல்லவந்த வீரனைக் கையிற் பற்றி அவனுடைய வலக்கையை வெட்டத் தொடங்கினான். அப்பொழுது

தன்னைக் காத்த வீரன், "மன்ன, வேண்டாம்; அவனால் இப்பொழுது ஒன்றும் செய்ய இயலாது. ஆதலின் அவனுடைய வாளை வாங்கிக்கொள்ளுங்கள்," என்றான். அவ்வாறே நெடுமாறனும் அவன் வாளை வாங்கிக்கொண்டு அவனைச் சிறைப்படுத்தினான்.

நெடுமாறனைக் காப்பாற்றிய வீரன் மங்கையர்க்கரசியே என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! அவள் வளவன் துர்க்கத்தில் கௌணிய முனிவரிடம் கற்ற வித்தைகள் பல. அவற்றுள் போர்த் தொழிலும் அவள் பயின்றிருந்தாள். தன் மனைவியின் ஆற்றலை நன்கறிந்த நெடுமாறன் வியப்பும் உவகையும் கொண்டான். பின் நெடுமாறன் சிறைப்படுத்தியவனைப் பார்த்து, "ஓ—கருவூரில் அடைந்த அவமானத்தை நீ மறக்கவில்லை போலும்!" என்றான். அதற்கு அவன், "நல்ல காலம்! இவ்வீரன் என்னைத் தடுத்திராவிட்டால் நான் உன்னை எமலோகம் அனுப்பியிருப்பேன்," என்றான். அப்பொழுது பக்கத்திலிருந்த மங்கையர்க்கரசி, "வீரனே, இனி, நீ போர் செய்யமுடியாது. நீ சிறைப்பட்டாய் என்பதை அறிந்து கொள். இனி நீ சேரனிடம் செல்வாய் என்பதை மறந்து விடு," என்றாள்.

அம்மொழிகளைக் கேட்ட வீரன், "என்னை நீங்கள் விடுத்தாலும் இனி நான் சேரனிடம் போவதாக எண்ணங் கொள்ள வில்லை. கருவூர்ப் போர் முடிந்ததும் அவன் என்னை எவ்வளவு துன்பத்திற்குள்ளாக்கினான் என்பதை நானே அறிவேன். பல சொல்லி என்? நான் சோழநாட்டிற் பிறந்தவனாத

லின் அத்துன்பங்களுக்குட்பட வேண்டியதாயிற்று. நீங்கள் இப்பொழுது எனக்கு உயிரளித்தீர்கள். இனி நான் உங்களிடம் வாழ்வேனே யன்றிச் சேர நாட்டிற்குச் செல்லேன்,'' என்றான்.

அவன் கூறியவற்றைக் கேட்ட மங்கையர்க்கரசி, "நீ கூறுவது உண்மையே; ஆனால் இன்றுமுதல் எங்கள் குலத்தைக் காக்கும் தொழிலை உனக்கு அளித்தேன். உன்னைச் சேரன் வைத்துக்கொண் டிருந்ததைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகவே போற்றுவோம். என் குலத்தார்க்கே நீ சிறை யாயின மையின் இனி உன் பெயர் குலச்சிறை என்பதாகும்'' என்றாள். நெடுமாறனும் அவனிடம் கூறுவனவற்றைக் கூறி அவனை மதுரைக்கு அனுப்பினான். அரசன் கட் டளைப்படி குலச்சிறையும் மதுரைக்குச் சென்றான்.

இரண்டு நாட்கள் சென்றபின் தென்காசிக் கடுத்த புலியூரிலே போர் நடந்தது. நெடுமாறன் சேரனை அங்கு வந்து துரத்திக்கொண்டு 'செந்நிலம்' என்னுமிடம் வரை வந்து முறியடித்தான். செந் நிலத்தில் பிற்காலத்தில் வந்த பாண்டியர்களுள் ஒரு வன் ஒருகோட்டை கட்டினான். ஆதலின் அதற்குச் 'செங்கோட்டை' எனும் பெயர் உண்டாயிற்று. அங்கு நடந்த போரிலும் நெடுமாறனே வெற்றி பெற்றான்.

சேரனுக்குத் தோல்விமேல் தோல்வி உண்டா கவே அவன் எஞ்சிய சேனைகளோடு தன் நாடு நோக் கிச் சென்றான். பாண்டியனும் தன் படைகளை யெல் லாம் மதுரைக்கு அனுப்பினான். பின் நெடுமாறன்

மங்கையர்க்கரசியுடன் பாபநாசம், திருக்குற்றுலம் முதலான இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள வேடிக்கை விநோதங்களைக் கண்டு களித்தான். அங்கிருந்த முண்டகந்துறையிலுள்ள குகையில் ஒருநாளிரவைக் கழித்துப் பின் 'அகத்தியர் கூடம்' அடைந்தனர். அங்கு இரண்டு பாறைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கியமைந்திருந்தன. அப்பாறைகளின் இடையே காணப்பட்ட நீர் மிகத் தெளிவாக இருந்தது. அந்த நீரை இருபாறைகளும் பொதிவதுபோல் தோன்றினமையின் அவ்விடத்திற்குப் 'பொதிய மலை' என்று பெயர். 'போதிவது என்னும் சோல் சேரநாட்டில் மூடுவேது' என்னும் போருளைத் தருவதாகும். இருவரும் அந்நீரில் மூழ்கி அவ்விடத்தே பத்துத் தினங்களைக் கழித்தனர். அவ்விடம் அவர்களுக்கு மிக்க இன்பத்தைத் தருவதாயிருந்தது. மாறன் பக்கலில் இருந்த மலைகள்தோறும் சென்று ஆங்காங்குள்ளனவற்றைக் கண்டு களித்தான். மங்கையர்க்கரசி இரவில் மட்டும் காய்கனிகளைப் புசித்துத் தான் நினைத்து வந்தபடி தவம் செய்தாள். அவள் பத்துத் தினங்களுக்குள் பல அற்புதக் காட்சிகளைக் கண்டனள். அவற்றை அவள் மாறனுக்குச் சொல்லவில்லை. பத்துத் தினங்களும் சென்ற பின்னர் நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் பிரயாணமாகி மதுரை வந்து சேர்ந்தனர்.

அத்தியாயம் 9.

சமணர் செருக்கு

பாண்டி நாட்டிலே வைத்தியத் தொழிலில் அமர்ந்த சமணர்கள் செய்த அநீதிகள் பல. ஆயினும் அவை அரசன் செவிக்கெட்டாதவாறு பல உபாயங் களை அவர்கள் புரிந்துவந்தனர். தீராத பெரு நோய் களினல் பல்லாண்டுகளாகத் துன்புற்றுக்கொண் டிருந்த குடிகள் அந்நோயின் துன்பம் நீங்கப்பெற்று அவர்களைப் புகழ்ந்து பேசலாயினர். சமணர்களோ தங்கள் மதத்தைப் பரவச் செய்யவேண்டும் என்னும் எண்ணமுடையவர்கள். மற்றும் அவர்கள் மிக்க தந் திரசாலிகள். நோயுற்றவர்கள் வந்தால் அவர்களிடம் இனிமையாகப் பேசி மருந்து கொடுக்கும் பாவனை செய்து அந்நோயை மிகுதிப்படுத்துவர். பின் அவர் களுக்கு ஏற்ற முறையில் தம் மந்திரங்களையும் உப தேசித்து அவர்களுக்குச் சமண மதத்தில் நம்பிக்கை வரச் செய்து சமணராக்கிக்கொண்டு நன்மருந் தளித்து நோயையும் நீக்குவர். இவ்வாறே பலர் சமணராக்கப்பட்டனர்.

ஒரு சமயம் புஷ்பநந்தி என்னும் சிறந்த வைத்திய னிடம் ஒரு நோயாளி வந்தான். அவனுக்கு ஏதோ மருந்து கொடுக்கப்பட்டு வைத்தியசாலையில் கிடக் கையும் கொடுக்கப்பட்டது. சிலநாட்கள் சென்றன. பின் ஒருநாள் புஷ்பநந்தி அவனிடம் வந்து வியாதி எவ்வாறிருக்கிறதென்று விசாரித்தபொழுது அவன், "ஐயா நீர் கொடுத்த மருந்தைத் தடவியும், உட்

கொண்டும் தலைவலி நின்றிலது. அதற்கு மாறாக அதிகமாயிற்றே,'' என்றான். புஷ்பநந்தி, "ஐயா, இந்நோய் எவ்வளவு காலமாக உள்ளது?'' என்று கேட்டான். அதற்கவன், "ஐயா, பன்னிரண்டு வருடங்களாக இந்நோய் என்னை வருத்துகின்றது. அஃது ஒவ்வொரு சமயங்களில் பத்துப் பதினைந்து நாள் வரை வருத்தும்; பின் நீங்கும்,'' என்றான். அதற்குப் புஷ்பநந்தி, "ஐயா, இது ஒரு பெருநோய். இது மருந்தினால் மட்டும் குணமடைவதன்று; மந்திரச் சிகிச்சையும் இதற்கு இன்றியமையாததே. எங்கள் முன்னோர்கள் கைக்கொண் டொழுகிய நெறியையே நாங்கள் பற்றிச் செல்கின்றோம் என்பதை நீ யறிவாயன்றே! அதனால் நான் ஒரு மந்திரம் உபதேசிக்கின்றேன்; மருந்தும் கொடுகின்றேன். நான் கூறும் வண்ணம் செய்வாயானால் இந்நோய் விரைவில் நீங்கும்,'' என்றான். பிணியாளன் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொள்ளப் புஷ்பநந்தி அவனுக்கு மந்திரத்தை உபதேசித்து அவனை சமணனாக்கி நோயையும் நீக்கினான்.

சமணர்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கவே அவர்கள் சைவர்களைத் தெருக்களில் வெளிப்படையாக இழிவுபடுத்திக் கூறுவாராயினர். ஒருசமயம், சைவன் ஒருவன் கடைக்குச் சென்று தேங்காய், பழம், கற்பூரம் முதலியன வாங்கிக்கொண் டிருந்தான். அப்பொழுது அங்கு நின்றுகொண் டிருந்த சமணன் ஒருவன் "அவை எதற்கு?'' எனக் கேட்டான். அதற்குச் சைவன், தான் ஆலயத்திற்குச் செல்வதால் கொண்டு

போவதாகச் சொன்னான். அப்பொழுது சமணன், "உங்கள் கடவுள் கோயிலிலோ இருப்பான்? அவன் சுடுகாட்டுத் தேவதை யல்லவா? அவன் பிணத்தைக் கண்டு கூத்தாடிக்கொண் டிருப்பான்," என்று வாய் மதம்படக் கூறினான். அவனுக்குத் துணையாக நின்று சில சமணர்களும் இழிவாகப் பேசினர். அவற்றைக் கேட்ட சைவனுக்குக் கோப முண்டாயிற்று. எனினும் சமணனிடம் பேசினால் துன்பமுண்டாகும் என்று எண்ணிச் சைவன் ஒன்றும் பேசாமல் சென்றான்.

மற்றொருசமயம், ஓர் ஆதிசைவன் கோயிலில் பூசையை முடித்துவிட்டு வந்துகொண் டிருந்தான். அவனைச் சமணர் சிலர் சூழ்ந்துகொண்டனர். அவர்களில் ஒருவன் அவனை நோக்கி, "நீ எக்குலத்தினன்?" என்று கேட்டான். அதற்கு ஆதிசைவன், "நான் பிராமணன்," என்று கூறினான். அப்பொழுது, ஒருவன், "நீ கண்ணப்பன் என்ற வேடனைத் தெய்வமாக வணங்குகிறாயே! நீயோ பிராமணன்?" என்று இகழ்ந்தான். ஆதிசைவனுக்குக் கோபம் வந்தது. அவனும், "அழுக்குத் தலைச் சமணர்" என்றிகழ்ந்தான். சிறிது நேரத்திற்குள் வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிற்று. முடிவில் பிராமணனையப் புடைபட்டான்.

இவ்வாறு சமணர்கள் செய்துவந்த அக்கிரமங்கள் பல. சைவர்கள் மிக்க துன்பத்திற் குள்ளாயினர். ஆதலினால் ஒருநாள் உமாபதியார் என்பவரின் தலைமையின் கீழ் அமைந்த சைவர்கள் சமணர்களின்

அக்கிரமங்களை அரசனிடம் சொல்வதெனத் தீர்மானித்து அரசனைக் காணச் சென்றனர். அரசன் அவர்கள் வருகையைக் கேட்டு அவர்களை உள்ளே அழைப்பித்து வந்த காரணத்தையும் வினவினான்.

அப்போது உமாபதியார், "நேற்றுக் கற்பூர சுந்தரப்பட்டர் செங்கழுநீர்ப் பிள்ளையாருக்குப் பூசை முடித்து வரும்போது சமணர்கள் சிலர் அவரை நையப் புடைத்தனர்; தேங்காய், பழம் வாங்கிக் கொண்டு கோயிலுக்கு வருபவர்களைச் சமணர்கள் பழித்து இழிவுரை யாடுகின்றனர்; வைத்தியசாலைகளுக்குச் செல்பவர்களோ சமணர்களாகவே மாறிவிடுகின்றனர்; கோயிலிற்குத் திருவிளக்கிட எண்ணெய் உதவி வந்தவரைச் சமண னாக்கிவிட்டமையால் அவர் தாம் செய்துவந்த அர்ச்சனை, அபிஷேகம் முதலாயினவற்றையும், எண்ணெய் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார். நாளுக்கு நாள் எங்கள் பிழைப்பும் குறைவுபடுகின்றது. எங்களிற் பலர் நரசிம்மவர்மனிடம் சென்று அவனால் கட்டப்பெற்ற கோயில்களில் வேலையில் அமர்ந்துள்ளனர். அரசே, அவர்கள் அக்கிரமத்தை அடக்காவிடின் நாங்களும் இந்நாட்டைவிட்டுச் செல்லவேண்டியதாகும்," என்றார்.

அரசன் உமாபதியாரை நோக்கி, "ஐயா, அவர்களை விசாரிக்கின்றேன்," என்று கூறிக் கற்பூரசுந்தரப் பட்டரை அடித்தவர்களான இந்துசேனன், சந்துசேனன், கந்துசேனன், தர்மசேனன், கனசேனன், சுனகநந்தி, திவனநந்தி என்பவர்களை

அழைப்பித்தான். அவர்கள் வந்ததும் நடந்த விருத்தாந்தம் என்னவென்று அரசன் கேட்டான். அதற்கு அவர்கள், "அரசே, நாங்கள் அஹிம்சையையே முக்கியமாகக் கொண்டவர்கள். நாங்கள் இவரை யடிப்போமா ? இவர் அடிபட்டுக் கிடந்ததைக் கண்டு வருந்திக் கேட்ட எங்கள் மீதே இவர் குற்றங் கூறியுள்ளார்," என்றார்

அரசன், "இவர்கள் கூறுவது உண்மையாகத் தோன்றுகிறது. இவர்கள் அடித்ததற்குச் சாக்ஷிகளுண்டோ ?" வெனக் கேட்டான். அதற்குப் பட்டர், "அவர்கள் அடித்தபோது சாக்ஷிகள் ஒருவருமில்லை" என்று கூறினர். அதனல் அரசன் சமணர்கள்மீது குற்றம் காண வியலாது அவர்களை யனுப்பி விட்டான். இவ்வாறே நெடுமாறன் பிறவற்றையும் விசாரித்ததில் சமணர்கள்மீது குற்றமொன்று மில்லை என்றே எண்ணி விட்டான்.

சமணர்களுக்கு நாளுக்கு நாள் வலிமை அதிகரித்துக்கொண்டே வந்தது. சமணர்களுடைய அட்டகாசங்களும் நாட்டில் அதிகமாயின. சைவர்களும், வைணவர்களும் பெரிதும் வருந்தலாயினர். இவையெல்லாம் மங்கையர்க்கரசிக்கு நாளடைவில் தெரியலாயின. ஆயினும், அவள் ஒன்றும் செய்ய இயலாதவளாய்த் தக்கதோர் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனள். அவளுக்குச் சமணர்கள் செய்யும் அக்கிரமங்களை நேரில் அறியவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அதனல் அவள் வைத்திய

சாலைகளுக்குத் தானே நேரில் சென்று அங்கு நடப் பவைகளைக் காணவேண்டும் என்று விருப்பங்கொண் டாள். அவ்வாறு சென்று காண அரசன் அனு மதியையும் அவள் பெற்றாள்.

—

அத்தியாயம் 10

சங்கரமங்கை யுத்தம்.

காஞ்சிபுரத்தி லிருந்த நரசிம்மவர்மன் சைவர்களுக்குப் பேராதரவு அளித்துவந்தான். பரஞ்சோதியார் வாதாபியிற் புகுந்து புலகேசியை வென்ற பிறகு நரசிம்மவர்மனுக்குப் பேரும் புகழும் பெருகலாயிற்று. பரஞ்சோதியார் சிவனடியார் என்று பல்லவன் அறிந்ததும் அவரைத் தம்மூருக் கேகும்படி பணித்துப் பொருளு மளித்தான். சிறுத்தொண்டர் எனப் பின் பெரும்புகழ் எய்தியவர் அப்பரஞ்சோதியாரே யாவர். நரசிம்மவர்மன் தன் நாட்டு எல்லைக்குள் சமணர்கள் புகாதபடி காத்துக்கொண்டதுமன்றிச் சைவர்களுக்குத் துன்பம் நேரிடும் இடங்கள் தோறும் சென்று உதவி புரிந்தும் வந்தான். அவனுக்குப் பாண்டி நாட்டில் நடப்பன யாவும் நாளடைவில் தெரியவந்தன. அதனால் அவன் மாறனை வெல்லவும், சமணர்களைப் பாண்டி நாட்டினின்று துரத்தவும் தருணம் பார்த்திருந்தான்.

ஒருநாள் அவன் அரண்மனைக்குச் சில ஆதி சைவர்கள் வந்தார்கள். அவர்கள் வருகையைக்கேட்ட அரசன் அவர்களை உள்ளே அழைத்துவரும்படி காவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் வந்து அரசனைப் பணிந்து தங்களுக்குரிய ஆதனங்களில் அமர்ந்தனர். அரசன் அவர்களில் தலைவரான உமாபதியாரை நோக்கி அவர்கள் வந்த காரணத்தை வினவினன். உமாபதியார் மன்னனை வணங்கி, "மன்

னவா, நீ நீடூழி வாழ்வாயாக ; நின் கொற்றம் என்றும் சிறந்து விளங்குவதாகுக; நின்னாலும், நின் தந்தையாலும் பல சிவாலயங்கள் கட்டப்பட்டுள்ளனவற்றைக் கண்டும் கேட்டும் நாங்கள் மகிழ்ச்சி யடைந்தோம். சைவம் தழைத்தோங்கச் செய்த தரணிபனே, எங்கள் குறைகளைக் கூறிக்கொள்ளவே நாங்கள் இங்கு வந்தோம். எங்கள் நாட்டில் சமணர்கள் நிறைந்துவிட்டனர். பாண்டியன் நெடுமாறனை அவர்கள் மயக்கிவிட்டனர். அவர்கள் செய்யும் அக்கிரமங்கள் எடுத்துச் சொல்லும் திறத்தன வன்று. அவை பாண்டியனுக்குப் புலப்படவில்லை. நாடோறும் ஆயிரக்கணக்கான சைவர்கள் வந்துகொண்டிருந்த ஆலயத்தில், இப்பொழுது பத்துப் பதினைந்து பேர்கள்கூட வருவதில்லை. அதனால், எங்கள் தொழிலுக்குப் பங்கம் நேரிட்டது. திருவிழாக்கள் நடப்பதும் அருமையாயிற்று. நாட்டிலோ செல்வத்திற்கும், கல்விக்கும் குறைவில்லை. வேதம் ஓதுதலும், கீதம் பாடுதலும், ஓமம் செய்வதும் அழிந்தொழிந்தன. வைகையில் நீராடி, அதன் கரையில் வளர்ந்திருக்கும் தருப்பைகளைக் கொய்து கையிலேந்தி, ஆரணஞ் சொல்லித் தெருவில் வரும் அந்தணரைக் காண முடியவில்லை. அழுக்கேறிய ஆடைகளை யணிந்து, கையில் மயிற் பீலி கொண்டு திரியும் சமணர்கள் எங்கும் நிறைந்து காணப்படுகின்றனர். சிவபுராணம் நடந்த இடங்களில், 'அத்தி நாத்தி' வாதம் நடைபெறுகின்றது. அவர்கள் செய்யும் துன்பங்களைக் கூறி நன்மை பெறவே நாங்கள் உன்னிடம் வந்தோம்'' என்றார்.

உமாபதியார் கூறியவை மன்னன் மனத்தைக் கலக்கின. சமணர்களால் சைவர்கள் துன்புறுதலைக் கேட்டதும் மன்னன் மனம் அனலிடைப்பட்ட மெழு கென உருகிற்று. அவன் அந்நாட்டுச் சைவர்களைக் காக்கவேண்டியதும் கடனே என்று எண்ணினான். ஆதலின் அவன் உமாபதியாரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் இனி ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம். நீங்கள் எல்லோரும் இந்நாட்டிலேயே இருக்கலாம். நீர் சொல் லியவற்றைக் கேட்க என் மனம் பொறுக்கவில்லை. நான் படையெடுத்துச் சென்றேனும் அச் சமணர் களின் வலியை யடக்குகின்றேன். அதனால் போரில் நான் உயிர் துறக்க நேரிடினும் பொருட்படுத்தேன்," என்று கூறி அவர்களுக்கு வேண்டுவன அளித்து விடை கொடுத்தனுப்பினான்.

நெடுமாறனுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த வெண்ணிய நரசிம்மவர்மன் தன் மந்திரியைத் தூத னுப்பினான். மந்திரி பாண்டிய நாட்டை யடைந்து நெடுமாறனைக் கண்டு பாண்டிய நாட்டில் சைவர்கள் துன்புறுவதையும், சமணர்கள் மிகுந்திருப்பதையும், அவர்கள் செய்யும் அநீதிகளையும், அவர்களிடத்தில் தனக்குண்டான அநுபவத்தையும் விளக்கமாக எடுத் துக் கூறினான். அவற்றைக் கேட்ட நெடுமாறன் சினந்து, தூதனை நோக்கி, "வடநாட்டு மன்னர்களுக் குள் யார்தாம் தற்புகழ்ச்சியை விரும்பாதவர்? குஷாண தேசத்து மன்னனான கனிஷ்கன் தன்னைப் போன்ற சிலைசெய்து செருக்குடன் யமுனைக்கரையில் நிறுத்தவில்லையா? தன் பெருமைகள் விளங்கும்படி

ஹரிசேனனைக் கவிபாடச் சொல்லி அக்கவியைக் கல்லிற் பொறித்தவன் அன்றோ ஸமுத்திர குப்தன்? ஹர்ஷன் பாணனைக் கொண்டு தன் சரித்திரத்தை எழுதிவைக்க வில்லையோ? தற்புகழ்ச்சி யென்னும் பேய் பல்லவனையும் பற்றிக்கொண்ட தொரு வியப்போ? 'மத்த விலாசன்,' 'குணபரன்' என்னும் பெயர்களை ஏற்றுக்கொள்வது மன்றி ஆதிவராஹ சுவாமி கோயிலில் தன்னைப் போலவும், தன் இரு மனைவியர்களைப் போலவும் சிலைகள் செய்து பல்லவன் அமைத்துள்ளா னல்லனோ? இத்தகையானோ எனக்கு அறிவு புகட்ட எண்ணுவது! என்னே அவன் பேதைமை இருந்தவாறு!'' எனக் கூறினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட தூதனாக வந்த மந்திரி கோபங்கொண்டான். அவன் நெடுமாறனை நோக்கி, "அரசே, நீர் சிறிதும் ஆய்ந்தோய்ந்து பாராமலும், பல்லவர்கள் வலிமையை அறியாமலும் இகழ்ந்து பேசுகிறீர். இவற்றை நான் எம் மன்னனுக்குக் கூறின் போர் விளையும் என்பது திண்ணம்,'' என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

பல்லவனும் படைகளைத் திரட்டிக் கொண்டு போருக் கெழுந்தனன். அவன் போருக்கு வருவான் என்பதை யறிந்திருந்த நெடுமாறனும் படையுடன் சென்றான். இருவர் சேனைகளும் திருச்செங் கோட்டு மலையைச் சார்ந்த சங்கரி என்னும் இடத்தில் சந்தித்தன. பாண்டியன் படையில் குதிரை வீரர்கள் மிக்கிருந்தனர். பல்லவனுக்குக் காலாட்படைகள் அதிகம். மங்கையர்க்கரசியும் நெடுமாறனுடன் சென்றிருந்

தாள். இருதிறத்தார்க்கும் கடும்போர் விளைந்தது. வாளேந்திய கையராய் ஆரவாரித்துப் பொங்கி யெழும் பாண்டியன் சேனைகளைக் கண்ணுற்ற பல்லவன் சேனுவீரர் புறங்காட்டி ஓடலாயினர். பாண்டியனும் அவர்களைத் துரத்திக்கொண்டு சிறிது பின்தொடர்ந்தான். அப்பொழுது மங்கையர்க்கரசி மாறனை நோக்கி, "மன்னவ, புறங்காட்டி ஓடுபவர் களைப் பின்தொடர்ந்து பற்றி வெற்றி கொள்ளல் வீரத்திற்குச் சிறந்த தன்று. ஆதலின் வீரனுடை யணிந் திருத்தலினுல் நான் சென்று பல்லவனைப் பற்றி வருகின்றேன்," என்று கூறினுள். அரசனும் அதற் கிணங்கினுன். மங்கையர்க்கரசி பரிமீது இவர்ந்து காற்றினும் கடுகிச் சென்று பல்லவனைப் பற்றிக் கொண்டு மீண்டு சங்கரிக் கிராமத்தில் தங்கி யிருந்த நெடுமாறன் முன் வந்து நின்றுள்.

மங்கையர்க்கரசி நெடுமாறனை நோக்கி, "இன்னு யிர்க் காதல, இப்பல்லவ அரசனை இங்கே அழைத்து வந்தது இவன் நம்மீது கோபம் கொள்ளவேண்டிய காரண மென்ன என்பதை யறியவே. நம்மீது குற்ற மிருப்பின் அதனை நாம் நீக்கிக்கொள்ள வேண்டும்; அவன்மீது குற்றம் இருப்பின் புத்தி சொல்லி அனுப்பவேண்டும். நீர் இனிக் கேட்க வேண்டுவன வற்றைக் கேட்கலாம்," என்றுள்.

நெடுமாறன் பல்லவனைப் பார்த்து, "என் மனைவி கூறியனவற்றைக் கேட்டாயா?" என்றுன்.

ஆணுடை தரித்திருந்த மங்கையர்க்கரசியை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துப் பெருமூச்

செறிந்து, "ஒருபெண்ணாலேயோ போர்க் களத்தினின்றும் துரத்தப்பட்டுப் பிடிபட்டு நிற்கின்றேன் நான்!" என்று கூறித் திகைத்து நின்றான் பல்லவன். பின் அவன் நெடுமாறனை நோக்கி, "என்னை முதுகிட்டு ஓடும்படி செய்த இம்மங்கையின் வீரச் செயல் விளங்க இவ்வூரில் இம்மாதின் உருவச் சிலை ஒன்றமைக்க விரும்புகின்றேன். இம்மாதின் நாமம் யாதோ?" என்று வினவினன்.

நெடுமாறன், "இவள் பெயர் மங்கை. இவளை மங்கையர்க்கரசி என்றும், மாதேவி என்றும் அழைப்பார்கள்," என்றான்.

"மன்னவ, சிலை செய்து அமைத்தல் பல்லவர் வழக்கம். அச்செயல் எங்களுக்கு மகிழ்ச்சியை யளிக்காது," என்றாள் மங்கையர்க்கரசி.

நெடுமாறனும், மங்கையர்க்கரசியும் கூறியவற்றைக் கேட்ட பல்லவன், "மன்னவ, நான் சிலையமைக்கத் தீர்மானித்துவிட்டேன். சங்கரி என்னும் இவ்வூர் இனிமேல் சங்கரிமங்கை என வழங்கப் பெறும். இனிநான் உன்னுடன் போருக்கு வந்ததின் காரணம் கூறுவன். சைவர்களைச் சமணர்கள் நின் நாட்டில் மிக்க துன்பத்திற் குள்ளாக்குகின்றனர் எனப் பலர் என்னிடம் வந்து கூறிக்கொள்கின்றனர். சைவர்களின் துன்பத்தை நீக்க வெண்ணியே நின்னோடு போருக் கெழுந்தனன்," என்றான்.

நெடுமாறன், "பல்லவ, நன்று கூறினாய்! சமணர்கள் நாட்டில் செய்து வரும் நன்மைகள் எத்

தகையன என்பதை நீ அறியாய்போலும்!'' என்றான். பல்லவன் நெடுமாறனை நோக்கி, "மாறனே, சமணர்களின் வஞ்சனைகளை நீ உணர மாட்டாய். என் தந்தைகாலம்முதல் அவர்கள் செய்துவரும் வஞ்சகச் செயல்களை நான் அறி வேன். அவர்கள் பொய்ம்மை எல்லாம் கொஞ்ச காலத்தில் நீயும் அறிவாய்,'' என்றான்.

நெடுமாறன் தன் நடுவு நிலைமையை எடுத்துக் கூறி எத்தகையார் குற்றம் செய்யினும் தண்டனை செய்வது உண்மை யாதலின் இனி இருதிறத்தா ரைப்பற்றியும் நன்கு கவனிப்பதாக மொழிந்து பல்லவனுக்கு விடை கொடுத்தனுப்பினான். பின் மங்கையர்கரசி நெடுமாறனை நோக்கி, "மன்னவ, நாம் சேரனையோ, பல்லவனையோ வென்று கீர்த்தி எய்துவது பெரிது அன்று; பல்லவனிடம் நம் நாட் டுச் சைவர்கள் சென்று குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள் என்றால் உண்மையில் சமணர் களால் அவர்களுக்குத் தீங்குண்டாயிருக்க வேண் டும். மற்றும் அவர்களுக்கு நம்மிடத்தில் நம்பிக்கை யில்லை என்பதும் தெற்றென விளங்குகிறதன்றோ? ஆதலின், நாம் குடிகளின் நம்பிக்கையைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியமானது,'' என்றாள். நெடுமாறனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண் டான். பின் இருவரும் படைகளுடன் மதுரை வந்து சேர்ந்தனர்.

அத்தியாயம் 11

மங்கையர்க்கரசியின் வைத்தியத் தொழில்

சமணர்களின் அக்கிரமச் செயல்களை அறிய விரும்பிய மங்கையர்க்கரசி ஒரு பரதேசி வேடம் பூண்டு கொண்டாள். மெய்யெலாம் நீறுபூசி, வேணிகள் முடித்துக் கட்டிக் கையினில் அக்கமாலை கவினுற விளங்கத் தவ வேடம் பூண்டு வைத்திய சாலைக்குள் மங்கையர்க்கரசி புகுந்தாள். பரதேசியின் வருகையைக் கண்ட புஷ்பநந்தி, "நன்று; அதோ ஓர் ஆண்டி வருகின்றான். அவனையும் சமணனாக்க வேண்டும்," என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். அப்பரதேசியும் மெல்லென நடந்து புஷ்பநந்தியை அணுகினான்.

ஆண்டி அருகில் வந்ததும் புஷ்பநந்தி, "ஐயா, வாரும்;இப்பாயின்மீ தமரும். உம்மை நோக்குங்கால் ஒரு நோயும் வருத்துவதாகப் புலப்படவில்லையே! நீர் இங்கு வந்த காரணம் என்ன?" என்று வெகு விநயமாகக் கேட்டான்.

ஆண்டி, "ஐயா, இப்பொழுது எனக்கு ஒரு நோயுமில்லை. ஆனால், என்னிடம் ஒரு வியாதியுள்ளது. அது வருஷத்தில் ஒருமுறை அல்லது இருமுறை வருகின்றது. அது வந்ததும் நான் மயங்கிக் கீழே விழுந்துவிடுவேன்; நித்திரையும் வரும். தூங்கி விழிக்கும்பொழுது யான் பைத்தியம் பிடித்தவன் போலிருப்பேன். அப்பைத்தியம் பத்துப் பதினைந்து நாள்வரை இருக்கும். பின்னர், புத்தி தெளிவடையும்

நீர் எத்தகைய பெரு நோயாயினும் போக்கி விடுவ தாகக் கேள்விப்பட்டு வந்தேன்,'' என்றான்.

புஷ்பநந்தி, ''நல்லது, இஃது ஒரு கொடிய நோய் தான். சமண மதத்தில் இதை விடக் கொடிய நோயைப் போக்குவதற்கு மருந்தும் மந்திரமும் உள்ளன. நீர் யாவரிடமேனும் கூறி வைத்து இங்கு மயக்கம் வரும்பொழுது அழைத்து வரச் சொல் லும்,'' என்றான். அதனைக் கேட்ட ஆண்டியும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு சென்றான்.

சிறிது தூரம் சென்று ஆண்டி மயங்கினவனைப் போல் வீழ்ந்து பாசாங்கு செய்தான். புஷ்பநந்தி பக்கத்தில் வந்து, ஆண்டி மயங்கி வீழ்ந்து நித்திரை கொண்டானென்றே எண்ணி, அருகிலிருந்த கந்து சேனனை அழைத்து, ''ஐயா, ஆண்டி துயிலொழிந்த தும் பைத்தியம் பிடித்தவனைப்போல் இருப்பான். ஆனால், உண்மையில் பைத்தியம் அன்று. அது மூளை சம்பந்தமான ஒருவகை நோய். இவனுக்குப் பைத்தி யத்தை அதிகரிக்கச் செய்து சமணனாக்கி மருந்து கொடுத்து நோயைத் தீர்க்கவேண்டும். ஆதலின், இவன் துயிலொழிந் தெழுந்ததும் ஊமத்தைப் பூவின் பொடியைப் பாலில் கரைத்துக் கொடும்; ஜாக்கிரதை,'' என்று கூறிவிட்டு வேறு நோயாளி களைக் காணச் சென்றான்.

இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆண்டி வேடந் தரித்த மங்கையர்க்கரசி சற்று நேரம் கழிந்தபின் எழுந்தாள். கந்துசேனன் பாலில் ஊமத்

தைப் பூவின் பொடியைக் கரைத்துக் கொடுத்தான். ஆண்டி அம்முறை நோய் விரைவில் அகன்றதாகவும், மற்ெருரு முறை தோன்றும்போது வருவதாகவும் கூறிச் சென்ருன். கந்துசேனன் புஷ்பநந்தி வந்தவுடன் நடந்ததை நவில அவன் மிகவும் வருந்தினுன். ஆண்டியாகி வந்த மங்கையர்க்கரசி வைத்தியசாலையில் நடந்ததை அரசனிடம் நவின்ருள். நெடுமாறன் சினங்கொண்டு புஷ்பநந்தியைத் தண்டிக்க எண்ணினுன். ஆனல் மங்கையர்க்கரசி அவனைத் தடுத்துத் தான் பின்னும் பலவற்றை நேரில் அறிந்த பின்னரே தண்டித்தல் நன்று என்று கூறினுள்.

பின் ஒருநாள் மங்கையர்க்கரசி, கையில் ஒரு விபூதிப் பையை எடுத்துக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்ருள். அரசியின் வருகையைக் கண்ட புஷ்ப நந்தி முன் சென்று வணங்கி வரவேற்ருன். அரசி அங்கிருந்த நோயாளிகளையெல்லாம் காண விழைந்தனள். புஷ்பநந்தி ஒவ்வொருவரையும் அரசிக்குக்காட்டி வந்தான். அவர்களைக் கண்ட அரசி, அவர்களுக்குப் பிணி ஒன்றும் இல்லை என்றறிந்து அவர்களுக்குத் தன்னிடமிருந்த விபூதியையளித்து, "நான் இனிக் காலை, பகல், மாலை என்னும் மூன்று வேளைகளிலும் வந்து விபூதி தருவேன். அதனைப் பெற்றுக்கொண்டால் உங்களை வருத்தும் நோய் அகலும்," என்ருள். அவர்களும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டனர். இரண்டொரு தினங்களுக்குள் பலர் நோய் நீங்கிக் குணமடைந்தனர்.

அரசி செய்துவரும் செய்கை புஷ்பநந்திக்கு அச்சத்தையும், துன்பத்தையும் உண்டாக்கியது. அதனால் அவன் ஒருநாள் யானைமலைக் குகையில் தன் கூட்டத்தாரோடு தாங்கள் பிறரைச் சமணராக்கக் கொண்டிருக்கும் தந்திரம் பலியாமையைப்பற்றிக் கலந்து பேசினன். அப்பொழுது அக்கூட்டத்தாருள் ஒருவன் எழுந்து, "ஐயா, நாம் இதற்கேன் அஞ்சவேண்டும்? நாமும் சைவரைப்போல் வேடந்தரித்துப் பலவகை நோய்களைக் கூறிக்கொண்டு அரசியிடம் செல்வோம். அவள் நமக்கும் விபூதி யளிப்பாள். அதனைப் பெற்றுக்கொண்டு நோய் நீங்கவில்லை என்று கூறிப் புஷ்பநந்தியிடம் செல்வோம். பின் அவர் உபதேசத்தால் நோய் நீங்கியதென்று கூறுவோம். அப்பொழுது ஜனங்களுக்குச் சமண மந்திரோபதேசத்தால் நம்பிக்கை யுண்டாகிவிடும்," என்றான். அதனைக் கேட்ட பிறரும் 'அதுவே சரி' என்றனர்.

மறுநாள் வைத்தியசாலையில் அரசி யிருக்கும் பொழுது பலர் சைவக்கோலத்தோடு, தலைவலி, வயிற்றுவலி, மண்டைவலி எனப் பல நோயின் பெயர்களைக் கூறிக்கொண்டு வந்தனர். அவர்கள் தோற்றத்திலிருந்தே அவர்கள் பாசாங்கு செய்பவர்கள் என்று அரசி எவ்வாறோ அறிந்துகொண்டாள். மற்றும் நூற்றுக் கணக்காக ஒருவர்பின் ஒருவர் வந்தது அரசிக்கு மிக்க சந்தேகத்தை உண்டாக்கியது. அரசி ஒவ்வொருவருக்கும் விபூதி யளித்துத் தனித் தனி இருப்பிடங்களும் தந்தாள். இரண்டு நாட்கள்

கழிந்தன. அதற்குள் அரசியும் நல்ல மருந்துகளைத் தெரிந்துகொண்டாள். அவர்கள் அனைவரும் பாசாங்கு செய்பவர்கள் என்பதைத் திண்ணமாக அறிந்ததும் அவர்களுக்கு மூன்று நாட்கள் வரையில் தண்ணீரும், சோறும் அளிக்கக் கூடாதென்று கட்டளை யிட்டாள். உணமையான நோயாளிகளுக்கு எவ்வளவு சௌகரியங்கள் கொடுக்கப்பட்டனவோ அவ்வளவுக்குச் சரியாகத் துன்பங்கள் பாசாங்கு செய்பவர்களுக்கு இருந்தன. சைவப் போலிகளான சமணர்கள், 'தாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்ததே,' என்றெண்ணி வருந்தினர் கள்.

மூன்றும் நாள் அரசி வைத்தியசாலைக்கு வந்ததும் புஷ்பநந்தி அரசியை நோக்கி, "அரசி, வைத்தியத்திற்கு வந்த பலரில் சிலர்க்குக் கொடிய முறையும் சிலர்க்குப் பல உதவியும் புரிவானேன்?" என்று கேட்டான். அதற்கு மங்கையர்க்கரசி, "புஷ்பநந்தி உமக்கு உண்மை விளங்கவில்லை போலும்! அவரவர்களுக்குத் தகுந்த வைத்திய முறையே கொடுக்கப்பட்டுள்ளது," என்று கூறி ஓரறையுட் புகுந்து அங்கிருந்த போலிச் சைவனைக் காட்டி, "ஐயா, உம் வயிற்றுவலி இப்பொழுது எவ்வா றிருக்கின்றது?' என்று கேட்டாள். அதற்கவன், "தாயே, மூன்று தினங்களாக உணவும் நீரு மின்றி வருந்துகின்றேன். வயிற்று வலியின் ஞாபகமே எனக்கில்லை. என்னை விட்டுவிட்டால் நான் ஆண்டியாகவேனும் திரிந்து பிழைப்பேன்," என்றான். மற்றும் இரண்டு மூன்று

அறைகளுக்குச் சென்று அங்கிருந்தவர்கள் கூறிய வற்றையும், மங்கையர்க்கரசியும் புஷ்பநந்தியும் கேட்டனர். புஷ்பநந்திக்கு அச்சம் அதிகரித்தமையால் அரசியுடன் பேசவும் நாவெழ வில்லை.

பின், மங்கையர்க்கரசி அனைவர்க்கும் ஆகாரம் அளிக்கக் கட்டளை தந்தனள். அனைவரும் உண்டு உயிர் தப்பினுற் போதுமென்று தத்தம் இடத்தை அடைந்தனர். பின், மங்கையர்க்கரசி புஷ்பநந்திக்குப் பல புத்திமதிகள் கூறிவிட்டு அரண்மனைக்குச் சென்று அரசனிடம் யாவற்றையும் கூறினுள். புஷ்ப நந்தி அதுமுதல் அச்சத்தோடு பிணியாளர்களுக்கு நல்ல மருந்தையே அளித்து வந்தான்.

அத்தியாயம் 12

நெடுமாறன் பரிசீலனை

உமாபதியார் காஞ்சிபுரத்தினின்றும் வந்த பிறகு ஒருநாள் நெடுமாறன் ஒரு பெரிய வர்த்தகன் போல்வேடந் தரித்துச்சென்று அவரைக்கண்டான். வர்த்தகனை அன்புடன் அழைத்து அமரச் செய்து அவன் வந்த காரணம் என்ன என்று உமாபதியார் கேட்டார். வர்த்தகன், "ஐயா, நான் காஞ்சியிலிருந்து வந்திருக்கிறேன். நரசிம்மவர்மனே என்னை அனுப்பினான். நான் ஒரு பெரிய வியாபாரி. நரசிம்மவர்மன் கட்டுங் கோயில்களில் எழுந்தருளும் இறைவன் இறைவிக்குத் திருவாபரணங்கள் வேண்டும் என்றான். சில வற்றைக் கொண்டுபோய் நான் கொடுத்தேன். பாண்டியன் நெடுமாறனோ சமணவலையில் சிக்குண்டு கிடக்கின்றான். ஆதலின், இந்நகரில் எழுந்தருளியிருக்கும் இறைவன், இறைவியின் ஆபரணங்களை எடுத்துக் கொடுத்தால் அவன் பெருவிலை கொடுப்பான். அவற்றை எடுத்துக்கொண்டு உம்மை அழைத்துச் செல்லவே அவனால் அனுப்பப்பட்டு நான் இங்கு வந்தேன்," என்றான்.

அவற்றைக் கேட்டதும் உமாபதியாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவர் பற்களை 'நறு-நறு'வெனக் கடித்தார்; வர்த்தகனை உறுத்து நோக்கினார். பின் அவர், "அடே பாதகா! என்ன துணி

வோடு இங்கு வந்து இத்தகைய வார்த்தைகளைக் கூறி னாய்! உன் நாவினைப் பருந்தெறியாதா! என்னைக் கள வாடி வரும்படி சொன்ன நரசிம்மவர்மன் நா புழுத்து விடாதா! அவன் கட்டும் கோயில்களில் இடி விழாதா! எங்கள் அரசன் நெடுமாறன் சமணனா யிருந்தால் என்ன? சைவனாயிருந்தால் என்ன? எங்கள் குல தெய்வமான மீனாக்ஷி சொக்கநாதரது திருவாபரணங் களையோ நான் களவாடுவது! நன்று! நன்று!! அந்த நரசிம்மவர்மன் இங்கு இருந்தால் எங்கள் அர சன்முன் விடுத்துக் கழுவேற்றி விடுவேன். என்முன் இனி நீ நிற்றல் தகாது. செல்-செல்,'' என்று கடிந்து கூறினார்.

வர்த்தகன் உடனே தன் வேஷம் மாறினான். நெடுமாறன் தம்முன் நிற்பதைக் கண்ட உமாபதியார் ஆச்சரியப்பட்டார். நெடுமாறன் அவரை வணங்கி, "பெரியீர், உம்முடைய தேசப்பற்றும், தெய்வ பக்தி யும், அரசனிடத்து வைத்திருக்கும் அன்பும், நம்பிக் கையும், உம் உள்ளத் தூய்மையும், உண்மைத் தன் மையும் இன்றே வெளியாயின. இனிச் சிறந்த முறை யில் நீர் யாவற்றையும் செவ்வனே நடத்திவருவீராக,'' எனக் கூறி அவர்பால் விடை பெற்று அரண்மனை வந்து சேர்ந்தான்.

பின் ஒருநாள், நெடுமாறன் சமணனைப்போல் வேடந் தரித்து ஒரு சைவ சத்திரத்திற்குட் புகுந் தான். அவனைக் கண்டதும் அங்கிருந்த சைவர்கள் மூலைக்கொருவராய் ஓடுவராயினர். சிலர் திகைத்து

கின்றனர்;சிலர், 'அவர்கள் எங்கும் வருவார்; அவர்கள் அரசன் அன்பைப் பெற்றவர்கள்,' என்றனர். நெடுமாறனாகிய சமணன் அங்குத் துணிவுடன் அமர்ந்திருந்த ஒரு சைவத் துறவியிடம் நெருங்கிச் சென்று, "ஐயா,இவர்கள் என்னைக் கண்டு ஏன் அஞ்சி ஓடுகின்றனர்?" என்று கேட்டான். சைவத் துறவி, "ஐயா, இவ்வூரில் சிலகாலமாகச் சமணர்கள் அதிகமாகிச் சைவர்களைத் துன்புறுத்தி வருகின்றனர். அதனால், அவர்களைக் கண்டால் அஞ்சியோடுவது இயல்புதானே!" என்றான். அதனைக் கேட்ட நெடுமாறன், "அவ்வாறாயின் நீர் ஏன் அவர்களைப்போல் அஞ்சி யோடவில்லை?" என்று வினவினான். அதற்குச் சைவத்துறவி, 'என்ன ஐயா, எல்லாச் சைவர்களுமா ஓடிவிடுவர்! அல்லது எல்லாச் சமணர்களும் துன்புறுத்துவார்களோ! நீர் சமணர்; நான் சைவன். நமக்குள் என்ன பயம் இருக்கிறது?" என்றான்.

நெடுமாறன், "ஐயா, நீர் நல்லறிவு படைத்தவர். இப்போது சமணர்மீதுள்ள குற்றத்தைச் சொன்னீர் சைவர்களிடத்தும் குற்றங்களுண்டோ?" என்று கேட்டான். அதற்குச் சைவத் துறவி, "ஐயா, இல்லாமல் இருக்குமா? வயிற்றுப் பிழைப்பிற்காகத் திரிபவரும் உள்ளார்கள்; உண்மை ஞானம் வரப்பெற்று மெய்த் துறவிகளாய் இருப்பவர்களும் உளர். அவர்களை அறிவது மிகக் கடினம். மற்றும், சமண வேடம் தரித்திருக்கும் உம்மை அரசர் என்று யார் அறிவர்? என்றான்.

நெடுமாறனுக்கு அவன் வார்த்தை வியப்பைத் தந்தது. அத்துறவி தன்னை எவ்வாறு அறிந்துகொண்டான் என்று அவனுக்குப் புலப்படவில்லை. அதனல் நெடுமாறன், "ஐயா, நான் அரசன் என்பதை எவ்வாறு அறிந்தீர் ?" என்று கேட்டான்.

சைவத்துறவி, "ஐயா, நீர் சமணராயிருப்பின் இங்கு வரமாட்டீர். சைவராயின் சைவக்கோலத்தோடு வருவதில் விளைவது ஒன்றுமில்லை. வேறு யார் இங்கு வருவார்கள் ? திருடர்கள் ஆண்டிகளிருக்குமிடத்திற்கு ஏன் வருவர் ? படைவீரனுக்கும் இங்கு வரக் காரணமில்லை. ஆதலால், வேடந் தரித்துவந்தவர் அரசரே என்று கருதுவது பொருத்தமானதே. அதற்கேற்ப நீர் கேட்ட கேள்விகளும் நீர் அரசரென்று நிரூபிக்கின்றன," என்ருன்.

அரசன் அவ்வார்த்தைகளை ஒப்புக்கொண்டு அச்சைவத் துறவியிடம் தர்ம சத்திரங்களைக் காக்கும் முறைகளைப்பற்றி ஆலோசிக்கலானுன். அப்போது அத்துறவி, தான் வளவன் துர்க்கத்திலிருந்து வந்திருப்பதாகவும், கௌணிய முனிவர் முதலாயினேர் உத்தரவு பெற்றே இங்கு வந்து தங்கியிருப்பதாகவும் கூறித் தரும சத்திரங்களைச் சீர்ப்படுத்தச் செந்நில யுத்தத்தில் சிறையாகப் பிடித்த குலச்சிறையை மந்திரியாக்குவதே சிறப்பைத் தரும் என்றும், அன்னுன் தூய சிவபக்தனென்றும், எப்பொழுதும் உண்மை பேசுபவன் என்றும், மற்றும் அவன் மங்கையர்க்கரசிக்கு அண்ணன் முறையுடையவன் என்றும் கூறினர். அவற்றைக் கேட்ட நெடுமாறன் அவ்

வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு அவரை அங்கே யே தங்கி உதவி புரியும்படி வேண்டிக் கொண்டான். அவரும் உதவி புரிவதற்குக் கௌணிய முனிவரின் உத்தரவு பெற்று வருவதாகக் கூறி வளவன் துர்க்கத் திற்குச் சென்றார். அரசனும் அரண்மனையை யடைந் தான்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

அத்தியாயம் 13
குலச்சிறை

மறுநாள் அரசனும், அரசியும் தாம்தாம் கண்டறிந்தவற்றை ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்டனர். சமணர்கள் தீங்கு செய்துவந்தனர் என்பது இருவர்க்கும் நன்கு விளங்கிற்று. அதன்மேல் அவர்கள் யாது செய்வதென ஆலோசிக்கலானார். சைவத் துறவி கூறியபடி குலச்சிறையை முதன்மந்திரி யாக்குவதென எண்ணி, அரசன் மங்கையர்க்கரசியை நோக்கிக் குலச்சிறையைப்பற்றி அவள் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளாள் என்பதைக் கேட்டான். மங்கையர்க்கரசி, அவன் மிகவும் நல்லவன் என்றும் சிறந்த அறிவுடையவன் என்றும் கூறி, அவனைக் காணும்போதெல்லாம் தனக்கு அகாரணமாய் ஒரு வகைப் பற்றுண்டாகிறதென்றும் கூறினாள். அதனைக் கேட்ட மன்னன், 'குலச்சிறை மங்கையர்க்கரசிக்கு அண்ணன் முறை,' என்று கௌணிய முனிவர் கூறியதாகத் தான் சைவத் துறவியிடம் கேள்விப்பட்டதைச் சொன்னான். பின் குலச்சிறையை அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

குலச்சிறை மதுரையை யடைந்த நாள்முதல் அரண்மனைக் கணக்கும், அரசாங்கக் கணக்கும் பார்க்குந் தொழிலில் இருந்து வந்தான். அவன் நெறி பிறழாது சைவ மதத்தைத் தழுவி வந்தான். மறந்தும் அவன் நா பொய் கூறாது. அரசிக்கு அவனைக் காணுந் தோறும் ஒருவகை அன்பு உண்டாகும்.

அரசனேவலால் குலச்சிறையைப் பணியாளர் அழைத்து வந்தனர். அப்போது சிலர் ஒரு திருடனை அழைத்துவந்து அரசன்முன் விட்டனர். அரசன் குலச்சிறையை விசாரித்து நீதி செலுத்தும்படி கட்டளையிட்டான். குலச்சிறை திருடனை விசாரித்து அவனிட மிருந்த 'தோடு' என்னும் ஆபரணத்தைக் கையில் வாங்கிக்கொண்டு மற்றைய ஆபரணங்களைக் கொண்டுவந்து கொடுத்தால் தண்டிக்காமல் விட்டு விடுவதாகக் கூறினன்.

"அவ்வாறு செய்ததின் காரணம் என்ன?" என்று அரசன் குலச்சிறையைக் கேட்டான்.

அதற்குக் குலச்சிறை, "திருடனது கையிலிருந்த தோடு என்னும் இவ்வாபரணத்தைப் பெற்றதும் நான் நன்ருய் உற்று நோக்கினேன். அதில் சிலந்தியின் உருவம் எழுதப்பட்டிருந்தது. சேர மன்னன் நான் சிறைப் பட்டுவந்த பின் என் மனைவியின் ஆபரணங்களை யெல்லாம் விற்ருன். அவற்றை வாங்கினேரிடமிருந்து இவன் திருடி வந்திருக்க வேண்டும் என்று அறிந்தேன். என் மனைவி இறந்து நெடுநாட்களாயின. ஆதலின், அவள் தரித்திருந்த ஆபரணங்களை நான் அரண்மனையில் வைத்திருந்தேன். இத்தோடு எங்களுக்கு மிக்க பழமையானது. இது போன்ற தோடு ஒன்று தங்கள்தேவியிடத்துமட்டுமே யுள்ளது. தேவியின் காதில் தோட்டைக் காணும் போதெல்லாம் என் மனத்தில் தோன்றும் அன்பால் தேவியார் என் சகோதரியாக இருக்கவேண்டுமென்று நினைப்பேன். ஆனல், சிறைப்பிடிக்கப் பட்ட

நான் அதனை எங்ஙனம் வெளியிடுவேன்? நான் சோழர் குலத்தவன். கூற்றுவனுயனுர் தில்லையில் முடி சூட்டப்பெற்ற பொழுது அச்சோழமன்னர்களுள் ஒருவன் சேரநாடடைந்து சேரனிடம் சேனுபதியாக அமர்ந்தான். அவன் குலத்தில் நான் தோன்றினேன். ஒரு சிலந்தி சிவலிங்கத்தைச் சுற்றி வலைகட்டி வந்தது. யானை ஒன்று நீர்கொண்டு தினந்தோறும் சிவலிங்கத் திற்கு அபிடேகம் செய்து வந்தது. தினந்தோறும் சிவலிங்கத்தின்மீது சிலந்தி வலைகட்டி யிருத்தலைக் கண்டு யானை வருந்தியது. தான் தினந்தோறும் கட்டும் வலையை யழிக்கும் யானைமீது சிலந்தி கோபங் கொண்டு ஒரு நாள் யானையினுடைய துதிக்கையின் புழையில் புகுந்து குடைந்தது. அதனுல் வலி பொறுக்கமாட்டாத யானை ஒரு பாறையின்மீது துதிக்கையை ஓங்கிப் புடைத்தது. அப்பொழுது யானையும் சிலந்தியும் இறந்தன. அச்சிலந்தியே கோச்செங்கணுகப் பிறந்தது. தோட்டில் சிலந்தியின் உருவம் எழுதப்பெற்றிருத்தற்குக் காரணம் இதுவே. பிற வாபரணங்களையும் திருடனிடமிருந்து பெற்றுத் தேவிக் களிக்கவே அவனை விடுத்தனன்,'' என்முன்.

அரசன், தேவியின் தோட்டிலும் சிலந்தியின் உருவம் தீட்டப் பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந்து மங்கையர்க்கரசியோடு கலந்து ஆலோசித்துக் குலச்சிறையை முதன் மந்திரி யாக்கினுன்.

அதுவரையிலும் முதன் மந்திரியாயிருந்த புஷ்ப நந்தியின் மகன் வருந்தித் தான் தவறென்றும் செய்யவில்லை என்றும், தன்னை நீக்கிவிடுதல் தகா

தென்றும், தந்தையும் தானும் பாண்டிய நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்து வருவதாகவும் கூறினான். அப்போது அரசன், தேவியின் வாய்மொழியால் கேட்டறிந்ததையும், தான் நேரிற் கண்டதையும் சமணர்கள் செய்யும், அக்கிரமங்களையும் கூறிப் புஷ்பநந்தியை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அத்தருணத்தில் மங்கையர்க்கரசி வெளியே சென்று ஆண்டி வேடம் தரித்து மீண்டு வந்து அரசன் அனுமதி பெற்று ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். புஷ்பநந்தி வந்ததும் அரசன் அவனை நோக்கி, "இப் பெரியாரின் நோயை எவ்வித மகற்றினீர்? என்று கேட்டான்.

புஷ்பநந்தி, "இப்பெரியார் என்னிடம் வந்து மீளுகையில் மயங்கி விழுந்தார். அப்பொழுது நான் சில மந்திரங்களைச் சொல்லிக் குணப் படுத்தினேன்," என்றான்.

அப்போது ஆண்டி, எழுந்து "நான் மயங்கியிருந்தபோது சில உண்மைகளை அறிந்தேன். நான் துயிலொழிந்ததும் ஊமத்தைப் பூவின் பொடியைப் பாலில் கலந்து கொடுக்கும்படி புஷ்பநந்தி தந்து சேனனுக்குக் கட்டளையிட்டுச் சென்றார். ஊமத்தை பைத்தியத்தை அதிகப்படுத்தும் என்பதை நான் அறிவேனாதலின் உட்கொள்ளாது வந்து விட்டேன்,' என்றான்.

அரசன் புஷ்பநந்தியை நோக்கி, "இவர் கூற்று மெய்யேயோ?" என்று கேட்டான்.

புஷ்பநந்தி சற்று ஆலோசித்து, "அந்த மருந்தின் குணத்தை இவர் அறியார். அது எத்தகைய மயக்கத்தையும் போக்க வல்லது," என்று அஞ்சாது பொய் புகன்றான்.

அந்நிலையில் அங்கிருந்த குலச்சிறை தன் வாளை ஓங்கிப் புஷ்பநந்தியை வெட்டச் சென்றான். அதனைக் கண்ட முதன் மந்திரியான புஷ்பநந்தியின் புதல்வன் தந்தை இறந்தான் என்றெண்ணி மூர்ச்சித்து மயங்கிக் கீழே விழுந்தான். அப்போது குலச்சிறை புஷ்பநந்தியைப் பார்த்து, "நன்று! வைத்தியரே, இப்பொழுது பாலில் ஊமத்தையைக் கரைத்துக் கொடுத்து மயக்கத்தைப் போக்கும்," என்றான். புஷ்பநந்தி ஒன்றும் சொல்லவும், செய்யவும் தோன்றானாய்த் திகைத்து நின்றான். பின்னர், அங்குள்ளோர் நீர் தெளித்து முதன் மந்திரியை மயக்கத்தினின்றும் நீக்கினர்.

அப்போது அவ்விடத்திலேயே மங்கையர்க்கரசி தன் வேடத்தைக் களைந்து நின்றாள். அவனைக் கண்ட புஷ்பநந்தி, "ஆ, கெட்டேன்!" என்று கூறித் திகைப்படைந்தான். பின் அரசன் அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி யனுப்பினான். அது முதல் குலச்சிறை முதன் மந்திரியானான்.

அத்தியாயம் 14

திருஞானசம்பந்தர்

சோழ வளநாட்டிலே, சீர்காழிப் பதியிலே அந்தணர் குலத்தில் கௌணிய மரபில் சிவபாத விருதயருக்கும், பகவதியாருக்கும் அருந்தவப் புதல்வராய்த் திருஞான சம்பந்தர் அவதரித்தார். ஞானசம்பந்தப் பிள்ளையார் தம் மூன்றும் வயதில் தந்தையாரோடு குளக்கரைக்குச் சென்றார். அங்குத் தந்தையார் புதல்வனாரைக் கரையிலே அமர்வித்து நீராடும் போழ்தில் தந்தையாரைக் காணாமையினால் பிள்ளையார் வேதநெறி தழைத் தோங்க, மிகு சைவத் துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந் தழுதார். திருத்தோணியப்பர் உமையோடு வந்து தோன்றி, அம்மையாரைப் பாலூட்டும்படி கூற, அம்மையார் பொன் வள்ளத்தில் பால் கறந்து ஞானத்தைக் குழைத்தூட்டி அழுகையை நிறுத்தி மறைந்தார். நீரில் மூழ்கிய தந்தையார் வெளிப்போந்து மதலையின் வாயில் பால் வடிந்திருத்தலைக் கண்டு, கையில் சிறுகோல் கொண்டு ஒச்சி, "இவ்வெச்சில் யாரூட்டினார்?" என்று வினவுதலும், 'தோடுடைய செவியன்' எனப் பதிகம் பாடித் தோணிபுரத்துக் கோயிலைக் காட்டினார்.

அதுமுதல் ஞானசம்பந்தர் தலங்கள்தோறும் சென்று பதிகம் பாடி வருவாரானார். இறைவன் திருவருளால் பொற்றாளம் பெற்றும், பொற்சிவிகை பெற்

றும் ஞானசம்பந்தர் இறைவன் திருவருட்டிறனை உலகிற்கு விளக்கிக்காட்டி வந்தார். திருநாவுக்கரசரும் தலங்கள்தோறும் சென்று பதிகம்பாடி வந்தனர். திருச்செங்காட்டங் குடியில் சிறுத்தொண்டர் இறைவனடியாருக்குப் பிள்ளைக்கறி சமைத்து அமைத்து இறைவனருளுக்குப் பாத்திரரானர். சோழநாட்டில் சைவம் நாடோறும் சீரும் சிறப்பும் பெற்று ஓங்குவதாயிற்று. அப்பெரியார்களின் அரும் பெருஞ் செயல்களை யெல்லாம் குலச்சிறையும், மங்கயர்க்கரசியும் அறிந்திருந்தனர். ஞானசம்பந்தரைக் காணவேண்டும் என்னும் பேரவா அவர்களுக்கு மிக்கிருந்தது.

திருஞானசம்பந்தர் தம் பரிவாரங்களுடன் வேதாரணியம் முதலான தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருக்கொடுங்குன்றத்திற்கு வந்தார். அவர் அங்கிருந்து மதுரைக்கு வரப்போகின்றார் என்பதை கேட்டறிந்த மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையும் அளவிலா மகிழ்ச்சி யடைந்தனர். ஞானசம்பந்தர் வருகை சமணமதத்தை அழித்துவிடுமோ என்னும் அச்சம் சமணர்களுக்கு இருந்தது. அதனல் சமணர்கள் அவர் வருகையை வெறுத்தனர்.

திருஞானசம்பந்தர் திருக்கொடுங் குன்றத்தினின்றும் புறப்பட்டு மதுரையை நோக்கிப் பரிவாரங்களுடன் வந்துகொண்டிருந்தார். அவர் வருகையை அறிந்த குலச்சிறையார் எதிர்சென்றழைத்து வந்து ஒரு மடத்தில் தங்கச் செய்தார். மங்கையர்க்கரசியும் ஞானசம்பந்தரை நேரிற் கண்டு பணிந்தனர்.

இவற்றை யெல்லாம் அறிந்த சமணர்கள் பொறாமை கொண்டு இரவில் ஒருவரும் அறியாத போழ்து அம் மடத்தில் தீ வைத்தனர். அதனை யறிந்த அடியார்கள் ஞானசம்பந்தரிடம் சொல்ல, அத்தீ அரசனைப்பற்று மாறு ஒரு பதிகம் பாடினார். அதுமுதல் அரசனுக்குக் கொடிய வெப்பு நோய் கண்டது.

நோய் மன்னனை மிகவும் வருத்திற்று. சமணர் களிற் சிறந்த வைத்தியர்களை எல்லாம் அழைத்தும் பிரயோஜனப்படாமற் போயிற்று. அங்கிலையில் சமணர்கள் வந்து சம்பந்தர் தங்கள் மதத்தைக் குற்றங் கூறுவதாக முறையிட்டுக் கொண்டார்கள். அரசன் தன்நோயை யார் நீக்குகிறார்களோ அவர் கள் மதமே உண்மையானதென்று கூறினான். அதனால் ஞானசம்பந்தரையும் அரண்மனைக்கு அழைத்துவந் தனர். சம்பந்தர், அரசனைப் பார்த்து, "அரசே, இச் சமணர்களே உமது நோய்க்குக் காரணமானவர் என் பதை யறியாது முழுப் பொய்யர்களான அவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றீரே! அதனால் அவர்களை உம் எதிரில் வெல்ல வந்திருக்கின்றேன். அவர்கள் மதம் உண்மையானால் உமக்கு வந்திருக் கும் நோயை நீக்கட்டும்," என்றார்.

அரசனும் அவ்வாறே நீக்குமாறு சமணர்களுக் குக் கட்டளையிட்டான். அவர்கள் நெடுநேரம் முயன் றும் சிறிதும் பயன் இன்மை கண்ட அரசர் ஞானசம் பந்தரை நோக்கி, இவர்கள் இந்நோயைப் போக்கும் வரை அதனைத் தாங்கியிருக்கத் தன்னால் இயலா

தென்றும், சம்பந்தர் ஒருபுறமும், அவர்கள் ஒரு புறமுமாக இருந்து நீக்க முயலுதல் நலம் எனவும் கூறச் சம்பந்தர் அரசன் உடலில் ஒரு பாகத்தில் இறைவனை வழுத்தி, விபூதி கொண்டு பூசினார். அவ்விடத்திலிருந்த வெப்ப நோய் நீங்கி மற்றொரு புறத்தில் மிகுந்தது. மற்றொரு பக்கத்தில் சமணர் செய்த சிகிச்சை யெல்லாம் பயனிலவாயின. அவர்கள் கையிற்கொண்டு தடவிய பீலிக் கற்றைகளெல்லாம் வெப்பத்தால் கரிந்துபோயின. அரசன் அப்பக்கத்தின் நோயைத் தாங்கமாட்டாதவனாய் ஞானசம்பந்தரை அப்பக்கத்திலும் விபூதியைத் தடவிக் குணப்படுத்தும்படி வேண்டிக் கொண்டான். அவரும் அவ்வாறே செய்ய நோயும் நீங்கிற்று. அரசன் எழுந்தமர்ந்து சமணமதம் பொய் என்றும், சைவ சமயமே மெய்ச்சமயம் என்றும் வியந்து புகழ்ந்தான்.

அரசன் கூறியதைக் கேட்டுச் சமணர் இடியோசை கேட்ட நாகம்போல் உட்குழைந்து நின்றனர். அவர்களுக்குத் தலைவன் மாறனுக்கு முன் வந்து, "அரசே, நாங்கள் சமண மதக் கொள்கைகளை, ஏட்டில் எழுதுகின்றோம். சம்பந்தரும் சைவமதக் கொள்கைகளை ஓரேட்டில் எழுதிக் கொடுக்கவேண்டும். இருவர் ஏடுகளையும் நெருப்பில் இடுங்கள். அவைகளில்எது எரியாமலிருக்கின்றதோ அது கூறும் மதமே உண்மையானது," என்றனர். அதற்குச் சம்பந்தரும் சம்மதித்தார். இருவரும் ஏடுகளை எழுதி நெருப்பில் இட்டனர். சம்பந்தரிட்ட ஏடு எரிந்து போகாமலிருக்கச் சமணர்கள் ஏடு எரிந்து சாம்பராயிற்று. பின் சமணர்

கள் அரசனை நோக்கி, "மற்றொரு பரீக்ஷை செய்கின்றோம். அதிலும் நாங்கள் தோற்றுப்போனால் நாங்களே கழுவேறுகின்றனம். இருவர் ஏடுகளையும் வைகையில் இடுவோம். எவ்வேடு எதிர்நோக்கிச் செல்கின்றதோ காண்போம்," என்றனர்.

அவ்வாறே ஏடுகள் எழுதி வைகையி லிடப்பட்டன. சமணர்களிட்ட ஏடு வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகச் சம்பந்தர் ஏடோ எதிரேறிச் சென்று திருவேடகம் என்னும் இடத்தில் கிற்க எடுத்துவரப்பட்டது. அனல் வாதத்தாலும், புனல் வாதத்தாலும் தோல்வியுற்ற சமணரிற் பல்லோர் தாமே கழுவேறி யுயிர் துறந்தனர். சிலர் சைவராயினர்.

பாண்டி நாடெங்கும் சம்பந்தருடைய பெருமை பரவியது. மக்கள் திரள் திரளாக வந்து சம்பந்தரைக் கண்டு செல்வாராயினர். சம்பந்தர் பலநாள் பாண்டி நாட்டிலிருந்து பின் தம் தலயாத்திரையைச் செய்வாரானார். பாண்டி நாட்டில் சமணர்கள் குறையவே சைவம் தழைத் தோங்கலாயிற்று. அரசனும் சைவ நெறிபற்றி ஒழுகுவானானன்.

குலச்சிறை சில வருடங்கள் கழிந்தபின் சிவயோகியாகிக் காட்டிற்குச் சென்றான். இறைவன் திருவருளால் மங்கையர்க்கரசி ஓர் ஆண் மகவைப் பெற்று அக்குழந்தைக்குச் சடையன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தாள். அவன் பெரியவனாகிப் போர்க்களத்தில் இடைவிடாது தன் வீரத்தைத் தோற்றுவித்ததால் அவனை அனைவரும் 'இரண

தீரன்,' என்று அழைத்து வந்தனர். பதினெட்டு வயதானதும் மங்கையர்க்கரசி அவனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்தாள். பின் சில காலத்திற்குள் அவள் இறைவன் திருவடி நிழலை அடைந்தாள்.

மங்கையர்க்கரசியின் பிரிவால் நெடுமாறன் மிக வருந்தினன். ஆயினும் ஒருவாறு தேறுதல் அடைந்து வாழ்ந்துவந்தான். அக்காலத்தில் அவன், தான் ஏற்படுத்திய சங்கத்தின் மூலமாகப் பல பெரும் புலவர்களை ஆதரித்து வந்தான். முசிரி ஆசிரியர் நீலகண்டனர் இறையனாரகப்பொரு ளிலக்க ணத்திற்கு இலக்கியமாக நெடுமாறன் மீது கோவை என்னும் பிரபந்தம் பாடினர். அக்கோவைச் செய் யுட்களே இறையனாரகப் பொருட் சூத்திரங்களுக்கு உதாரணச் செய்யுட்களாக அமைக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 15

நெடுமாறனும் கோதையும்

ஒருநாள் நெடுமாறன் பற்பல விஷயங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கையில் ஒரு சேவகன் வந்து வளவன் துர்க்கத்திலிருந்து வந்த ஆண்டி ஒருவன் மன்னனைக் காண வந்திருப்பதாகக் கூறினர். அரசன் அவனை உள்ளே அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அச்சேவகனும் சென்று ஆண்டியை அழைத்து வந்தனன். ஆண்டி அரசனை வணங்கி ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில் நெடுமாறனைக் காணவேண்டும் என்னும் விருப்பம் செங்கதிர்ச்சென்னிக்கு இருப்பதாகவும், குலச்சிறையும், கௌணிய முனிவரும் வளவன் துர்க்கத்தில் இருப்பதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் செங்கதிர்ச் சென்னியின் கைநாட்டும் இருந்தது. அக் கடிதத்தைக் கண்ட நெடுமாறன் உடனே வளவன் துர்க்கத்திற்குப் போகப் புறப்பட்டான்.

நெடுமாறன் இரண்டு வீரர்களுடன் குதிரை மேலேறிச் சென்றான்; குதிரைகளைக் கடிது நடத்தி இரண்டு தினங்களில் வளவன் துர்க்கத்தை அணுகினன். முன் மாறாற்றின் கரைகளில் காவல் செய்து கொண்டிருந்த வனசரர்கள் அப்பொழுது அங்கு இல்லை. முன்போல மான் கூட்டங்களும் காணப் படவில்லை. செங்கதிர்ச் சென்னியின் வீடிருந்த

இடத்தில் ஒரு சிறு குடிசையே காணப்பட்டது. மங்கையர்க்கரசியோடு ஓடி ஆடிய குன்றத்தின் மரங் களின் கீழே சிற்சில இடங்களில் கற்பீடங்களே காணப்பட்டன. அவைகளுக் கருகில் சிறு குழிகள் சாம்பல் நிறைந்தனவாய்க் காணப்பட்டன. ஆற்றில் நீர் முன்போலவே தெளிந்து தண்ணென்று மதுர முடையதாக இருந்தது. மாடுகள் அந்த ஆற்றில் நீர் குடிக்க வருவதுண்டு என்பதையே அங்குத் தோன் றிய மாடுகளின் அடிச் சுவடுகள் நினைப்பூட்டின.

நெடுமாறனும், இரு வீரரும் அவ்விடத்தே வந்து கொண்டிருக்கையில் இருவர், நீர்க் குடங்களைக் கையில் ஏந்திக்கொண்டு வருவதை நெடுமாறன் கண் டான். அவர்கள் வயது முதிர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்களை நெடுமாறன் கண்டதும் அவர்கள் செங்கதிர்ச் சென்னியும், குலச்சிறையுமே என்று நன்கறிந்துகொண்டான். அவர்கள் அவ் வாறு கஷ்டப்படுவதைக் கண்டு அவன் மிக வருந் தினன்.

செங்கதிர்ச்சென்னி நெடுமாறனை அங்கிருந்த ஒரு கற்பீடத்தின்மீது அமர்த்திப் பல உபசார மொழிகள் புகன்றான். பின் அவன் நாட்டின் க்ஷேம லாபங்களைப்பற்றியும் விசாரித்தான்.

செங்கதிர்ச் சென்னியின் கேள்விகளுக் கெல் லாம் நெடுமாறன் தக்க விடை கூறினன்; பின், அவர் கள் அக்குடங்களில் நீர் முகந்து செல்லும் காரணம் யாதென வினவினன். அதற்குச் செங்கதிர்ச்சென்னி

"மாறனே, நானும், குலச்சிறையும், கௌணிய முனிவரும் இவ்வளவன் தூர்க்கத்திலேயே இன்புற்றிருக்கின்றோம். நான் முனிவன் ஆவதற்கு முன் செய்து வந்த தொழிலைக் கானற்பாடி காத்தான் செய்து வருகின்றான். அவன், இக்குன்றத்திற்குப் பின்புறத்தில் ஓரரண் அமைத்துக் கொண்டு வாழ்கின்றான். அவன் எல்லோராலும் விரும்பப்பட்டுச் சிறப்புற்றிருக்கின்றான். மங்கையர்க்கரசியின் தோழியாகிய கோதையை அவன் மணந்து இன்புற்று வாழ்கின்றான். அவனுக்கு நான்கு ஆண் மக்களும், ஒரு பெண் குழந்தையும் உண்டு. எங்கள் நலத்தைக் காத்தனும், மற்றக் குறுநில மன்னர்களும் நன்கு கவனித்து வருகின்றனர். கோதையின் மகள் இளங்கோதை. அவளுக்கு இன்னும் ஒரு வாரத்தில் மணம் நடக்கும். சீயன் மகன் நாணனுக்கே இளங்கோதை வாழ்க்கைப்படப் போகின்றாள். இக்குடங்களில் கொண்டு செல்லும் நீர் அபிஷேகம் செய்வதற்கே. நான் பூசை செய்யும் தெய்வத்தையும் இனி நீ காணவேண்டும். ஆதலின் எங்களுடன் வருக," என்று கூறி அழைத்துச் சென்றனன்.

செங்கதிர்ச் சென்னியும், குலச்சிறையும், நெடுமாறனும், மற்றவரும் சிறிது தூரம் நடந்து வந்து புதியதாய்க் கட்டப்பட்டிருந்த ஒருகோயிலை அடைந்தார்கள். செங்கதிர்ச் சென்னி கோயிற் கதவுகளைத் திறந்தான். நெடுமாறன் அக்கோயிலுள் எழுந்தருளியிருந்த சிலை சிவபெருமானையோ, முருகனையோ,

திருமாலையோ குறிக்காமையைக் கண்டு ஆச்சரிய முற்ருன். அப்பொழுது செங்கதிர்ச் சென்னி நெடு மாறனை நோக்கி, "இச்சிலை கோச்செங்கணுரைக் குறிப்பதாகும்; அவர் வம்சத்திலே தோன்றிய நானும், குலச்சிறையும் இதனைப் பூசித்துக் கொண் டாடுகின்றேம். திருவிழாவும் நடை பெறுகின்றது. திருவிழாக் காலங்களில் சிவனடியார்கள் பலர் இங்கே வருவர். அப்போது, அப்பர், சம்பந்தர் திருப்பாடல்கள் ஓதப்படுகின்றன. அவ்வாறு ஓது பவர்கள் சந்நியாசிகளே. அவர்கள் உன்னுடைய தர்மசாலைகளையும் அறிவார்கள். அவர்கள் ஓதுகின் றவர்கள், ஆகையால் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு ஓதுவான் பட்டி என்று பெயரிடப் பட்டுள்ளது," என்ருன்.

இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக் கொண்டி ருக்கையில் கோதை, தோழிமார் சிலருடன் பழவர்க் கங்களையும், உணவுப் பொருள்களையும் எடுத்து வந்து நெடுமாறனையும், அவனுடன் வந்தவர்களையும் அவை களை யுண்ணும்படி அவர்கள் வேண்டிக் கொண்ட னர். நெடுமாறனும், அவனுடன் வந்தவர்களும் அவற்றை யுண்டனர். அவர்கள் உண்ணும்பொழுது தோழியர் இருவர் மயில் விசிறிகொண்டு வீசினர். மன்னன் அவர்கள் அன்பைக் கண்டு மகிழ்ந்தான். "நான் இங்கு வந்ததை இவர்கள் எவ்வா றறிந்தார் கள்?" என்ருன் நெடுமாறன். அதனைக் கேட்ட கோதை. "அரசே முன் ஒரு காலத்தில் நாங்கள் அறியாமலிருக்கும் பொழுது நீர் வந்தீர்.—இப்பொ

ழுது நீங்கள் அறியாமலிருக்கும் பொழுது நாங்கள் வந்து விட்டோம்,'' என்றாள்.

நெடுமாறன்—கோதாய், நீ சாதுரியமாக விடை கூறினாய். அப்பொழுது நான் மறைந்து வந்து திருடன் கவர்ந்து செல்வது போல் உங்கள் செல்வமாகிய மங்கையர்க்கரசியைக் கொண்டு போனேன். இப்பொழுது நீங்கள் வந்து எதைக் கொண்டு போவீர்கள் ?

கோதை—நாங்கள் பாண்டிநாட்டரசரைப் பதினைந்து நாள்வரை மதுரைக்குச் செல்ல விடமாட்டோம்.

நெடுமாறன்—நான் எடுத்துச் சென்ற செல்வத்தை இழந்து விட்டேன். நீங்கள் எடுத்துச் செல்லும் செல்வத்தையும் இழந்து விடுவீர்களே!

கோதை—நீர் எங்களிடமிருந்து கொண்டு போன செல்வத்தை நாங்கள் திரும்பம் பெற்றுக் கொண்டோம்.

நெடுமாறன்—நீ சொல்லுவது விளங்க வில்லையே !

கோதை—நான் தங்களை ஓரிடத்திற்கு அழைத்துக் கொண்டு செல்கிறேன். அங்குச் சென்ற பின்னர் யாவும் உமக்கு விளங்கும்.

பின், சிறிது நேரம் சம்பாஷணையிற் கழிந்தது. கோதையும், நெடுமாறனும், பிறரும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டனர். கோதை அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு கோயிலை அடைந்தாள். கோயிற் கதவு திறக்கப்பட்டது. நெடுமாறன் உட்

சென்று அங்குத் தாபிக்கப்பட்டிருந்த சிலையைப் பார்த்ததும் அது மங்கையர்க் கரசியின் உருவச்சிலை என்று நன்கறிந்து கொண்டான். நெடுமாறன் கண்களில் நீர் பெருகியது.

"கோதாய், உன்னுடைய அன்பின் மாட்சியை என்னென் றுரைப்பேன். உத்தம நட்பினர்களாய் வாழ்ந்த உங்கள் அன்பன்றோ தலையாய அன்பு!" என்று கூறி நெடுமாறன் பிறிதொன்றும் பேசவறியானாய் மௌன முற்றிருந்தான்.

பின் நெடுநேரம் வரை எல்லோரும் பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். நெடுமாறன் தன் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சங்கத்தை எவ்வாறு மேன்மை பெற்றுத் திகழுமாறு செய்வதென்பதைப்பற்றிக் கௌண்டிய முனிவரைக் கேட்டான். அவரும் பற்பல நெறிகளை நெடுமாறனுக்கு விளங்க எடுத்துரைத்தார். பொழுது கழிவது கண்டு பின் எல்லோரும் எழுந்து காத்தன் இருப்பிடம் நோக்கிச் சென்றனர்.

———

அத்தியாயம் 16

இளங்கோதைத் திருமணம்

காத்தன் வாழிடத்தை அடைதற்காகப் பல குன்றங்களையும், மலைச்சரிவுகளையும், பள்ளத்தாக்குகளையும் கடந்து நெடுமாறன், செங்கதிர்ச் சென்னி, குலச்சிறை, கோதை முதலியோர் வந்தனர். அவர்கள் வரும் வழிகளில் வானளாவி வளர்ந்து, தழைத்துத் பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்கும் பல்வகைப் பழங்களைத் தரும் மரங்களையுடைய சோலைகள் நிறைந்திருந்தன. அவர்கள் அவற்றையெல்லாம் கடந்து ஒரு பெரிய பீடபூமியை அடைந்தனர். அங்குத்தான் காத்தன் வாழும் அரண் அமைந்த மனை இருந்தது. அவர்கள் வருகையை யறிந்த காத்தன் முன் சென்று வரவேற்று உபசரித்தான். அவர்களுக்குச் சிற்றுணவளித்து முகமன் கூறி நலன்பலவும் வினவினன். நெடுமாறன் இளங்கோதையைக் காண விரும்பினன். காத்தன் அவளை அழைத்து வந்து வணங்கச் செய்தலும் நெடுமாறன் தன் புதல்வியைக் கண்டவன்போல மனமகிழ்ந்தான்.

காத்தன் புதல்வர்கள் நால்வர்களையும் கண்டு அவர்களைத் தன் நாட்டிற்கு அழைத்துச்சென்று போர் வீரர்களாக்க மாறன் எண்ணினன். அப்பொழுது கௌணிய முனிவர், "மாறனே, ஒருவன் கானற்பாடியில் இருக்கவேண்டும்; ஒருவன் காத்தனுக்கு உதவியாய் அவன் பக்கலில் இருக்கவேண்டும்;

மற்ற இருவரையும் நீ அழைத்துச் செல்லலாம்,'' என்றார். அதற்குக் காத்தனும் சம்மதித்தான். காத்தன் இளங்கோதையின் மணம் முடியும்வரை நெடுமாறனை அங்கேயே தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டான். மாறனும் அதற்குச் சம்மதித்துக் காத்தன் விருந்தினனாகச் சிலநாட்கள் வரையிலும் அங்குத் தங்கியிருந்தான்.

இளங்கோதையின் மணத்திற்காக வேண்டுவன வெல்லாம் சேகரிக்கப்பட்டன. காத்தன் மாளிகைக் கெதிரே பந்தரிட்டு அலங்கரிக்கப்பட்டது. வாழை, கமுகு முதலிய மரங்கள் பந்தலில் நாட்டப்பட்டன. குறுநில மன்னர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர். அவரவர்களுக் கேற்றவாறு காத்தன் இருப்பிடங்கள் அளித்து உபசரித்தான்.

ஒருநாள் கோதை மாறனிடம் வந்து "ம்ன்னவ' எங்கள் மணமுறை உங்களுக்குப் புதுமுறையாகவும், விநோதமாகவும் இருக்கும். இன்றைய தினம் இளங் கோதையின் கணவனாக வரிக்கப்பட்டுள்ள நாணனுக் கும், என் புதல்வருள் ஒருவனுக்கும் போர் நடக் கும். அந்தப் போரில் நாணன் வெற்றி பெற்றாலன்றி இளங்கோதையை அவன் மணக்க முடியாது. நாணனை விட என் மக்கள் பலமிகுந்தவர்கள். ஆதலால் என் மகன் தோல்வியுற்றவன்போல் பாசாங்கு செய் வான். பின் சில வேடிக்கைகள் நடக்கும். அவற்றை யெல்லாம் நீர் பார்க்கவேண்டும்,'' என்று கூறி மாறனை அழைத்துக்கொண்டு ஒரு வெளியிடத்திற் குச் சென்றான். அங்கு இடப்பெற்றிருந்த ஓர் ஆத

னத்தில் மாறன் அமர்ந்தான். அவனுக்கு இருபுறங்களிலும் குறுநில மன்னர்கள் அமர்ந்திருந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் நாணன் வேட்டைக்குச் செல்பவன்போல் வேடந்தரித்து அங்கு வந்தான். அவனைத் தொடர்ந்து இளங்கோதையின் தோழி ஒருத்தி வந்தாள். அவள் அவனைப் பார்த்து "வேந்தே, நீ செய்தது முறையன்று; நீ இங்கே வந்தது வேட்டை யாடுவதற்கென்பதை மறந்தாய் போலும்! நீ எங்கள் தலைவியைக் கவர்ந்துகொண்டது அறமாமோ? உன் செய்கை அவள் அண்ணனுக்குத் தெரியின் அவன் உன்னோடு போர்புரிந்து உன்னை வீர சுவர்க்கம் புகும்படி செய்வான். ஆதலின் நீ இங்கு வராதே. உன் நாடு நோக்கிச் செல்," என்று கூறினாள். அவைகளைக் கேட்ட நாணன், "என்னை யாவன் என்று நினைத்தாய்? இளங் கோதையை நான் அழைத்துச் செல்லும்பொழுது யாவர் என்னைத் தடுப்பினும் அவர்கள் என் வாளுக்கு இரையாவர் என்பதை நீ அறிவாய்! ஆதலின் என்னைப்பற்றி நீ கவலை கொள்ளாதே," என்று கூறினான்.

சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருந்த இளங்கோதை திடீரென நாணனை யடைந்து. "மன்ன, ஆபத்து வந்துவிட்டதே! என் அண்ணன் வாளெடுத்து வருகின்றான்!" என்று அஞ்சியவள்போல் கூறினாள்.

நாணன் அவளுக்குத் துணிவுடை மொழிகள் கூறி முடிப்பதற்குமுன் இருளனும் அவனை நெருங்

கினுன். இருவருக்கும் சிறிது வாக்குவாதம் நடந்தது. பின் இருவரும் போர்புரியத் தொடங்கினர். சிறிதுநேரம் போர் நடந்தது. அப்போரின் முடிவில் இருளன் தோல்வியுற்றவனைப்போல் நின்று, "குரிசில், நீ நல்ல வீரன்; இனி இளங்கோதையை நீ மணந்து கொள்வதில் தடையில்லை," என்றான். அவர்கள் இளங்கோதையின் தந்தையிடம் சென்று மணம் பேசி முடித்துக் கொள்ளப் போனார்கள்.

பின்னர், குறுநில மன்னர்களனைவரும் சென்று காத்தனிடம் நாணனைப்பற்றிப் புகழ்ந்து கூறினர். எல்லோரும் நாணனுக்கு இளங்கோதையை மணம் புரிவிப்பதே தகுதியுடையதென்றனர். இந்நிலையில் நாணன் இளங்கோதையுடன் வந்து காத்தனையும், கோதையையும் வணங்கி மகட்கொடை நேருமாறு கேட்டான். அவர்கள் சம்மதிக்க முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. பின் அனைவரும் விருந்துண்ண அழைக்கப்பட்டனர்.

அப்போது கோதை எழுந்து, "நாம் விருந்துண்ணுமுன் ஒரு சிறு காரியம் நடைபெறவேண்டும். அதாவது, நாம் புதிதாகக் கட்டியிருக்கும் கோயிலுக்கு நாணனும்,இளங்கோதையும் நாமும் போகவேண்டும் அங்குக் கௌணிய முனிவர் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்," என்றாள். அவள் கூறியவாறே செய்யச் சம்மதித்து எல்லோரும் எழுந்து சென்று கோயிலை அடைந்தனர். நெடுமாறனும் அங்குச் சென்றான். பூசை முடிந்ததும் எல்லோருக்கும்

திருநீறு வழங்கப்பட்டது. பின் கௌணிய முனிவர் எல்லோரையும் பார்த்து, "மன்னர்களே, இத்திரு உருவச் சிலை மங்கையர்க்கரசியின் திருஉருவச் சிலையே யாகும். இவள் வெகு காலமாய்க் கைலாயத்தில், பரமசிவனுக்கும், பார்வதிக்கும் தொண்டு புரிந்து வந்தாள். ஒருநாள் பரமசிவனும், பார்வதியும் விடைமேலமர்ந்து பூமியைச் சுற்றிவந்தபோது சிவாலயங்களெல்லாம் இடிந் திருந்தமையைக் கண்ட பார்வதி இறைவனை நோக்கி, 'சுவாமி, செங்கணான் கட்டிய கோயில்கள் அழிகின்றனவே.' என்று வருந்திக் கூறினாள். அதற்கு இறைவன், 'நாம் மங்கையர்க்கரசியை அனுப்புவோம்,' என்றார். இதுவே மங்கையர்க்கரசி தோன்றியதற்குக் காரணம். இப்பொழுது அவள் கைலையில் இறைபணி புரிந்து கொண்டிருக்கிறாள்," என்றார்.

நெடுமாறன் மெய்ம்மறந்து மங்கையர்க்கரசியின் பிரிவாற்றாமையைக் கருதி வருந்தினான்; அங்கிருந்தோர் தேற்ற ஒருவாறு தேறுதலடைந்தான். பின் அங்கிருந்தோர்,

"செங்கணான் வழியிற் றோன்றிச் சீருட னுண்டு வந்த
செங்கதிர்ச் சென்னி வாழி; சிறந்தமா முனிவர் வாழி;
அங்கயற் கண்ணி வாழி; அன்னையா யீண்டுத் தோன்றும்
மங்கையர்க் கரசி வாழி; மாறனும் வாழி—வாழி."

என்று பாடி வலம் வந்தனர். பின் வீடு சென்று அனைவரும் விருந்துண்டனர்.

மறுநாள் இளங்கோதைக்கும், நாணனுக்கும் கலியாணம் வெகு விமரிசையாய் நடந்தது. எல்லோருக்கும் விருந்தளிக்கப்பட்டது. நெடுமாறன் சிலநாள் அங்குத் தங்கியிருந்து பின் எல்லோரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு மதுரைக்குச் சென்றான்.

அத்தியாயம் 17

புலவர் கூட்டம்

மதுரைக்குத் திரும்பிவந்த நெடுமாறன் முசிரி நீலகண்டனாரை அழைத்துப் புலவர்களை எல்லாம் சங்கத்திற் கூடும்படி கட்டளை யிட்டான். அவர் அரசன் கட்டளைப்படி எல்லாப் புலவர்களையும் வர வழைத்தார். நெடுமாறன் அங்குச் சென்று புலவர்களை நோக்கி, "புலவர்களே, நீங்கள் முன்போல் நூற்கள் இயற்றுவதை நிறுத்திவிட்டீர்கள். பல நூல்களை யியற்றிப் பரிசு பெற்ற நீங்கள் ஞானசம்பந்தர் வந்து சென்றபின் ஒரு நூலும் இயற்றாமல் வாளா விருக்கின்றீர்கள். அதன் காரணத்தை நான் அறியக்கூடவில்லை. சங்கம் சீர் குலையாதபடி நடைபெறவேண்டும் என்னும் அவா என் மனத்தைக் கொள்ளைகொண்டிருக்கிறது. சங்கம் செழித்து வளரவேண்டுமானால் உங்கள் சேர்க்கையன்றோ எனக்கு வேண்டும். என்னால் யாது செய்ய இயலும்? மனத்திலுள்ள அபிப்பிராயங்களை அச்ச மின்றிக் கூறுங்கள்," என்றான்.

பழனிமலை முருகனார் என்னும் புலவர் எழுந்து, "அரசே, உணவையும், உடையையும் விரும்பிப் பாக்கள் புனைந்து காலத்தை நாங்கள் வீணே கழித்தோம். அரசர்களைப்பற்றியும், அவர்கள் வீண் செயல்களைப் பற்றியும், கள்ளும், புலாலும் உண்ணும் படை வீரர்களைப் பற்றியும் பாடுதல் முத்தி நெறிக்

குப் பயன்படுமோ?" இனி நாங்கள் பரமனையே பாடுவதெனத் தீர்மானித்து விட்டோம்," என்றார்.

ஆலங்குடிப் பிள்ளையார் என்னும் புலவர் எழுந்து, "அரசே, காலம் மாறிவிட்டது; பாரியும், காரியும், ஓரியும், எயினனும், குமணனும் இருந்த கால மன்று இக்காலம். இந்நாளில் அறத்தைப் புகழ்வோரன்றி மறத்தைப் புகழ்வோரிலர். முக்கண்ணனைப் பாடினாலன்றி எவரும் எம்மைப் பொருட் படுத்தார்," என்றார்.

திருப்பரங்குன்றத்துத் தச்சனார் எனும் புலவர் எழுந்து, "அரசே, இவர்கள் கூறியவாறு நாங்கள் இறைவனைப் பற்றிப் பாடாது போர்க்களங்களையும், வீரர்களையும் புகழ்ந்து பாடுதலால் நாட்டினர் அடையும் நன்மைகள் யாவை? இறைவனைப் பற்றிப் பாடுவோமாயின் அவற்றை நாட்டினர் ஓதி நல முறுவர்," என்றார்.

மதுரையாசிரியர் கலியனார் எனும் புலவர் எழுந்து "அரசே, நாங்கள் இப்பொழுது எத்தனைச் செய்யுட்கள் பாடினும் அவை பண்டைய சங்கப் பாடல்களுக் கொப்பாமோ? திணையும், துறையும் அறிந்தோர் சிலரே. அவ்வாறிருப்ப நாங்கள் பாடும் பாடல்கள் பிறருக் கெவ்வாறு சுவை தரும்?"; என்றார்.

இவற்றை யெல்லாம் கேட்ட நெடுமாறன் அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "புலவர்களே, நீங்கள் கூறுவன சிறப்புடையன வன்று. காலம்

செல்லச் செல்ல வளர்ச்சியை யுடைய மொழியின் தன்மையும் மாறிக்கொண்டே வரும். அப்பரும், சம்பந்தரும், அருள் பெற்று இறைவனைப் பாடினரென்றால், அவர்களைப்போல் ஒவ்வொருவரும் பாட நினைப்பது ஒப்பத் தகுந்ததாமோ? புலவர்கள் மக்களுக்குரிய ஒழுக்கங்களையும், வாழ்க்கை நிலையினையும், பல்வகையால் உணர்த்தும் கடமை உடையாரன்றோ! அரசர்களைப் பற்றியும் வீரர்களைப் பற்றியும், போர்க்களங்களைப் பற்றியும், புகழ்ந்து பாடுதல் பின்னோர்களுக்குப் பெரும் பயன் அளிப்பன வென்பதை நீவிர் அறிவீர். உங்களுக்கு அவ்வாறு பாட மனமில்லையாயின் இறைவனது லீலா விநோதங்களைப் பற்றியும், பல்வேறு தலங்களைப் பற்றியும் எழுதுவது குறைவுடைத்தாமோ? புலவர்களே, தாய் மொழியின் வளர்ச்சிக்கு வேண்டுவனவற்றை நாடிப் புரிதல் நம்முடைய கடமையே யாகும். பரிபாடலில் முருகனைப் பற்றியும், திருமாலைப் பற்றியும், கூறப்படவில்லையோ? திருமுருகாற்றுப்படை முருகன் பெருமையை விதந்தோத வில்லையோ? தேச மக்களுக்கும், தாய் மொழிக்கும், செய்யும் தொண்டே இறைபணி புரிந்ததின் பயனை அளிக்குமென்பதை யாவரும் அறிதல் வேண்டும். வடமொழியிலுள்ள பெருநூல்களைத் தமிழில் பாடிவைத்தல் மக்களுக்கு நன்மையைப் பயப்பதன்றோ? மக்களின் அறிவு வளர-வளர மொழியும் சுவையும் மாறிவருமன்றோ? ஆதலின் நாம் பன்னெறியானும், நூல்கள் யாத்து

இச்சங்கத்தின் வாயிலாக நாட்டிற்கு நன்மை புரிய வேண்டும்,'' என்றான்.

முசிரி ஆசிரியர் நீலகண்டனார் எழுந்து, ''புலவர்களே, சோர்ந்து கிடக்கும் நம்மை ஊக்கி நல்வழிப்படுத்த முயலும் இத்தகைய அரசனைப் பெற்றது நம் புண்ணியமே யாகும். இனி நாம் இறைவனைப் பற்றியும், ஒவ்வோர் இடங்களிலும் நடந்துள்ள தெய்வச் செயல்களைப் பற்றியும், கவிகள் பாடுவோம்; புராணங்கள் இயற்றுவோம். நாட்டில் நிகழும் அதிசயங்களை நாம் எழுதாவிட்டால் நம் பின்னோர் எவ்வாறு அறியக்கூடும்? நாட்டிற்கு நன்மை புரிய வேண்டுமென்றெண்ணுவோமானால், அநேக வழிகள் இருக்கின்றன,'' என்றார்.

ஒரு புலவர் எழுந்து சிவபெருமானைப் பற்றியும் திருமாலைப் பற்றியும், பல கூத்துகள் எழுதுவதாகக் கூறினார். அரசன் அதனைக் கேட்டு மகிழ்ந்து கூத்துக்கள் எழுதப்பெற்றால் அவைகளைப் படிப்பித்து நடித்துக் காட்டிச் சாதாரண ஜனங்களுக்கு நல்வழியைப் போதிக்கலா மென்றான்.

சில வருஷங்களுக்குள் மதுரையி லேற்படுத்தப்பட்ட சங்கத்தின் வாயிலாய்ப் பற்பல நூல்களை எழுதி அச்சங்கப் புலவர்கள் வெளியிட்டனர். அவைகளைப் படித்துணர்ந்து மக்களும் மகிழ்ந்தனர். தமிழன்னை பாண்டிய நாட்டில் சீரும், சிறப்பும் பெற்று மகிழ்ந்தாள்.

அத்தியாயம் 18

செல்வர் அறச்செயல்

நெடுமோறன் ஒருநாள் மதுரையிலிருந்த பல வணிகர்களை அழைப்பித்து, சோமசுந்தரக் கடவுள் ஆலயத்தையும், மீனாக்ஷி அம்மன் ஆலயத்தையும் செப்பனிட்டுப் பல திருவிழாக்களையும் நடத்த எண்ணி அவர்களோடு கலந்து ஆலோசித்தான். இறைவன் கருத்தை முற்றுப்பெறச் செய்தலே தம் முடைய கடமை எனக் கூறி அவர்கள் சென்றனர்.

மதுரையிலே முத்து வியாபாரத்தைச் சீர்பெற நடத்திச் செல்வம் நிறையப்பெற்றவர், முத்துவீரப்ப னூர் என்னும் வணிகர் ஆவர். முன்னாளில் கடற் கொள்ளைக்காரர்கள் அடிக்கடி சூறையிட்டு வந்ததால் முத்து வியாபாரிகள் பெருந் துன்பப்பட்டுக் கொண் டிருந்தனர். நெடுமாறன் புலியூர், செந்நிலம் முத லியவிடங்களில் சேரர் படைகளைத் துரத்தி யடித்த பின்பு கடற்கரையின் மேற்பாகத்திலிருந்த விழிஞம் என்னும் துறைமுகப்பட்டினத்தையும் தாக்கி அதனை யும் கைப்பற்றிக் கொண்டான். கிழக்கே கொற்கை தொண்டி, முத்துப்பேட்டை முதலிய துறைமுகங் களிலும் படைக்கலங்களை நிறுத்தி நெடுமாறன் கடற் கொள்ளைக்காரர்களின் வலியை யடக்கினன். அது முதல், பாண்டிய நாட்டில் முத்து வியாபாரம் பெருக லாயிற்று. அவ்வியாபாரத்தால் பலர் அளவிலாச் செல்வத்தை அடைந்தனர். அவர்களுள் நிறைந்த

செல்வத்தைப் பெற்றிருந்தவர் இரகுநாதர் என்பவ ராவர். அவர் பெயரால் முத்து ரகுநாத பட்டினம் என்னும் ஊர் இன்றும் நின்று நிலவுகின்றது. அந்த இரகுநாதருக்கு ஒரு புதல்வியுண்டு. அப்பெண்ணை முத்துவீரப்பனர் மணந்து கொண்டார். அதனல், ரகுநாதர் செல்வமும் அவருக்குக் கிடைத்தது. முத்துவீரப்பனருக்கு வயது முப்பத்தேழாகியும் புத்திரப் பேறின்மையால் அவர் தானதருமங்கள் செய்தும், புண்ணிய தலங்களுக்குச் சென்றும், புண்ணிய நதியில் நீராடியும் கடவுளை வணங்கியும் புத்திரப் பேற்றை அடைய விரும்பினர். அந்நிலையிலுள்ள வரை, ஆலயங் கட்டவேண்டுமென அரசன் வேண்டியது அவருக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தந்தது.

மதுரையில் குதிரை வியாபாரத்தில் சிறப்புற்று விளங்கித் திரண்ட பொருளைச் சேகரித்துக் கொண்டவன் வங்கன் என்னும் வணிகனுவன். அவனும் நெடுமாறன் வேண்டுகோளுக் கிணங்கினன். அவனை வயிற்றுவலி யெனும் நோய் வருத்தி வந்தது. அவன் தினந்தோறும், அப்பர் பாடல்களைப் பாராயணம் பண்ணி வந்தான். தனக்கு வயிற்றுவலி நீங்கி விடுமென்று நினைத்தே அவனும் அரசன் வேண்டுகோளுக் கிணங்கினன்.

வேளாண்மைத் தொழிலில் சிறப்புற்று விளங்கிச் செல்வம் படைத்த பெரியார் கழுகுமலைக் கந்தனர் என்பவர் ஆவர். அவரும் அரசன் வேண்டுகோளுக் கிணங்கினர். இவர்கள் அனைவரும் சேர்ந்து தணிகர்

கூட்டமொன்றைக் கூட்டவேண்டு மென்று தீர்மானித்தனர். அக்கூட்டம் கந்தனுர் வீட்டுக் கலியாணத்தில் நடைபெறுமென்று எல்லோர்க்கும் தெரிவித்தனர்.

சில மாதங்கள் கடந்தன. கந்தனுர் வீட்டுக் கலியாணமும் வந்தது. ஒருநாள் செல்வர்கள் அனைவரும் முன் தீர்மானித்தபடி வந்து குழுமி உல்லாசமாகப் பேசிக்கொண் டிருந்தனர். அப்பொழுது கந்தனுர் எழுந்து "செல்வர்களே, நாட்டின் நன்மையைக் கருதி நெடுமாறன் பல நன்மைகளைச் செய்திருக்கின்றுன். சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்தைச் சீர்பெறக் கட்டுவிக்க வேண்டுமென்றும், திருவிழாக்கள் பல நடத்தவேண்டு மென்றும், அரசன் எண்ணியுள்ளான். அதனை யெம்மிடத்தும் வெளியிட்டனன். இவ்விரு காரியங்களுக்கும் நாம் முயன்று உதவி புரிவோமாயின் நாம நாட்டிற்கு நன்மை புரிந்தவர்கள் ஆவோம்," என்று கூறினுர்.

அவர் வார்த்தைகளைக் கேட்ட செல்வர்கள் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டனர். அவர்கள் தத்தம் பெயரால், ஆயிரக்கணக்கான வராகன்களைக் கொடுத்துதவினர். கணக்கிட முடியாத பணம் சேர்ந்து விட்டது. மறுநாள் அனைவரும் அத்திரவியத்தை யெடுத்துக்கொண்டு அரசனிடம் செல்வதாக நிச்சயித்தனர்.

நெடுமாறன் கொலுவிருக்கும் சமயத்தில் ஒரு சேவகன் ஓடோடி வந்து அரசனைப் பணிந்து, "மன்

னவ, நின்னைக் காணுமாறு மதுரை நகரத்துச் செல்வர் பலர் வாயிலின்மாடே வந்துள்ளனர்,'' என்ருன். அரசன் அவர்களை உள்ளே விடுமாறு பணித்தான். சேவகன் ஓடோடிச்சென்று செல்வர்களை உள்ளே செல்லுமாறு வேண்டிக்கொண்டான். அவர்களும் உட்புகுந்து மன்னனை வணங்கித், தத்தம் ஆசனத்திலமர்ந்தனர்.

கந்தனுர் செல்வர்கள் கொடுத்த எல்லாத் திரவியத்தையும் அரசன்முன் வைத்தனர். அரசன் அவைகளைக் கண்டு மகிழ்ந்து அத்திருப்பணியைச் செய்யும் கடமையையும், அச்செல்வத்தை வைத்துக்கொள்ளும் உரிமையையும் கந்தனுருக்கே அளித்தான். அரசன் அவர்களை மறுநாள் வரும்படி வேண்டிக்கொண்டு ஒவ்வொருவருக்கும் சிறப்புக்கள் செய்து அனுப்பினுன்.

மறுநாள் செல்வர்களும், மந்திரி முதலாயினேரும் அரச சபையில் கூடியிருந்தனர். அப்பொழுது நெடுமாறன் அங்குவர எல்லோரும் எழுந்து பணிந்தனர். அரசனும் அவர்களை அமரச்செய்து தானும் ஆசனத்தில் அமர்ந்தான். பின்னர், யாவரும் வியக்கும்படி கோச்சடையனை அங்கு வரவழைத்துச் சிங்காதனத்தில் அமரச்செய்து முடியையும் சூட்டினன். பின் செல்வர்களை நோக்கி, ''செல்வர்களே, இனி உங்களை என் மகன் கோச்சடையன் ஆள்வான்; நீங்கள் என்னிடத்தில் அன்புகாட்டி வந்ததுபோல் அவனிடமும் அன்பு காட்டி வருவீர்களாக. நான், வயது

முதிர்ந்தவனுயினபடியாலும், பிறவிப் பிணியை ஒழித்துக்கொள்ள வேண்டுமென்னும் பெருவிருப்பாலும், அரசியலை ஒழித்துக் கானகம் செல்கின்றேன். என் பொருட்டு ஒருவரும் வருந்தாதீர்கள்,' என்று கூறி விரைவில் அவ்விடம் விட்டகன்றான். செல்வர்களும், அரசிளங் குமரனும் நெடுமாறனது பிரிவாற்றுமைக்கு வருந்தினுர்களே யாயினும், தாமொன்றும் செய்ய வியலாதாராய்த் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

* * * * *

நெடுமாறன் முனிவன் வேடம் தரித்து வளவன் துர்க்கத்தை யடைந்தான். அங்கு அவன் கௌணிய முனிவரோடும், குலச்சிறையோடும் இருந்து தவம் பல புரிந்து வந்தான். அவர்களைப்பற்றிப் பிறகு அம்மலை நாட்டுக் குறுநில மன்னர்களாலும், பிறராலும் அறிய முடியவில்லை.

* * * * *

மதுரையில் செல்வர்களின் தலைவரான கந்தனுர் மற்றையார்களின் உதவியைக் கொண்டு ஆலயத்தை மிக்க அழகாகக் கட்டி முடித்தார். அவ்வாலயத்தின் முதல் சுற்றுப் புறத்தில் குலச்சிறைக்கும், மங்கையர்க்கரசிக்கும், நெடுமாறனுக்கும் சிலைகளமைப்பித்துக் கோயில் கட்டி அதில் எப்பொழுதும் விளக்கேற்றி வைத்தனர். திருவிழாக்களும் செம்மையாக நடைபெற்று வந்தன. நெடுமாறனைக்

குறித்து ஆண்டுதோறும் ஒரு திருவிழா நடந்து வந்தது. பாண்டிய நாட்டார் ஒவ்வொரு திருவிழாவிலும் நெடுமாறனே நேரில் ஓர் ஆண்டியைப் போல் வருவதுண்டென்று நம்பி இருந்ததால் அக்காலங்களில் சிவனடியார்களுக்குச் செய்யும் தான தருமங்களை ஒரு குறைவுமின்றிச் சிறப்புற நடத்தி வந்தனர்.

* * * * *

KESARI PRINTING WORKS, MADRAS.